Registered No. M. 1514



எங்கள் மருந்துச்சாலை கடந்த 25 வருடகாலமாய் உள்ளூரிலும், வெளியூரிலும அநேக வைத்தியர்களும் நோயாளிகளுக்கும் மருந்துகள் செய்து அனுப்பி அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று வருகிறது. அநேக நண்பர்கள் இவ்வளவு சிறந்த மருந்துகள் வெளியூர்களிலுள்ள நண்பர்களுக்குப் பயனளிக்காமல் போய்விடுகிறதென்பதை உணர்ந்து வற்புறுத்திச் சொன்னதின்மேல்விளம்பரம் செய்யமுன்வந்துளோம். நண்பர்கள் பலரும் எங்களுடைய மருந்துகளை யாதொரு பயமுமில்லாமல் வாங்கியுண்டு நலனமைந்து எங்களை மேன்மேலும் ஊக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

முதலாவதாக நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் திடகாத்திர முள்ளவர்களாக விளங்க வேண்டுவது அவசியம். தற்கால இளைஞர்கள் பாலிய சேஷ்டையாலும் மிதமிஞ்சிய போகத்தாலும் உடல் நலன் கெட்டுச் செல்லரித்த மூங்கில்போல் மேலே பளிதாரகவும் உள்ளே ஆண்மை இழந்த நிர்ப்பாக்கிய நிலைமையிலும் இருக்கிறார்கள்; இவர்களுக்கும், ஜுரம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டு ரத்தம் கெட்டுப் பலம் குன்றி இருப்பவர்களும், சாதாரணமாய் பல முள்ளவர்களாய், வீரிய முள்ளவர்களாய் இருக்க விரும்பும் ஒவ்வொரு ஆண் பெண் இருபாலர்க்கும், உலகவாழ்க்கையின் இன்பத்துக்கும், ஆண் சிங்கம் போன்ற பலம் தருவதற்கும்,

## நாராயண சஞ்சீவி லேகியமும் அயத்தங்கச்செந்தூரமும்

மிக்கச் சிறந்தவை என்று உறுதி கூறுகிறோம்.

இந்த லேகியம் செந்தூரம் சித்த வைத்திய முறைப்படி மிக ஜாக்கிரதையாயும் முறைதவறாமலும் செய்து முடிக்கப்பட்டது. வைத்திய முறைப்படி இதைக்காட்டிலும் சிறந்த பலம் தரும் மருந்து வேறென்றில்லை.

### இந்த லேகிய செந்தூரங்களால் தீரும் முக்கிய வியாதிகள்.

தற்காலம் மானிடவர்க்கத்தை நிழல்போல் தொடர்ந்து அரிக்கும் 20 வகை மேகரோகங்கள், குன்மம், பித்த பாண்டு, சூலை, ஒடு வாய்வு, கை கால் முடக்கு, நெஞ்சு தொண்டை எரிச்சல், பித்த எப்பம், அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசியின்மை, சோம்பல், நித்திரை வாராமை, நீர் இறங்கும்போது பொறுக்க முடியாத பாதையைத் தரும் தந்திமேகம், தாது நஷ்டம், தேக உளைச்சல், கண்களில் நீர் வடிதல் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். பயங்கரமான மேகவியாதிகளைப் போக்கி தேகத்தைப் புஷ்டியாக்கிச் சப்த நரம்புகளும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியை உண்டாக்கும்.

மனக் கவலையினாலாவது துர் அப்பியாசத்தாலாவது அடிக்கடிவரும் நோயினாலாவது மற்றெந்தக் காரணத்திலாவது பலம் கெட்டவர்கள் நமது லேகிய செந்தூரங்களைச் சாப்பிடுவார்களானால் அழகு தேகாரோக்கியம், தேக வலிவு முதலியவற்றைக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யும். நோயுள்ளவர்கள் தான் இவற்றைச் சாப்பிடவேண்டுமென்பதில்லை. நோயிலாதவர்களும் இவற்றை ஆரோக்கியத்திற்காகச் சாப்பிடலாம். இதற்கு பத்தியமே கிடையாது. காலதேச வர்த்தமானமில்லாமல் எல்லா காலங்களிலும் சாப்பிடலாம். பசிஅதிகமாய் எடுக்குமாகையால் ஜீரணிக்கக்கூடியதும் கொழுமையுள்ளதுமான ஆகாரங்களை வேளை தவறாமல் சாப்பிடவேண்டும். இச்சிறந்த லேகிய செந்தூரங்களை கைடெரக்ஷனில் சொல்லியபடி 48 நாள் சாப்பிடுவார்களானால் அவை தேகத்தில் ஊறி மேகங்களை நெருப்புப்பொறி பட்ட பஞ்சுப் பொதியென நாசம் செய்து, புதிய ரத்தத்தை உற்பத்தி செய்து தேகத்தை இளைக்காமலிருக்கச் செய்யும். இவற்றை ஒற்றுமையாய் மனைவியும், கணவனும் ஏககாலத்தில் சாப்பிட்டால் அவர்களுக்கு உற்பத்தியாகும் குழந்தைகள் மிக அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் ஒரு புட்டி செந்தூரமும் ரூ. 2-4-0 தபால்செலவு அணா. 48-நாள் மருந்து தபால் சார்ஜ் உள்பட ரூ. 4-12-0,

பினங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலியவெளிநாடுகளுக்கு24-நாள் மருந்து தபால்சார்ஜ் உள்பட ரூ. 3-8-0. 48-நாள்மருந்து ரூ.6-4-0. வெளிநாட்டு அன்பர்கள் பூராவும் முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

நாராயண சஞ்சீவித்தைலம்:—பச்சிலை, மூலிகைகளாலும் பசும்பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டது. தேகவரட்சியைப் போக்கி மூளையைக் குளிரச்செய்து புத்தி கூர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25 வருடகாலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள் வாடிக்கையாய் வாங்கி ஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5 பல டின் 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நாராயண நீராட்சைபழ லேகியம்:—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நமது நாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதைச் சரியாய் கவனிக்காமையினால் அநேகவித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கொட்டைக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்துக் கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாய் இருக்கும். டப்பி 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகைக்கு V. P. அனுப்பமுடியாது.

(7) ஸ்ரீ நாராயண மெடிகல் ஹால், காஞ்சீபுரம்.



## உள்ளடக்கம்.


| | |
|---|---|
| கடவுள் வணக்கம்:—செங்குந்த குலதிலதிலகர்களாகிய இரட்டையர் பாடிய அம்மானை. | 306 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை | 307 |
| செங்குந்தர் அபிவிருத்திச் சங்கம், வீரவநல்லூர் | 308 |
| இளைஞர் பக்கம்:—சென்னை சர்வ கலாசாலை, பட்டமளிப்பு விழாவின்போது பட்டதாரிகளுக்கு (21-8-30) டாக்டர் சுப்பராயன் செய்த பேருரையின் சுருக்கம் | 309 |
| அறிவியல் பகுதி:—கற்கள் | 313 |
| வானநூலும் இந்தியப் பஞ்சாங்கமும் | 316 |
| புது உலகமும் பழைய உலகமும்:—யந்திர நாகரிகத்தின் பயன் | 318 |
| ஆராய்ச்சிப் பகுதி:—நமது புராதன வழக்க ஒழுக்கங்களின் ஆராய்ச்சி | 320 |
| மாதர் பகுதி:—பாலர் பாதுகாப்பு, மக்கள் கேட்டிற்கு மாதா பிதாக்களே காரணம் | 323 |
| நாவல் பகுதி:—சிந்தாமணி யெழுதிய சித்திரம் | 325 |
| சுகாதாரப் பகுதி:—குடியால் விளையும் கேடுகள் | 330 |
| கேழ்வரகு | 333 |
| பயிர்களைப் பாதுகாத்தல் | 335 |
| தேர்தல் வெற்றி | ,, |
| செங்குந்த யாத்திரைவாசி | 336 |
| நிரூபங்கள் | 339 |
| செங்குந்தர் கிளர்ச்சி | 341 |
| பஞ்சாங்கம் | 344 |


## இலங்கை
## "இளைஞர் கலாவிருத்திச் சங்கம்"
நல்லூர், யாழ்ப்பாணம்

வருடாந்தக் கூட்டம்

இளைஞர் கலாவிருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நிகழும் பிரமோதூதஷு வைகாசிமூ 32உ (14-6-30) சனிவாரம் 7-மணியளவிற் கூடியது. அங்குக் குழுமியிருந்த சபையோர் ஏகமனதாகத் திரு. ச. சாரங்கபாணி முதலியாரை அக்கிராசனம் வகிக்கும் வண்ணம் வேண்டிக்கொண்டனர். அன்னார் அவர்களது வேண்டுகோளுக்கிசைந்து அக்கிராசனம் வகித்தார்.

அதன் பின்னர் அச்சபையின்கண் உள்ளவர்களிலிருந்தே திரு. ச. தில்லையம்பல முதலியார் (Retd. Asst. Station Master of Kola Lumpur,) திரு வீ. செல்லையா முதலியார் (உபாத்தியாயர்), திரு. பி. க. கணேச முதலியார் (மணிமந்திர சோதிட உபாத்தியாயரும், சடாட்சர அச்சுயந்திரசாலை அதிபரும்) ஆகிய மூவரும் அன்றையதினம் நடக்கவிருந்த "சாதுரியனுக்கணியான விவாத" (Oratorical Contest) த்திற்கு நியாயாதிபதிகளாக (Judges)க்காரியதரிசியால் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பிற்பாடு திரு. சி. இராஜதுரை முதலியார் அவர்களின் தேவாரத்தின் பிறகு கூட்டம் தொடங்கியது. அடுத்தாற்போல் காரியதரிசியால் சங்கத்தின் வருஷ அறிக்கை வாசிக்கப்பெற்றது.

மூன்றாவது விஷயமாக மத்திய இளைஞர்களாகிய திருவாளர்கள் சி. இராசதுரை முதலியார், வே. சின்னதுரை முதலியார், சு. கந்தையா முதலியார் முதலியவர்களால் செந்தமிழ் விஷயங்களில் ஒரு விவாதமும், சிறு இளைஞர்களாகிய திருவாளர்கள் சி. செல்லப்பா முதலியார், க. தேவயானகிரீட முதலியார், ச. செல்லப்பா முதலியார், சி. கனகரத்தின முதலியார், ச. செல்வநாயக முதலியார், வே. செல்லையா முதலியார்வர்களால் ஆங்கிலப் பக்கங்களில் ஒரு விவாதமும் நடைபெற்றது. இவ்விவாதங்களில் தமிழில் திரு. சி. இராசதுரை முதலியாரும், ஆங்கிலத்தில் திரு. சி. கனகரத்தின முதலியாரும் வெற்றியடைந்தனர். நாலாவது திரு. வீ. செல்லையா உபாத்தியாயர் "இளைஞர் கலாவிருத்திச் சங்கமும் அதன் நோக்கமும்" என்ற தலையங்கத்தின் கீழ் ஒரு சிறந்த உபன்னியாசம் செய்தார்.

பின்பு காரியதரிசியின் வேண்டுகோளால் திரு. தில்லையம்பல முதலியார் அன்று பிற்பகல் நடந்த பந்தைய விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களுக்கும், ஷை விவாதத்தில் வெற்றி பெற்றவர்களுக்கும் உபகாரம் அளிக்க முன் வந்தார். பிள்ளைகள் தங்கள் தங்கள் உபகாரத்தைப் பெற்றதும் அவரை உபசரித்துத் தம்மிடம் சென்றார்கள்.

அதன்பின் அக்கிராசனர் குறிப்புரைக்கு நேரங்கொடுத்ததும், திரு. தில்லையம்பல முதலியார் திரு. கணேசமுதலியார் உபசாரங் கூறினார்கள். பிற்பாடு சங்கக் காரியதரிசி சபையிலிருந்த பெரியோர்களாகிய சங்க முன்னேற்றத்தை விரும்பியவர்களுக்கும், உபன்னியாசகர்களுக்கும், அக்கிராசனம் வகித்தவருக்கும் உபகார மளித்தவருக்கும், இளைஞர்கலாவிருத்திச் சங்கத்தின் பேரால் நன்றியுரை கூறினார். பின்பு தேவார பாராயணத்துடனும், "இளைஞர் கலாவிருத்திச் சங்கத்திற்குச் ஜே! ஜே! ஜே!" என்ற கோஷத்துடனும் கூட்டம் இனிது முடிந்தது. பிற்பாடு சிற்றுண்டி முதலியன அளிக்கப்பட்டன.

வி. சீ. செல்வதுரை முதலியார்,
ஷை சங்கக் காரியதரிசி.

## செங்குந்த குலதிலகர்களாகிய இரட்டையர் பாடிய அம்மானை

[திரு. R. V. கருப்பண்ண முதலியார் அனுப்பியவை]

(தொகுதி 4, பகுதி 8. 274-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னுபுகழ் படைத்த திருமுட்டத் தெம்பெரு
[மான்
உள்ள நிலமெல்லா முழுதுண்டா ரம்மானை
உள்ள நிலமெல்லா முழுதுண்டா ராமாயின்
கள்ள னிவனென்று சொல்லிக் கட்டுவதே னம்
[மானை
கட்டாரோ போரிற் கதிர்மரைத்தா லம்மானை.

அடுத்த திருக்காவிரி சூழணியரங்க ரெப்போதும்
எடுத்ததிருக் கோயிலைவிட் டெழுந்திரா ரம்மானை
எடுத்ததிருக் கோயிலைவிட் டெழுந்திரா ராமாயின்
படுக்கையிலே விடந்தீண்டிப் பட்டனரோ வம்
[மானை
பட்டன ரென்றல்லோ பருந்தெடுத்த தம்மானை.

மட்டேற்ற சோலை மதுராபுரிச் சொக்கர்
பிட்டுக்கு மண்சுமந்த பித்தர்கா ணம்மானை
பிட்டுக்கு மண்சுமந்த பித்தரே யாமாயின்
ஒட்டத் தொழிலவருக் குள்ளதோ வம்மானை
உள்ளன் பிலாதவருக் கொட்டார்கா ணம்மானை.

நீண்மதில்சூ ழாயல்வளர் நீலகண் டேசரனூர்
சேணுயர்ந்த கீர்த்தித் தியாகர்கா ணம்மானை
சேணுயர்ந்த கீர்த்தித் தியாகரே யாமாயின்
காணக் கொடைக் கொடிதான் கட்டினரோ வம்
[மானை
கையாற் கொன்னக் கொடியைக் கட்டினர்கா
[ணம்மானை.

அம்புவிசூ ரென்று மணிகொள் சிதம்பரத்தே
வெம்புலியொன் றெக்காளு மேவுங்கா ணம்மானை
வெம்புலியொன் றெக்காளு மேவுமே யாமாயின்
அம்பலத்தைத் தான்விட் டகலாதோ வம்மானை
ஆட்டைவிட்டு வேங்கை யகலுமோ வம்மானை.

புட்படியு நாரணன்போற் பூவை வெங்கடாசலவேள்
மட்படியில் வாழும் வயித்தியன்கா ணம்மானை
மட்படியில் வாழும் வயித்தியன்கா ணுமாயின்
கட்படுகோர் நோய்தீரக் காண்பானோ வம்மானை
காண்பா னிவனுங் கடைமருந்தா லம்மானை.

செல்லார் வலஞ்சுழியிற் செங்கழுநீர்ப் பிள்ளையார்
எல்லார்க்கு நல்லவர மீவர்கா ணம்மானை
எவ்லார்க்கு நல்லவர மீவரே யாமாயின்
தொல்லுலகி லுள்ளோர் துதியாரோ வம்மானை
துதிக்கை யவர்தமக்குச் சொந்தமன்றோ வம்மானை.

தேங்கு புகழ்த் தென்மயிலைச் சிங்கார வேண்
[முருகர்
வேங்கை வனத்திலன்று வேட்டைவந்தா ரம்மானை
வேங்கை வனத்திலன்று வேட்டைவந்தா ராமா
[யின்
பாங்காகவே முயன்மான் பற்றினரோ வம்மானை
பற்றினரோர் மான்கன்றைப் பாரறிய வம்மானை.

வடவாறு சூழவரும் வாழ்மயிலின் வாகனனூர்
விடமானெலும்பு கொண்ட வேடன் மகளம்மானை
விடமானெலும்பு கொண்ட வேடன் மகளுமாயின்
அடைவான வள்ளி யறியானோ வம்மானை
அம்மான் மகளறிந்தா லச்சமுண்டோ வம்மானை.

திருச்சிராப் பள்ளியரன் செட்டிமகட் காவேடம்
தரிச்சு மருத்துவஞ் செய்தாயானு ரம்மானை
தரிச்சு மருத்துவஞ் செய்தாயானு ராமாயின்
மருத்தெண்ணெய்ச் சிக்கின்மணமிலையே யம்மானை
மட்டுவார் குழலிருந்தான் மணமரிதோ வம்மானை

(தொடரும்)

---

தொகுதி 4 பகுதி 8 ல் அம்மானையில் 14-வது வரியில் (சாரும் புடவை) என்பதற்கு (காரும் புடவை) என்றும், 17 & 18-வரியில் (சிலையானை) என்பதற்கு (சிறு யானை) யென்றும் தவறுதலாய் அச்சிடப்பட் டிருப்பதைத் திருத்தி வாசிக்குமாறு வேண்டுகிறோம்.

---


# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி—ச] பிரமோதூத வருஷம் புரட்டாசி மாதம் [பகுதி—கூ


## பத்திரிகாசிரியர் முன்னுரை

### நம்மவர் இரண்டாவது மகாநாடு

குல முன்னேற்ற வேட்கையோடு வெகு ஆவலாக எதிர்பார்த் திருப்போருக்குக் காஞ்சிபுரத்தில் கூடவிருக்கும் நம்மவர் இரண்டாவது மகாநாடு சீக்கிரமாகக் கூடவில்லை என்னும் விஷயமாகக் குறையிருப்பதாகத் தெரியவருகிறது. மகாநாடு கூடாதிருப்பதற்குக் காஞ்சி வாசிகளின் அசிரத்தையோ, செங்கல்பட்டுஜில்லா வாசிகளின் அசிரத்தையோ, தலைச்சங்கத்தின் அசிரத்தையோ காரணமாயிருக்கலாமெனச் சிலர் நினைக்கலாம். எவருடைய அசிரத்தையும் அதற்குக் காரணமல்ல வென்பதை அன்பர்கள் உணர வேண்டுகிறோம். நாட்டின் குழப்பமான அரசியல் நிலையும் மிகவும் ஏழ்மையான பொருளாதார நிலையுமே இத்தாமதத்துக்குக் காரணமென்பதை ஈண்டு வற்புறுத்துகின்றோம். செங்கல்பட்டு ஜில்லா மிக்க ஏழ்மையான ஜில்லா. மேலும், சிங்கப்பூர், கோலாலம்பூர், இலங்கை வாசிகளை நம்பியே செங்கல்பட்டு ஜில்லாவில் வதியும் நம்மவருள் பெரும்பாலோர் கைகி நெசவில் கண்ணுங் கருத்துமா யிருந்துவந்தனர். ஆனால் ரப்பர் விலையிறக்கத்தினால் தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டில் கைலி வியாபாரம் மிகவும் நசித்திருக்கிறது. இதனால் சில குடும்பங்கள் பட்டினி கிடக்கவும் நேரிட்டிருக்கிறது. இந்நிலையில் மகாநாடு கூட்டுவதற்கு ஆயிரக் கணக்கான பொருளை ஏழை மக்களிடமிருந்து வரிகள் மூலம் வசூலிக்க ஏற்பாடு செய்வது அவ்வளவு நியாயமாகத் தோன்றவில்லை. நம்மவர்களின் பொருளாதார நிலை சிறிது சீர்பெற்றவுடன் மகாநாட்டினைக் கூட்ட வேண்டிய முயற்சிகள் தீவிரமாகச் செய்யப்படும். அடுத்த தைமாதம் நம்மவர் இரண்டாவது மகாநாடு காஞ்சிபுரத்தில் கூடலாமென எதிர்பார்க்கிறோம். (ம. ச.)

---

### தலைச்சங்கத்துக்குத் திருமண நன்கொடை

1. புவனகிரி திரு ஆ. ம. குமாரசாமி முதலியார் குமாரர் திரு. இராமசாமி முதலியார் திருமண நன்கொடை ரூ 1—0—0
2. சிதம்பரம் முனிசிபல் கௌன்சிலர் திரு. V. K. வேலாயுத முதலியார் திருமகளின் திருமண நன்கொடை ரூ 1—8—0
3. குடவாசல் திரு. சி. க. நடேச முதலியார் திருமண நன்கொடை ரூ 0—8—0
4. குடவாசல் திரு. சா. ந சொக்கலிங்க முதலியார் திருமண நன்கொடை ரூ 1—0—0
5. மூலத்துறை திரு. E. V. துரைசாமி முதலியார் மூலம் வசூலான திருமண நன்கொடைகளின் மொத்தம் ரூ 2—4—0
6. மஞ்சட்கொல்லை திரு. தி. ச. ராம. இராமசாமி முதலியார் அவர்கள் சஷ்டி பூர்த்தி திருமண நன்கொடை ரூ 2—0—0

### உண்டியில் வசூல்

7. மதராஸ் பாளையகாட் கம்பெனி மூலம் பங்குனி, சித்திரை வைகாசி, ஆனி, ஆடி மாதங்களுக்கு ரூ 453—8—0
8. காஞ்சிபுரம் பாளையகாட் கம்பெனி மூலம் ஆனிவரை ரூ 298—3—9

### உபகாரச்சம்பள நன்கொடை

9. திரு.புதுவை ஆ. வே. முத்தைய்ய முதலியார் 5—0—0
10. திரு. மூலத்துறை E. V. துரைசாமி முதலியார் 12—0—0
11. சைதாப்பேட்டை M. V. சொக்கலிங்க முதலியார் 10—0—0

## செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், வீரவநல்லூர்.

வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் 13-வது ஆண்டு நிறைவு விழா 10-8-1930 திருநெல்வேலி வக்கீல் ஸ்ரீமான் எஸ். பழனியாண்டி முதலியார் பி. ஏ., அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகவும் விமரிசையாகவும் நடந்தேறியது. விழா ஆரம்பமாகும் நேரத்திற்கு முன்னரே திருநெல்வேலி ஜில்லாவின் பல பாகங்களிலுமிருந்து பிரதிநிதிகளும் மற்றவர்களும் சங்க ஹாலிலும் வராண்டாவிலும் குழுமி இருந்தனர். தலைவரவர்கள் தமதாசனத்தில் அமர்ந்தவுடன் வீரவநல்லூர் அம்பாசமுத்திரம் தேவார கோஷ்டிகள் இனிமையாகத் தேவாரம் பாடிய பின்னர், சங்கக் காரியதரிசியால் வருஷாந்தர அறிக்கை வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர் தலைவர் மிகுந்த கரகோஷத்தினிடையே எழுந்து 'நம்மவர்களின் இப்போதைய நிலைமை'யைப் பற்றியும், இனி நாம் முன்னேறுவதற்குச் செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றியும் மிகவும் தெளிவாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் ஸ்ரீமான்கள் ஆவுடையப்ப முதலியார், அகஸ்திய முதலியார். வெங்கட கிருஷ்ண ஆழ்வார் ஆகிய மூவரும் 'பக்தி' 'ஊக்கம்', 'இராமர்' என்பவைகளைப் பற்றிப் பேசினார்கள். திருநெல்வேலி வக்கீல் ஸ்ரீமான் V. S சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A, B. L., 'சமுதாய முன்னேற்ற'த்தைப் பற்றிப் பேசினார்கள். சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. புது வருஷத்து உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலைத்திட்டமும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின் தலைவரவர்களுக்கு வந்தனோபசாரம் கூறி, பூமாலை சூட்டிச் சந்தன தாம்பூலத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

1931-31-வருஷத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள்.—

V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A., B. L., தலைவர்.
க. ஆ. சிதம்பர முதலியார் அவர்கள், உபதலைவர்.
சி. ப. ஆறுமுக முதலியார் அவர்கள்,
சு. ஆவுடைநாயக முதலியார் அவர்கள்,
மு. சி. நம்பி முதலியார் அவர்கள், காரியதரிசிகள்.
மா. சங்கரலிங்க முதலியார் அவர்கள், பொக்கிஷதார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தென்னிந்திய செங்குந்த மக்களுக்குத் திலகமாக விளங்கிய திருச்செங்கோடு டி, ஆர். கந்தப்ப முதலியார் அவர்கள் அகால மரணத்தைக் கேட்டு இக்கூட்டம் மிகவும் வருத்தப்படுகிறது. இந்தத் தீர்மானத்தை முதலியார்கள் குடும்பத்திற்கு தெரிவிக்கும்படி பிரிஸிடெண்டு அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

2. காஞ்சீபுரத்தில் கடந்த தை மாதம் கூட்ட வேண்டிய தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகா நாட்டை இதுகாறும் கூட்டாத அசிரத்தையைப்பற்றி வருந்துவதுடன் இன்னும் கால தாமதம் செய்யாமல் சீக்கிரம் கூட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தலைச்சங்கத்தார் செய்யும்படி இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

3. கவர்ன்மெண்டு உத்தியோகங்களில் நம்மரபினர் மிகவும் சொற்பத் தொகையினரே இருப்பதால், பொதுவாக கவர்ன்மெண்டு உத்தியோகங்களிலும், விசேடமாக நீதி இலாகாவிலும் நம்மரபினரைத் தேர்ந்தெடுக்கும்படி சென்னை கவர்ன்மெண்டாரை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது. இத்தீர்மானத்தை கனம் லாமெம்பர் அவர்களுக்குத் தெரிவிக்கும்படி பிரசிடெண்டு அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

4. நம்மரபினர்கள் முக்கியமாகக் கதர் உடையையே அணியவேண்டு மென்றும் அது இயலவில்லை யானால் நம்மரபினரால் செய்யப்பட்ட துணிகள் அல்லது இந்திய மில் துணிகளையே அணிய வேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

5. நம்மரபினர்கள் மதுமாமிச முதலிய இழிவான சாமான்களுடன் சில்லரைத் தேவதைகளை வணங்கிக் கொடைசெய்வதை மிகவும் அழுத்தமாய்க் கண்டிப்பதோடு தெய்வத்தின் பெயரால் அனாவசியமான செலவுகளையும் மிருகங்களைப் பலி செய்வதையும் நிறுத்த வேண்டுமென்று இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறது.

6. நம்மரபினர்களுக்குள் குற்றம் கண்டு பிடித்தோ அல்லது அபிப்பிராய பேதத்தாலோ நம்மவர்கள் கூடும் ஊர்க் கூட்டங்களில் தீத் தண்ணீர் விலக்கி நிர்ப்பந்தப் படுத்தியோ ஏராளமான தொகையை அபராதம் விதித்தோ இம்சை செய்வதை இக்கூட்டம் கண்டிக்கிறது.

7. நம்மரபினர் தமது ஆண்மக்களைக் குறைந்த பக்ஷம் 12 வயதுவரையிலும், பெண்மக்களை 10வயது வரையிலும், கட்டாயமாகக் கல்வி பயிற்றுவிக்க வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

8. நம்மரபினர்கள் எக்காரணம் பற்றியும் கோர்ட்டுக்குப் போகாமல் நம்மவர்களால் நியமிக்கப்பட்ட பஞ்சாயத்தார்களின் உதவியால் பணச் செலவில்லாமல் தங்கள் வழக்குக்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

9. நமது பரம்பரைத் தொழிலாகிய நெசவுத்தொழிலை மகாத்மா காந்தியினுடைய இயக்கத்தினால் இப்போது எல்லா ஜாதியாரும் கைக்கொண்டு விட்டபடியால் நாம் இனி நமது மக்களுக்குத் தையல், பாத்திரம் செய்தல், தச்சுவேலை முதலிய கைத்தொழில்களைக் கற்பிக்கவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

10. பல வகுப்புக்களாகப் பிளவுபட்டு நிற்கும் நம்மரபினர்கள் யாவரும் ஒற்றுமையாவதற்கு ஒரேவழியான கல்யாண சம்பந்தங்களைச் சீக்கிரத்தில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டு மென்று இக் கூட்டம் அபிப்பிராயப் படுகிறது.

சி. ப. ஆறுமுக முதலியார், காரியதரிசி






## சென்னை சர்வ கலாசாலை

### பட்டமளிப்பு விழாவின்போது பட்டதாரிகளுக்கு (21-8-30) டாக்டர் சுப்பராயன் செய்த பேருரையின் சுருக்கம்.

#### கல்வியின் உபயோகம்

எனது பிரசங்கமானது, உங்களுக்கு வழங்கப்படும் பட்டங்களால் நீங்கள் அடையும் அந்தஸ்துக்குத் தகுந்தாற் போல் நீங்கள் யோக்கியமாக நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கூடியதாயிருக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். உங்களுடைய யோக்கியதைக்கும் உங்கள் சர்வ கலாசாலைக்கும் பெருமை விளைவிக்கத்தக்க விதத்தில் நீங்கள் நடந்து கொள்ள வேண்டுமென்பதே உங்களுடைய நோக்கமாயிருக்க வேண்டும். தேசிய வாழ்க்கைக்கு ஒரு நவீன சர்வ கலாசாலை என்ன நன்மை செய்திருக்கின்றது என்ற கேள்வியின் பதில் பொது ஜன வாழ்க்கையிலுள்ள உங்களுடைய யோக்கியதையைப் பொருத்திருக்கிறது.

ஹார்டாக் அறிக்கை சர்வ கலாசாலைகளுக்கும் பொதுஜன வாழ்விற்குமுள்ள சம்மந்தத்தை விளக்கிக் கூறுகையில், சர்வ கலாசாலைகளைச் சரிவர நடத்துவது தான் தேசத்தின் முக்கிய வேலை யாகுமென்றும், ஏனென்றால் தேச தலைவர்கள் அங்குதான் பழக்கப்படுகிறார்களென்றும், கூறுகிறது. சர்வகலாசாலையில் தான் ஒரு இளைஞர் ஒருவிஷயத்தை நன்கு ஆராய்ச்சிசெய்யவும் பக்ஷபாத மற்றமுடிவுக்குவரவும் அலங்காரமான வார்த்தைகளால் ஏமாறிப்போகாமலிருக்கவும் கற்றுக்கொள்ளுகிறார். கல்லூரிக்கு வெளியேதான் ஒருவர், பிறருடைய அபிப்பிராயங்களை எவ்விதம் அறிந்து கொள்வது, அவர்களுடன் எவ்விதம் ஒத்துழைப்பது, பொது நன்மைக்காக எவ்விதம் சுயநலத் தியாகம் செய்வது, அதிகாரதோரணையின்றித் தமது செல்வாக்கினால் பிறரைத் தம் வழிக்கு எவ்விதம் கொண்டு வருவது முதலியவைகளைக் கற்றுக்கொள்ளுகிறார். அவர் தமது கூட்டாளிகளுடன் கிளப்புகள், சங்கங்கள், விளையாட்டு ஸ்தலங்கள் முதலிய விடங்களில் நெருங்கிப் பழகுவதினாலும் உபாத்தியாயர்கள் வழிகாட்டுவதினாலும் இத்தகைய பாடங்களைக் கற்றுக் கொள்ளுகிறார்.

துர் அதிர்ஷ்டவசமாக நமது சர்வ கலாசாலையில் கற்பிக்கப்படும் தயாளம், களங்கமற்ற தன்மை, தியாகம், தைரியம் முதலியவைகள் சம்பந்தமான போதனைகள் பிற்கால வாழ்க்கையில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்படவில்லை. நீங்கள் கற்றுக்கொண்ட கல்வியால் நீங்கள் பயனடையாமற்போனால் அதற்காகச் செலவழிக்கப்பட்ட நேரமும் பணமும் வீணாகும். பற்பல பிரச்சினைகளைக் குறித்து நீங்களே சிந்திக்கவும், உங்களுடைய நம்பிக்கை பொதுஜன பழக்க வழக்கங்களுக்கு விரோதமாயிருந்தாலும் அதைப்பொருட்படுத்தாது அதன்படி தைரியமாக நடக்கவும், உங்களுடைய கல்வி உதவியாயிருக்க வேண்டும்.

நமது சர்வ கலாசாலைகள் இயந்திரங்களைப் போன்று வருஷா வருஷம் ஏராளமான பட்டதாரிகளை உற்பத்தி செய்து வருகின்றனவென்றும், அவர்களிடம் போதுமான யோக்கியதை யில்லையென்றும், அவர்களில் ஒவ்வொருவருடைய மனதிலும் நம்பிக்கையையும் மனவுறுதியையும் உண்டு பண்ணும் யோக்கியதையும் கல்வி யறிவுமுள்ள உண்மையான தேசத்தலைவர்கள் எவருமில்லையென்றும் அடிக்கடி புகார் சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் நமது பட்டதாரிகள் தங்களுடைய யோக்கியதைகளிலும், தங்களுக்குச் சரி என்று தோன்றுவதைக் கடைசிவரை சாதிப்பதிலும் போதிய கவனம் செலுத்தாததேயாகும். நீங்கள் உங்களுக்கும் உங்களுடைய நம்பிக்கைகளுக்கும், கொள்கைகளுக்கும் உண்மையாக இருக்க வேண்டும். அத்துடன் மற்றவர்களுக்கும் நம்பிக்கையை உண்டு பண்ண வேண்டும்.

#### சாரதா சட்டம்

துர் அதிர்ஷ்ட வசமாக, உயர்ந்த கொள்கைகள் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரப்படாததை நாம் இன்னும் காண்கின்றோம். இச்சர்வ கலாசாலை பட்டதாரிகளில் சிலர் சாரதா சட்டம் நிறைவேற்றப்படுவதை வெகு மும்முரமாகத் தடுத்திருக்கின்றனர். இப்போது அதை ரத்து செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றனர்

அவர்களுடைய சர்வ கலாசாலை கல்வி இன்னும் அவர்களை மூடக் கொள்கையில் கிடக்கும்படி செய்யுமாயின், படிப்பாளிகளாகிய இவர்கள், தங்களுடைய பெண் குழந்தைகளை 12 வயதுக்குப் பின் விவாகம் செய்து கொடுப்பது பெரிய பாவமென்று நம்புவார்களாயின், இச்சர்வ கலாசாலை அவர்களுக்கு அளித்த கல்வியெல்லாம் வீண் என்றே நான் சொல்லக்கூடும். இது விஷயத்தில் ஆண்களை விட ஸ்திரீ பட்டதாரிகளாகிய உங்களுக்கே அதிகமான பொறுப்புண்டு என்று ஞாபகப்படுத்துகின்றேன்.

## சமதர்மம்

நமது முதிர்ந்த அரசியல் வாதிகளைப் போன்று நமது தேச அரசியல் முன்னேற்றத்தில் நீங்கள் மிகுந்த ஆவல் கொண்டிருக்கின்றீர்களென்பதை நான் அறிவேன். ஒருபுறம் மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் கற்பிக்கக்கூடிய பழைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றிக் கொண்டிருக்கையில், நாம் சுயராஜ்யம் பெற முடியுமா வென்று உங்களைக் கேட்கின்றேன். நீங்கள் சர்வ கலாசாலையை விட்டுச்சென்றதும், மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள வித்தியாசத்தைத் துரிதமாகப்போக்குவதும், உங்களுடைய தாய் நாட்டில் நவீன கொள்கைகளைப் பரப்புவதுமே முக்கிய கடமையாக விருக்க வேண்டும். உங்களுடைய ஆன்மாவும் ஒரு ஆதிதிராவிடரின் ஆன்மாவும் ஒன்றாயிருக்கையில், நீங்கள் ஆதிதிராவிடர்களை உங்களுடைய ஆலயங்களுக்கு வெளியே நிறுத்த என்ன அதிகாரமிருக்கிறது? ஆகையால் இது வரை நம்மிடையே பற்பல வகுப்புகள் ஜாதிகள் முதலிய வித்தியாசங்கள் இருந்து வந்ததை அடியோடு ஒழித்து, நாம் எல்லோரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற கொள்கையைப் பரப்ப இங்குள்ள ஆண்களும் பெண்களும் சமாதான முறையில் சமூகப்புரட்சி செய்ய முயற்சிப்பார்களென நம்புகிறேன். மத வித்தியாசங்களையும் அடியோடு ஒழித்து, நம்மை ஒற்றுமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## ஹிந்துமுஸ்லீம் பிரச்சினை

மத நம்பிக்கைகள் சம்மந்தமாக வித்தியாசங்கள் இருந்தபோதிலும் கூட, தங்களைப்பொதுவாக இந்தியர்களென்று எண்ணிக் கொள்ளவும், அதன்படி நடந்து கொள்ளவும் வேண்டுமென்று எல்லா ஹிந்து முஸ்லீம் பட்டதாரிகளையும் கேட்டுக்கொள்ளுகிறேன். சர்வ கலாசாலைகள் கற்பிக்கும் சகிப்புத் தன்மையை இருவகுப்பினரும் அனுகூலமாகக் கொண்டு உபயோகிப்பார்களாயின், ஹிந்து முஸ்லீம்களை ஒற்றுமைப் படுத்தும் வேலை எளிதில் முடிவடைந்து விடும். ஹிந்து முஸ்லீம் பிரச்சினை சம்மந்தமாகப் பல யோசனைகள் கூறப்படுகின்றன. ஆனால், எல்லா வகுப்பு இளைஞர்களையும் பொதுப் பள்ளிக்கூடங்களில் ஆதிமுதல் கல்வி கற்கும்படி செய்தால், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை வெகுசீக்கிரத்தில் ஏற்பட்டுவிடுமென்று நான் நம்புகிறேன். சிறுவயதில் இளைஞர்களுக்குள் ஏற்பட்ட சிநேகபான்மையைப் பிற்காலத்தில் எளிதில் மாற்ற முடியாது.

## பெண்களின் உரிமைகள்

பெண்கள் உங்களுக்கு அளிக்கும் உதவியால் ஏற்படும் பயனை மட்டும் நீங்கள் உணர்ந்தீர்களேயானால், உங்களால் எதை மிகப் பயன்பெறக் கூடியவிதமாகச் சாதிக்கமுடியும். பெண்களைகுறித்துப் பழையகாலத்து மக்கள்கொண்டிருந்த கருத்துக்கள் உங்கள் மனதைவிட்டு ஒழியட்டும். அவர்களை ஆண்கள் கையில் சிக்கிய விளையாட்டுப் பொருள்கள் என்றும், ஆண்களை விடத் தாழ்ந்தவர்கள் என்றும் உள்ள கருத்துக்களை நீங்கள் விட்டுவிடுங்கள். அவர்கள் உங்களுக்குச் சமமானவர்கள் என்பதையும், உங்கள் நண்பர்கள் என்பதையும், உங்களுக்குச் சமமான உரிமைகளையே அவர்களும் அனுபவிக்கவேண்டு மென்பதையும், உங்கள் அறிவும் ஒழுக்கமும் அவர்கள் ஊட்டும் ஊக்கத்தால் சிறப்படைகின்றன வென்பதையும் நீங்கள் உணர்வீர்களாக.

மேற்கூறிய சிறந்த விஷயங்களைச் சாதிப்பதற்கு நமது ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் வேண்டற்பாலது தைரியம் ஒன்றே. உங்கள் பெற்றோர்கள் இடையூறாக நின்று உங்கள் சேவைக்குத் தடை செய்கிறார்கள் என்று நீங்கள் குறை கூறுகிறீர்கள். இளம் மக்களாகிய நீங்கள் நமது சமூகத்திற்குச் சீர்திருத்தம் அவசிய மென்பதை அறிந்தீர்களேயாகில், நீங்கள் தீரமுடன் முன் வந்து தடைகளையெல்லாம் களைந்தெறிந்து சமூகத்தைச் சீர்திருத்தி வெற்றி பெறுவீர்களாக! கல்வி உங்களுக்கு அளிக்கும் பயன் ஒன்று உண்டெனில் அது தைரியம் ஒன்றே. பட்டம் பெற்ற மாணவர்களே! உங்களுக்கு நான் சொல்வதெல்லாம், நீங்கள் நம்புகின்ற கொள்கைகளை அப்படியே நடை முறையில் தீரமுடன் அனுஷ்டிக்க வேண்டு மென்பதே. அவ்வித தீரச் செயல்தான் உங்களைப் பாதுகாத்து உங்களுக்கு அறிவளித்த சர்வ கலாசாலைக்குப் புகழைக் கொடுக்கும்.

## செய்யவேண்டியது

உங்கள் நாடு சிறப்புற வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நீங்கள் செய்யவேண்டிய வேலைகள் ஏராளமாக இருக்கின்றன. நமது நாடு எவ்வளவோ பிற்போக்கடைந்திருக்கிறது. அதைப்பற்றி சாதுரியமுடன் பிரசங்க மேடைகளில் பலமான பேச்சுக்கள் பொழியப்படுகின்றன. நமது நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டு மென்று நாம் யாவரும் உண்மையான தாகங்கொண்டோமேயானால் நாம் ஒற்றுமையுடன் அதற்காக உழைக்க முடியும். எத்தனை சீர்கேடுகள் இருக்கின்றன! அவைகளைப் போக்குவதற்கு நாம் விடாது போராட வேண்டியிருக்கிறது. பூர்வீக இந்தியாவின் சிறப்பைப்பற்றிப் பேசி மகிழ்வதை நாம் விரும்புகிறோம். பூர்வீக சிறப்பை நினைத்துப் பெருமைகொள்ளவேண்டியது நியாயமே. ஆனால், அதன் பெருமை நம்மைச் சேர்ந்ததல்ல. அது நம் மூதாதைகளைச் சேர்ந்தது. நாம் அதைப் பற்றிப் பேசி மகிழ்வதில் பயனில்லை. அவ்வித பெருமையுடைய மூதாதை



களுக்கு நாம் சந்ததியாராகத் தோன்றுவதற்கு யோக்கியதை யுடையவர்கள் என்பதை நாம் நிரூபிக்கவேண்டும். பூர்வீக சிறப்பை ஏற்படுத்தியது நாமல்ல. ஆனால் தற்காலத்தையும் வருங் காலத்தையும் சிறப்புடையதாகச் செய்யும் கடமை நம்மைச் சார்ந்தது. வருங்கால இந்தியாவும் நிகழ்கால இந்தியாவும் பூர்வீக இந்தியாவுக்கு இளைத்ததல்ல என்பதை நிரூபிக்க வேண்டியது நமது கடமையாகும். 'தற்கால நிலைமையை மிகுந்த அறிவுடன் அபிவிருத்தி செய்யுங்கள். தற்காலம் உங்களைச் சேர்ந்தது. வருங்கால நிலைமையைச் சந்திக்கப் பயமின்றித் தீரமான மனமுடன் செல்லுங்கள்' என்று லாங்பெல்லோ கூறுகிறார். கஷ்டங்களை எதிர்த்துக் காரியத்தைச் சாதிக்கவேண்டுமானால் நாம் அதைரியப்படலாகாது. வருஷக்கணக்காக, ஏன் நம் ஜீவிய கால முழுதிலும் கூட, நாமும் வெற்றியடைய முடியாது போனாலும் போகலாம். அதற்காக நாம் மனச்சோர் வடையலாகாது. நாம் கைக்கொண்ட காரியத்திற்கு நம்மாலான கடமையைச் செய்தோமென்ற மனோ திருப்தியையாவது நாம் பெறலாம்.

## அறிவுப் பயிற்சி

நான் இதுவரை சொன்னதிலிருந்து கலாசாலையில் நீங்கள் படித்துத் தேர்ச்சிபெற்றதைக் குறித்து நான் மௌனமாக இருக்கிறேன் என்று நீங்கள் எண்ணிவிடலாகாது.

மனிதன் அறிவிக்குக் கலாசாலைக் கல்வியே போதுமானதென்று நீங்கள் திருப்திகொண்டு விடலாகாது. இப்பொழுது உங்களது உண்மையான கல்வி ஆரம்பமாகிறதென்று சொல்லலாம். இப்பொழுது நீங்கள் படித்த படிப்புடன் இன்னும் அறிவை விருத்திசெய்ய முயன்றால் தான் உங்களுக்குப் பயனேற்படும். உலகில் உங்களது நிலைமையைச்சரிவர ஸ்திரப்படுத்துவதற்கு இப்பொழுதுதான் நீங்கள் ஆரம்ப கல்வியை முடித்திருக்கிறீர்கள். உங்கள் படிப்பிற்குப்போதுமான அவகாசமில்லாதபடியால் நீங்கள் அவசர அவசரமாகப் படித்துத் தேர்ச்சி பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்திருப்பீர்கள். உங்களைப்பற்றி நீங்கள் ஆலோசனை செய்ய உங்களுக்கு அவகாசமிருந்திருக்காது. கலாசாலை பரீட்சைகளின் பந்தத்தினின்றும் இப்பொழுது நீங்கள் விடுபட்டிருப்பதால் இப்பொழுது நீங்கள் அமைதியான மனமுடன் உங்கள் அறிவை விரிவாக்குவதற்குத் தகுந்த முயற்சிசெய்ய முடியும். தேக போஷிப்புக்கு உணவு எவ்வளவு அவசியமோ அதே போன்று அறிவு வளர்ச்சிக்கு மனப் பயிற்சி அவசியமானது என்று சிசரோ கூறுகிறார். வாசிப்பினாலேயே நீங்கள் அவ்வித பயிற்சி பெறலாம். இலக்கிய பொக்கிஷத்தால் உலகம் நிறையப்பெற்றிருக்கிறது. உலகிலுள்ள எல்லா புஸ்தகங்களும் இப்பொழுது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. எல்லா நாட்டுப்பாஷைகளையும் அறிய முடியாதவர்கள் கூட இவ்வித சௌகரியத்தால் எல்லாநாட்டின் முற்கால தற்கால பெரியார்கள் சிந்தனைகளைத் தெரிந்துகொள்ள முடியும். "மறுக்கவும், கண்டிக்கவும், நம்பவும், சரியென்று ஒப்புக்கொள்ளவும், விவாதிக்கவும் நூல்களைப் படியாதே. ஆனால் அவைகளிலுள்ள விஷயங்களைக் கிரகித்து, ஆலோசனைசெய்து நல்லவற்றைக் கிரகிக்கும்பொருட்டு படிப்பாயாக" என்று பேக்கன் கூறுகிறார். அப்படியானால் நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் அப்படிப்பால் பயன்பெறுவார்கள். சர்வ கலாசாலை பட்டம் பெறலும், முக்கியமாக சென்னை சர்வ கலாசாலையைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பதை விட்டுவிடுகிறார்கள். சர்வ கலாசாலையில் நாம் கற்கும் கல்வி அறிவின்மீது நமக்குத் தாகந்தை ஏற்படுத்தக் கூடியதாக இல்லை. ஆதலால் வாழ்க்கை சம்பந்தமாக சாதாரண தொழிலாளர்களைவிட ஞானத்தில் குறைவுடைய எத்தனையோ பட்டதாரிகளை நாம் காண்கிறோம். பட்டம் பெற்றதுடன் திருப்தியடைந்து விடலாகாது. அதனால் தனக்கு ஏற்பட்ட உத்தியோகமே போதுமானதென்று திருப்தி யடைந்துவிடலாகாது. தன்னால் கூடியவரை தன் அறிவை வளர்க்க முயற்சி செய்யவேண்டும். இயற்கையாகவுள்ள அறிவுக்குப் பயிற்சி அளியாதிருப்பது பெரும் பாதகத்தை விளைவிக்கும். இவ்விதமாக அறிவைப் பிரகாசிக்கும்படி செய்தால் தான் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் சுகமும் ஆனந்தமும் உண்டாகும்.

## ஒழுக்கம்

ஒழுக்கத்தாலேயே சிறந்த குணங்கள்ஏற்படும். அதிலும் கல்விக்கு ஒழுக்கம் மிக இன்றியமையாதது. மாணவர்களிடையே பரவி வரும் ஊக்கத்தால் கலாசாலையில் இறுக்கமான கட்டுத் திட்டங்கள் குறைபட்டு வருகின்றன. ஆனால் கல்விக்கு அவ்வித ஒழுக்கமே நன்மை பயக்கு மென்பது எனது கருத்து. இளைஞர்களுக்கு ஒழுக்கம் போதிக்கப்படாவிடில் நாடு சீர்கேடடையும். பொது ஜன வாழ்விற்குப் பங்கமுண்டாகும். தன்னலமும், சச்சரவும் ஒற்றுமையின்மையும் நாட்டில் தலைவிரித்தாடும், இவ்வித ஒழுக்கமில்லாததால் தான் அனுபவமுடையவர்கள்மீதும் வயது முதிர்ந்தவர்களிடத்தும் காட்டும் மரியாதை குறைந்துவருகிறது

ஹிந்து, இஸ்லாமிய ஜதீகங்களுக்கு இவ்வொழுக்கக் குறைவு முற்றும் பொருந்தியதல்ல. ஜனசமூக க்ஷேமத்திற்கும் அது மிகக்கெடுதியை உண்டாக்கும். சென்னை சர்வகலாசாலையைச் சேர்ந்த சிறந்த அறிவாளராகிய மகாகனம் சாஸ்திரியார் பேச்சைக் கூட கேட்க இந்திய இளைஞர் அனுமதியாதிருந்ததற்கும் இவ்வொழுக்க ஈனமே காரணமாகும். ஒழுக்கத்தையும் சகிப்புத் தன்மையையும் மாணவர்களுக்குப் போதிப்பதே நமது சர்வகலாசாலையின் கொள்கையாக இருக்கவேண்டும். சர்வகாசாலை வாழ்க்கையில்தான் ஒழுக்க குணத்தையும் சகிப்புத் தன்மையையும் கைப்பற்ற முடியும்.

சர்வகலாசாலை, பட்டம் பெறுவதற்கும் உத்தியோகம் வகிக்க மாணவர்களை உற்பத்திசெய்வதற்குமே இருக்கிறதென பொது ஜனங்கள் கருதி வருகிறார்கள். நான் முன் சொல்லியபடி சர்வகலாசாலை

மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும், ஐக்கிய வாழ்க்கையையும், சிறந்த குணங்களையும் ஏற்படுத்தவே அமைக்கப்பட் டிருக்கிறது. ஆகவே அவ்வித குணங்களமைய விளையாட்டுச் சங்கங்கள் பல அமையப் பெறவேண்டும்.

பட்டம்பெற்று வெளியேறும் இளைஞர்களாகிய நீங்கள் எனது கருத்தையொட்டிப்பொதுஜன அபிப்பிராயத்தைச் சீர்திருத்த நீங்கள் முயலவேண்டும். நமது கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் ஆசிரியர்களாகச் செல்லப்போகும் உங்களில் சிலருக்கு நான் சொல்லுவதென்னவெனில், நீங்கள் விளையாட்டுச் சங்கங்கள் ஏற்படுத்தி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டுமென்பதே. உங்களிடம் பயிலும் மாணவர்களுக்குத் தலைமைபூண்டு காரிய நிர்வாகம் செய்யக்கூடிய தீரத்தை ஊட்டுங்கள்.

## உத்தியோகம்.

பட்டம்பெற்றதும் உத்தியோகத்தில் சேரவேண்டுமென்பதையே பொதுவாக மாணவர்கள் நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அது சம்பந்தமாக நான் சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். உங்களில் சிலருக்குக் குடும்ப கஷ்டங்களிருக்கின்றனவென்பதை நான் அறிவேன். ஆனால் வாழ்க்கை நடத்துவதில் தீரமான ஊக்கமும் உழைப்பும் வேண்டுமென்பதே என் கருத்து.

நாம் இதுவரை சர்க்கார் உத்தியோகத்தையே நம்பியிருந்தோம். ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. பட்டதாரிகள் தாங்களே பிழைப்புக்கு வழிதேடிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. பிழைப்பைத் தேடிச்செல்லுதல் சுலபமல்ல. பிழைப்புக் கிடைக்குமுன் மிகக் கஷ்டத்துடன் ஏற்ற கூலியின்றி வெகுநாள் வேலை பழகிக்கொள்ள வேண்டியிருக்கிறது. மனதிற்கொவ்வாத சுற்றமும் நமக்கும் பெரும் தடைகளாயிருக்கின்றது. இவற்றையெல்லாம் கடந்து சென்றால்தான் நாம் இனிது வாழமுடியும். சர்வகலாசாலைப் பட்டத்தை ஒரு சிறந்த அனுகுணமாகமட்டுங் கொள்ளாமல், உத்தியோகந்தேடுவதற்கு ஏற்றஉதவியாகக் கொள்ளுகிறார்கள். எனவே பட்டதாரிகள் புதிய நிலைமைக்கேற்ப நடந்துகொள்ளக் கற்றுக்கொள்வதற்குக் கஷ்டப்படுகிறார்கள். ஏனெனில், நிர்ணயமான ஒரு உத்தியோகம் கிடைக்கும்பொருட்டு மீண்டும் அதிக கஷ்டப்படவேண்டியிருக்கிறது.

தற்போது உலகமுழுதுமே வியாபாரம் படுத்துப் போயிருக்கிறது. இந்நிலைமை எப்போதும் நிலைத்திருக்காது. வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் இந்தியா முன்னேற்றமடையவில்லை என்பது வெளிப்படை. இந்தியசுரங்கங்கள் அநேகம் இன்னும் தோண்டப்படாமலிருக்கின்றன. இந்திய வியாபாரம் இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருக்கிறது. ரயில், ரஸ்தா, விமானம், கப்பல் மூலம் போக்குவரத்து இன்னும் விருத்தியடையவேண்டியிருக்கிறது. லேவாதேவி, விளம்பரமுறை, பத்திரிகைத்தொழில் இன்னும் முன்னேறவேண்டியிருக்கிறது. மனக்களிப்பு விளைக்கத்தக்க கொட்டகைகள் உணவுச் சாலைகள முதலியவைகள் நன்கு சீர்திருத்தி யமைக்கவேண்டியிருக்கிறது, விவசாயத்திலும்கூட தேர்ச்சிபெற்ற முறைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. கிராமாந்தரங்களிலுள்ளவர்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்லுவதற்கு கற்றறிந்தோர் அங்கில்லை. எனவே, இதுவரை வழக்கமில்லையே யென அஞ்சவேண்டாம். ஆரம்ப சுகத்திலேயே நாட்டம் வைக்காதீர்கள். வியாபாரத் துறையில் நெடுநாள் பழகத் தயங்காதீர்கள். கைத்தொழில் வியாபாரத் தொழில்களையும், இதுவரை ஒருவரும் மேற்கொள்ளாத துறைகளையும், கிராம வேலைகளையும் உங்கள் கௌரவத்திற்குக் குறைவானதெனக் கருதாதீர்கள்.

நிற்க, சர்வகலாசாலையார் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயமுண்டு. ஒரு நாடு என்னதான் முன்னேற்றமடைந்திருந்தாலும் கணக்கிற் கடங்காத எண்ணிக்கையுள்ள படித்தவர்களுக்கு வேலை கொடுப்பதென்றால் முடியாத காரியம். அதிலும் நம் இந்தியாவில் தொழிலில்லாத் திண்டாட்டம் வெகு கொடுமையாயிருக்கிறது. ஏனெனில், நமது உயர்தர கல்விமுறையும் சர்வகலாசாலையில் தேறியவர்களின் அபரிமிதமான எண்ணிக்கையுமே இக்கொடுமைக்குக் காரணம்.

பள்ளியில் மேல்வகுப்புக்குத் தகுதியில்லாத மாணவர்களை நிறுத்திவிட்டால், மிக இரக்கமற்றவர்களென்றும், உதாரமில்லாதவர்களென்றும் ஆசியர்களைத் தூற்றுகிறார்கள். இது தவறு. வாழ்க்கைக்கேற்ற கல்வி பெறாதவர்களுக்குப் பட்டம் வழங்கி வெளியேற்றுவதினால் என்ன பயன்?

சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்குச் சர்க்கார் உத்தியோகங் கொடுப்பதைக் குறித்துச் சர்க்கார் செய்துள்ள மாறுதலை நீங்கள் கவனிக்கவேண்டும். என்னதான் உயர்ந்த சர்வகலாசாலை பட்டம்பெற்றவராக விருந்தபோதிலும், சர்க்கார் உத்தியோக கமிஷன் பரீட்சையில் தேறினால்தான் ஷை உத்தியோகத்திற்குத் தகுதியுடையவராகமுடியும். இதன் மூலம் சர்க்கார் உத்தியோகத்திற்காகவே தயாராகும் பட்டதாரிகள் எண்ணிக்கை குறைந்துபோகும். இந்த மாறுதலுக்குப் பிறகு சர்வகலாசாலை உண்மையான கலாபீடமாகவும் கல்விப் பீடமாகவும் விளங்கும்.

## முடிவுரை.

இப்போது நீங்கள் உலகவாழ்க்கையில் ஈடுபடப் போகிறீர்கள். மிகச் சுகமான நல்வாழ்க்கையுடன் நீங்கள் காலந்தள்ளக் கூடுமென்று என்னால் நம்பக்கூட முடியாததற்கு மிகவும் வருந்துகிறேன். நம் நாடு ஒரு பெரும் மாறுதலடைந்துகொண்டு வருகிறது. அரசியல் துறையில் பெரும்போர் நடைபெறுகிறது. வியாபாரமும் கைத்தொழிலும் க்ஷீணத்திருக்கின்றன. இச்சமயம் உதாரகுணமுள்ள பெரியார்கள் முன்வரவேண்டும். பொதுவாழ்க்கையிலும் அரசியல்வாழ்க்கையிலும் தன்னலம், அயோக்கியத்தனம், ஒழுக்கமின்மை, ஒற்றுமையின்மையாகிய துர்க்குணங்களை நேர்மையான முறைகளைக் கொண்டு வெல்வது எளிதான காரியமல்ல.



# அறிவியல் பகுதி

## கற்கள்

[திரு. மு. த. வேலாயுதம், சோக்கநாதன்பேட்டை, புதுவை.]

### பூமியும் அதனுட்புறமும்

நாம் சாதாரணமாய் ஒரு நடு மைதானத்தில் நின்று பூமியை நோக்கிச் சுற்றிலும் பார்ப்போமானால் அப்பொழுது நம் பார்வைக்குப் பச்சைப் பசேலென்ற புசும்புல் நிலங்களும், செடி, கொடி முதலியவைகள் நிறைந்த பூமியும், மலைகளும், ஆறுகளும், தானியங்கள் விளையும் விளைநில முதலியனவுங் காணப்படுகின்றன. பூமியின் மேற் பரப்பில் மாத்திரந்தானா இத்தகைய மலை, ஆறு, மணல் முதலியவைகள் நிறைந்திருக்கின்றன எனின் அல்ல அல்ல; பூமியின் கீழும் மேற்பரப்பைக் காட்டினும் மிகவுங் காட்சியுடன் பற்பல அத்யாவசியமான பொருள்கள், இம்மையில் உன்னதபதவியை அடைவிக்கும் பொருள்கள், நாகரீக உலகில் நன்மையைப் பயந்திடும் பொருள்கள் முதலியவைகள் வியாபித்திருக்கின்றன. இதனாலன்றோ.

"அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங்காட்சி"

என்றார் மாணிக்கவாசகர். ஆகையால் பூமியினுட்புறத்தில், ஒரு புறம் கடற்கரையோரத்திலும், ஆற்றோரத்திலும் அகப்படும் மணல்போலவே சிறுமணல் காணப்படுகின்றது. மற்றொரு பக்கல் ஏரி குளம் முதலிய நீர்நிலைகளின் அடியில் காணப்படும் வண்டல் போன்ற களிமண் செறிந்துகிடக்கின்றது. ஒரு சார் கட்டடங்கள் கட்டுவதற்கு இன்றியமையாத பெருங் கற்பாறைகள் வியாபித்திருக்கின்றன இவைகள் மணலைப்போன்று சிறியதாய்க் காணப்பட்டாலும், களி மண்ணைப்போல் வழவழப்பாய் இருந்தாலும், கருங்கல்லைப்போல் கடினமாயிருப்பினும் அவைகளனைத்தும் கற்களின் இனத்தைச் சேர்ந்தவைகளே. பெருங் கற்பாறைகளும் சிறுசிறு நுண்ணிய பொருள்கள் ஒன்று சேர்ந்து இறுகிய பின்னரே ஒரு பெரும் உருவம் அடைகின்றன.

### அணு (atom)

எப்பொருளும் அணுக்களின் கூட்டங்கள் சேர்ந்து உருவானதே. உதாரணமாக, ஒரு கருங்கல்லையோ, செங்கல்லையோ, அல்லது கூழாங்கல்லையோ எடுத்துக்கொள்வோம். இவைகள் எப்படி பருமனான ரூபத்தை அடைகின்றன எனின் சிறுசிறு அணுக்கள் ஒன்றோடொன்று சேர்ந்தே அவ்வாறு ஒருருவாகின்றன. எதை எடுத்தாலும் சரி, பொன்னையோ, மண்ணையோ, புத்தகத்தையோ; மரத்தையோ சிதைப்போம். சிதைத்தவற்றை மீண்டும் பொடியாக்குவோம். இவற்றையும் நுண்ணிய இம்மி வரையில் நொறுக்குவோம். இவ்விதம் நாம் சிறுகச்சிறுகப் பொருளைக் குறைப்போமாயின் நம் கைதான் அயர்ந்து விடுமேயொழிய, எப்பொழுதும் ஒரு மிக நுண்ணிய இனப் பொருளைக் காணப்பெறும விரோம். இவ்வஸ்துவையே அணு (atom) வென்பது. அணுவினிலக்கணமோ இவ்வாறாயின், பரமாணுவினிலக்கணம் பகருதல் மிகையேயாம். இவ்வாறே, ஜலம், காற்று, புகை, மேகம் முதலிய எப்பொருளும் அணுவினால் ஆக்கப்பட்டன. "சிறுதுளி பெரும்வெள்ளம்" என்னும் பழமொழியைஇவ்விடத்தேசற்று யோசித்துப் பார்த்து மேல் நோக்கலும் மேன்மைத்தாம். பஞ்சபூதங்களும் அணுவின் சேர்க்கையினால் தான் உண்டாகின்றன. உதாரணமாக, திரவ பதார்த்தத்தையோ, கிடபதார்த்தத்தையோ அல்லது வாயு பதார்த்தத்தையோ எடுத்துக் கொள்வோம். ஒவ்வொன்றிலும் அணுக்கள் சேர்ந்தே காணப்படுகின்றன. இதனாற்றானே நன்னூலார் ஒலியை "அணுத்திரள்" எனக் குறிப்பிடுகின்றனர். கருங்

---

(312-வது பக்கத் தொடர்ச்சி)

பொது வாழ்க்கையின் நிலைமையை உயர்த்துவதற்குத் தக்க திறமையுடையவர்கள் நீங்களும் உங்களுக்குப்பின் பட்டம்பெறக் கூடியவர்களுந்தான் எனக் கருதுகிறேன். இந்தத் தூய தொண்டை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமானால் போலித் தலைவர்களையும் தவறான முறைகளையும் மறந்துவிடவேண்டும். தன்னலத்தையும் அயோக்கியதையையும் வெல்லவேண்டுமானால் உங்களுக்குத் தூய ஒழுக்கம் அவசியம். நீங்கள் எப்போதும் நேர்மையாகவும் பட்சபாதமின்றியு மிருக்கவேண்டும். ஒற்றுமையைக் குறித்தும் யதேச்சையைக் குறித்தும் வாய் வேதாந்தம் பேசுவதனால் பயனில்லை. நமது பண்டைய உயர்வைக் குறித்தும் தற்கால ஒழுக்கத்தைக் குறித்தும் பேசுவதனால் பயனில்லை. எனவே தேசியகௌரவத்தை முன்னிட்டு உங்கள் உள்ளத்தெழும் உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு, பிரசங்கவாயிலாகவும், செய்கைமூலமாகவும், மதப்பித்தம், ஜாதிக்கொடுமை ஆகியவற்றை ஒழிக்க முயலவேண்டும். இக்கொடுமைகள் நம்நாடடிவில்லை எனக் கூறுவது நம் எதிரிக்கு இடங்கொடுத்ததாகும். இக்கொடுமைகளை ஒப்புக்கொண்டு அவற்றை அகற்ற முயற்சிப்பதே வெற்றிக்கறி குறியாம்.

கக்கூறுமிடத்து இப்பரந்த பூமியும் அணுக்களின் கூட்டத்தினலே வியாபித்துள்ளது. இஃதை வலியுறுத்தத்தானே,

‘ மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயுந்
தீமுரணிய நீருமென்றாங்கு
ஐம்பெரும்பூதத் தியற்கைபோல” என்னும் புறநானூற்றுச் செய்யுளில் “மண்டிணிந்த நிலன்” ‘அணுக்கள்சேர்ந்த பூமி’ எனக் கூறுகின்றனர் முரிஞ்சியூர்முடிநாகராயர் என்பார். இதனுற்றானே எப்பொருளும்அணுக்கள் சேர்ந்தே காணப்படுகின்றனவென்பதை நன்குணர்தல் வேண்டும். ஆனல் அவ்வணுவும் ஒரு முழுவஸ்துவா என்பதைக் கவனிப்போமாயின், அதுவும் மிகச் சிறிய பரமாணுக்கள் சேர்ந்தே ஒர் அணுவாகின்றது. இந்நுண்ணிய அணுக்களைப் பூதக்கண்ணுடியின் வழியாகப் பார்த்தால் நன்கு விளங்கும். இச்சிறு அணுவையே காண்டற்கு இவ்வாருய சிரமமெனின் இதனினும் சிறுசிறு பரமாணுக்களை நாம் எவ்வாறுகாணுதலியலும். ஆனல் இச்சிறு பரமாணுவின் முடிவிடம் எதுவோ எனின் நாமறிந்திலோம். அஃதே பகவன் சிருட்டி. இதனுற்றானே “அணுவுக்குளணுவாய் அப்பாலுக்கப்பாலாய்” என்று ஒளவையாரும், “அணுவுக்குளணுவே” என வேறொரு குரவரும், பரமன் செயலை உன்னிக் கூறியிருக்கின்றனர்.

ஆகையினலே, இச்சிறு அணுக்கூட்டங்களால் தான் நாம் முன் கூறிவந்த கற்கள் ரூபமடைகின்றன என்பதை நன்குணர்ந்து மனதில் பதியவைத்துக்கொள்வதற்கு யாது சந்தேகமுளது?

பூமியினுட் புறத்திலகப்படும் கற்கள் மூவகைப்படும்;

## மூவகைக் கற்கள்

முதலாவது, செடிமெண்டரி ராக்(Sedimentary rock) இவ்வினம் கடற்கரையினேரத்தில் கிளிஞ்சல் சிப்பி ஓடு முதலிய கடல்படுபொருள்கள், அலையினுல் கரையில் ஒதுக்கப்பட்டு ஒருருவாகி, காலம் செல்லச்செல்ல இறுகி கற்களாகும். இக்கற்களைக் கடலோரத்திலுள்ள பட்டணங்களில் விசேஷமாய்க் கட்டடங்களிற் காணலாம். அடையாளம் இவ்வினக்கற்களின் மேற்பரப்பில் கிளிஞ்சல் சிப்பி ஓடு முதலியவைகள் ஒன்ருெடொன்று சேர்ந்த வடுக்கள் காணப்படும். இதற்கே செடிமெண்டரி ராக்ஸ் (Sedimentary rocks) எனப் பெயர்.

இரண்டாவது,அக்கினிக்கற்கள்(erruptive rocks) இவை எரிமலையுள்ள தேயத்திலே தான் மிகுதியுங் கிடைக்கும்.

மூன்ருவது,பளிங்குக்கற்கள் (Crystalline rocks)

## சுண்ணும்புகற் பாறை.

சீர்மைச்சுண்ணும்பு:-நாம் சாதாரணமாய்ப் பள்ளிக்கூடங்களில் கறுப்புப் பலகையில் எழுதுவது சீர்மைச்சுண்ணும்பிஞலேயே.இக்கட்டியைத்தொட்டமாத்திரம் நமது கையில் வெண்மை நிறம் படும். இது மிகவும் சலசலப்புள்ளவஸ்து, கையினுல் சுலபமாக உடைத்து விடலாம். ஒரு துண்டு சீர்மைச் சுண்ணும்பு கட்டியை (chalk piece) எடுத்துக் கொள்ளுவோம். ஒரு பொட்டு ஜலம் அதன் மீது பட விட்டோமானுல் சிவ்வென்று ஜலத்தை இழுத்துக்கொள்ளுகிறது. இதனுல் அது சலசலப்புள்ள வஸ்துவென்றும் அணுக்கள் லேசாகப் பொருந்தியிருக்கின்றன வென்றும் அறிகின்ருேம்.

ஒரு சீர்மைச் சுண்ணும்பு கட்டியைத் தண்ணீரில் போடுவோம். அது அப்பொழுது நன்ருய்த் தண்ணீரைக் கிரகித்து பருமனுகிறது. பின் எடுத்து உறைந்த பனிக்கட்டியை விடுவோம். சிறிது நேரஞ் சென்ற பின் அதை மாவாக்குகின்றது. இச்சுண்ணும்புமாவின் மேல் ஒரு பொட்டு காடித் தண்ணீரையாவது அல்லது கிளோரைடிரிக் அசிட்டை (chlorhydriaclid)யாவது தெளிப்போம். உடனே பொங்கி அதிலிருந்து குமிழ்களுண்டாகி, பின் வெடித்து, கரிச்சாரமும் சுவாச வாயுவுங் கலந்த (Carbonic acid gas) ஆகாயத்தை வெளியிடுகின்றன.

இன்னும் கொஞ்சம் சுண்ணும்பு கட்டியை ஒரு புட்டியினுள் போட்டுக் கொஞ்சம் புளிப்பு (Acid) ஊற்றினுல் உடனே மேற்சொன்ன கரிச்சாரமும் சுவாசவாயுங் கலந்த ஆகாயம் புட்டியில் காணப்படுகின்றது. பின் எரியும் ஒரு தீக்குச்சை புட்டியினுள் கொண்டு போனுல், தீக்குச்சு அவிந்துவிடும். இவற்ருல் நாமுணர்வதுயாதெனில், சீர்மைச் சுண்ணும்புகட்டி சுண்ணும்பும் கரிச்சாரமும் சுவாச வாயுங் கலந்த ஒரு பொருள் என்பதே.

இச்சுண்ணும்பு கட்டியைத் தூளாக்கிப் பூதக் கண்ணுடியின் மூலமாய்ப் பார்ப்போமாயின், ஒன்ருெடொன்று பொருந்தின சுண்ணும்பு சத்தைச் சேர்ந்த நுண்ணிய அணுக்களும், மீனின் செதிள், கடற்பாசி முதலிய பொருட்களின் சிறிய அணுக்களும், செறிந்து கிடப்பதைக் காணலாம். நண்டு, சிப்பி முதலிய ஜந்துக்களின் க்ஷீணித்த ஓடும் காணக்கிடக்கின்றன. இதனுல் இச்சுண்ணும்பு பாரை தண்ணீரினுதவியால் தானே உண்டானதென அறியக்கிடக்கின்ருேம். இவைகள் கடல்களின் கொஞ்சம் ஆழத்தில் சேறுடன் கலந்து இறுகித் திடப்பொருளாகின்றன. கன்மலை எவ்வாறு பூமியின் மேல் வியாபித்திருக்கின்றனவோ அவ்வாறே தான் சுண்ணும்புகற்பாறையும் பூமியின் கீழ் பரந்திருக்கின்றது. மியூடன் (Meudon), ஸ்பெயின்(Spain), ட்ராய்ஸ் (Troys), முதலிய நாடுகளில் சுண்ணும்பு கற்கள் மிகுதியும் எடுக்கப்படுகின்றன.

உபயோகம்:—அத்தேயங்களிலிருந்து அனுப்பப்படும் சீமைச் சுண்ணும்பு மாவு பித்தளை சாமான்களை விளக்க மிகவும் பிரசித்திபெற்றது. கலாசாலையி ல் கரும்பலகையில் எழுத மிகவும் உபயோகமா



கின்றது. சுண்ணும்பு சார மற்ற நிலங்களுக்குப் பக்குவப்படுத்துவதற்காகவும் இதை உபயோகிக்கின்றனர்.

அகப்படுமிடம் ஷம்பாஞ்ன் (Champagne) ஷராந்த் (Charente), இன்பீரியர் சேன் (Inferior Seine) முதலிய நாடுகளிலும் சேன்நதி ஓரத்திலும் மிகுதியும் கிடைக்கிறது. ஆனுல் மெயின் காட்டில் வெகு காலத்திலிருந்து சுண்ணும்புத் தோண்டி எடுக்கின்றனர்.*

இவ்வினங்களைச் சேர்ந்த வேறு கற்கள்:—லிட்டகிராபிகல் (lithographic lime stone). இக்கல், மஞ்சளாயும் மிகவும் அழுத்தமாயுமிருக்கும். அதன் மேற் பக்கம் பார்க்கும் பொழுது பளபளப்பாய்க் காணப்படும். இதை விசேஷமாக, சித்திரப்படங்கள் முதலியவைகளைப் பெயர்த்து எழுதுவதற்காக உபயோகப்படுத்துகின்றனர்.

பெருங்கல் (coarse lime stone). இக்கல், பேருக்குத் தகுந்தவாறு பெரிய பருக்கைக் கற்களால் உருவமடைந்திருக்கின்றது. இக்கற்களை எடுக்கும் சுரங்கங்கள் அநேகம். பாரீஸ் நகரில் இக்கற்களைக் கொண்டு வெகு விடங்களில் கட்டடங்கள் கட்டியிருக்கின்றனர். கிரீயல் (Creil) ஷான்ந்தி (Chantille) முதலிய இடங்களிலிருந்து இன்றும் அழகிய கற்கள் எடுக்கப்படுகின்றன,

ஒலிடிக் லைம் ஸ்டோன் (oolidic lime stone) இக்கல் மிகவும் வெண்மையும் அழுத்தமுமானது. நுண்ணிய பல சிறு மீன் முட்டையைப்போன்ற அணுக்கள் சேர்ந்த வடிவமடைந்தது. இக்கல் மிகவும் உறுதியானது. கல்வாடஸ்(Calvados)பாயிட்டு (Poitou), பர்கண்டி (Burgundy) முதலிய நாடுகளில் விசேஷமாய் இக்கற்கள் பாரைகளாகக் கிடக்கின்றன.

பிசாலடிக் லைம்ஸ்டோன் (pisolithic lime stone) இக்கல் மீடன் நகருக்கருகில், கடலையைப் போன்ற அவ்வளவு பருமனுள்ள பொருட்கள் ஒன்ருெடொன்று சேர்ந்து இறுகிப் பெரிய கற்களாய்க் காணப்படுகின்றது.

## சலவைக்கல் (marble stone)

சலவைக்கல் மிகவும் உறுதியானது. அது நுண்ணிய மண்ணினுல் உருவ மடைந்தது. பார்வைக்கு மிகவும் பளபளப்பாய்க் காணப்படும். சலவைக்கல் பளிங்கு கற்களினத்தைச் சேர்ந்தது. சில சலவைக்கற்களைப் பார்ப்போமாயின், பலவிதமான அழகிய வர்ணங்களுடன் காணப்படும். காரணம் அத்தகைய நிறங்களுள்ள மணல் ஒன்று சேர்ந்து இறுகிப் பின் அதற்குத் தக்கவாறே நிறமுங் காணப்படுகின்றன. நூற்றுக் கணக்காகவோ, ஆயிரக்கணக்காகவோ எத்தனையோ ஆண்டுகள் பூமியின்கீழ் அணுக்கனொன்றுசேர்ந்திருகுவதால் அங்ஙனம் உரமாயிருக்கின்றது. ஆடி (Aude) ப்ளேண்டெர்ஸ் (Flanders)முதலிய நாடுகளில், சிவப்புக் கற்களும், பச்சைக்கற்களும், பசுமை நிறங்கொண்ட கற்களும் கிடைக்கின்றன. சலவைக்கற்களில் அநேக விதங்களுண்டு. இவைகளெல்லாம் சுண்ணும்பு கற்களின் இனத்தைச் சேர்ந்தவைகளே. ஆனுல் சுண்ணும்பு கல்லின் உற்பத்தி சலவைக்கல்லின் உற்பத்தியை விட மிகக் குறுகிய காலத்ததே. வெகு பழைய காலத்திலிருந்தே, சிலைகள் செய்வதற்கு இச்சலவைக்கல்லை உபயோகப்படுத்தி வருகின்றனர். கிரேக்கர்கள் பண்டை காலத்திலிருந்து பாரஸ் (Poras) பெண்டெலைக்கி (Pendeligue) முதலிய தேயங்களிலிருந்து இக்கல்லை எடுக்கின்றனர். இத்தாலியர்கள் கர்ரேரி (Carrare) என்னும் தேயத்திலிருந்து எடுக்கின்றார்கள். பீரினிஸ் (Pyrenees) என்னும் மலை நாட்டில், சேன்பெயட் (Saint Beat) என்னும் தேயத்திலுள்ள சுரங்கங்களிலிருந்து பற்பல வேலைகளுக்கு உதவக்கூடிய சுத்தமான சலவைக்கற்கள் எடுக்கின்றனர். கிரேக் தேசத்தில் அக்ரபாலி (Acropole) என்னும் பட்டணத்தின் கட்டடங்கள் சலவைக்கற்களால் ஆனது.

(தொடரும்)

* இவ்வாசிரியர் இங்குக் குறிப்பிடும் இடங்களெல்லாம பிரான்சிலும் அதன் சுற்றுப்பக்கத்திலும் உள்ளன. உலகத்தின் இதர பாகங்களிலும் இவ்விதமான கற்கள் காணப்படுகின்றன. (ப-ர்)


# மகா நாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள்,
தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
**40**-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணு **8** தபாற் செலவு அணு **3**

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ், கீழ்ப்பாக்கம், சென்னை.

# வானநூலும் இந்தியப் பஞ்சாங்கமும்

115-வது பக்கத் தொடர்ச்சி.

[திரு. V. S. சங்கர சுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி. எ., பி. எல்., திருநெல்வேலி]

## சேவ்வாய்.

செவ்வாய் சூரியனிடமிருந்து நாலாவது கிரஹம். அது பூமியை அடுத்து அதற்கு வெளிப் புறத்தில் சூரியனிடமிருந்து சுமார் 15கோடிமைல் தூரத்திற் கப்பால் நின்று சூரியனைச் சுற்றிவருகிறது. இதனுடைய நிறம் சிவப்பு. உருவத்தில் பூமியைவிட மிகச் சிறியது. இக்கிரஹம் தன்னைத் தானே $24\frac{1}{2}$ மணிக்கு ஒருதரம் சுற்றிக் கொள்வதோடு சூரியனைச் சுமார் 23 மாதத்திற்கு ஒருதடவை சுற்றி வருகிறது. இதற்கு இரண்டு உபகிரஹங்கள் உண்டு. சூரியமண்டத்திலுள்ள எல்லா கிரஹங்களையும் விட செவ்வாயினுடைய தன்மையைத் தெளிவாக வான சாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். அங்கும் நம் உலகைப் போலவே ஜலமும் காற்றும் இருக்கிறபடியால் ஜீவ வர்க்கங்கள் தோன்றி வாழ்ந்து கொண்டிருப்பதற்கு ஹேது விருக்கின்றது.

## வியாழன்

சூரிய மண்டலத்திலுள்ள கிரஹங்கள் எல்லாவற்றிலும் பெரியது வியாழன். இக்கிரஹத்தை குரு என்றும், பிரகஸ்பதி யென்றும் கூறுவார்கள். இதனுடைய குறுக்களவு 85000-மைல். பூமியின் குறுக்களவைவிட 10-பங்குகளுக்குமேல் அதிகமானது. உருவத்தில் சுத்த வட்டமாக இராமல் சற்று அண்டாகாரமாக இருக்கிறது. ஒளியில் இதற்குச் சமானமான கிரஹம் கிடையாது. இதற்கு கொஞ்சம் சுயவொளி இருக்கிறதென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இக்கிரஹம் தனது ஐந்து உபகிரஹங்களோடு சூரியனிடமிருந்து 52-கோடி மைல் தூரத்திற்கு அப்பால் நின்று 10-மணி நேரத்திற்கு ஒரு தடவை தன்னைத்தானே சுற்றிக்கொண்டு ஏறக்குறைய 12 வருஷத்தில் சூரியனை ஒரு சுற்று சுற்றி வருகிறது. வியாழனுடைய பருத்த உருவத்தையும் அதன் உபகிரஹங்களையும் சுற்றும் வேகத்தையும் கவனிக்கும்போது அது மிகவும் பலத்த சக்திவாய்ந்த கிரஹ மென்று தெரிகிறது.

## சனி

சூரியமண்டலத்திலுள்ள கிரஹங்கள் எல்லாவற்றிலும் விசித்திரமானது சனி. எல்லா கிரஹங்களும் ஏறக்குறைய உருண்டை வடிவமாக இருக்கின்றன. சனியும் அவ்வாறு உருண்டையாய் இருப்பதோடு அதன் மத்தியில் மோதிர மணிக்தாற் போல் மிகவும் உயரமான ஒரு தட்டையான வளையத்தினால் சுற்றப்பட்டிருக்கிறது. இவ்வளையத்தின் குறுக்களவு 175000-மைல். அகலம் 60-மைல். இவ்வளையம் முற்றிலும் கெட்டியாக இல்லை. மிகவும் கலகலப்பாக ஒன்றின்மேல் ஒன்று படாமல் சனியை வெகு வேகத்துடன் சுற்றிவரும் அனந்த கோடி சிறுகற் குண்டுகளென்று தெரிகிறது. சனிக்கு ஒன்பது உபகிரஹகங்களிருக்கின்றன. உருவத்தில் குரு ஒன்றுக்குத் தான் சனி சிறியது. தன்னைத்தானே சுற்றுவதற்குச்சுமார் 10-மணிநேரமாகிறது. தனது பெரிய வளையத்தோடும் ஒன்பது உபகிரஹங்களோடும் சூரியனுக்கு 95 கோடி மைல்களுக்கு அப்பால் நின்று சுமார் 30 வருஷத்திற்கு ஒரு தடவை சூரியனைச் சுற்றி வருகிறது.

## யூரேனஸ், நெப்டியூன்.

யூரேனஸ், நெப்டியூன் முதலிய கிரஹங்கள் சாதாரணமாக வெறுங் கண்ணுக்குத் தென்படாதவைகள். சுமார் 150 வருஷங்கள் வரையிலும் இக்கிரகங்கள் இருப்பதாகவே ஒருவருக்கும் தெரியாது. அதனாலேயே நமது இந்திய வான சாஸ்திரிகள் இக்கிரஹங்களைப்பற்றி ஒன்றும் எழுதவில்லை.

யூரேனஸ் என்னும் கிரஹம் 1781-ம் வருஷம் ஹெர்ஷல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனுடைய குறுக்களவு பூமியைவிடச் சுமார் நாலு மடங்கு அதிகமானது. இக்கிரஹம் சூரியனிடமிருந்து சுமார் 175 கோடி மைல்களுக்கு அப்பால் நின்று 82 வருஷங்களுக்கு ஒரு தடவை சூரியனைச் சுற்றி வருகிறது.. நெப்டியூன் என்னும் கிரஹம் 1845-ம் வருஷம் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கிரஹம் சூரியனிடமிருந்து சுமார் 280 கோடி மைல்களுக்கு அப்பால் நின்று சூரியனை 165-வருஷங்களுக்கு ஒரு தடவை சுற்றி வருகிறது. இவைகளிரண்டும் தவிர இவ்வருஷம் புதிதாக ஒரு கிரஹம் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. அதனுடைய கதி வேகத்தைப்பற்றி இன்னும் நிச்சயமாக ஒன்றும் கண்டு பிடிக்கப் படவில்லை.

## கிரஹங்களின் கதி விசேடங்கள்

சூரிய குடும்பத்திலுள்ள கிரஹங்கள் யாவும் கீழ்தர கிரஹங்கள் (inferior planets) மேல்தர கிரஹங்கள் (superior planets)) என இரண்டு விதமாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றன. நாம் வசிக்கும் பூமிக்கும் சூரியனுக்கும் நடுவில் நின்று சூரியனைச் சுற்றி வருபவைகள் கீழ்தர கிரஹங்கள். பூமிக்கு வெளியில் நின்று சூரியனைச் சுற்றிவரும் கிரஹங்கள் மேல்தர கிரஹங்கள். புதனும் சுக்கிரனும் கீழ்தர வகுப்பைச் சேர்ந்தவை. இவைகளினுடைய கதியில் மற்ற கிரஹகங்களுக் கில்லாத சில விசேடங்களுண்டு. முன் வியாசத்தில் குறிப்பிட்ட மாதிரி இவ்விரண்டு கிரஹங்களும் சூரியனிருக்கும் திசைக்கு நேர் எதிர் திசையில் ஒருகாலும் தோன்றா. எப்போதும் சூரியனை அடுத்து முன் பின் இரண்டு இராசிகளுக்குள்ளேயே சஞ்சரித்து



கொண்டிருப்பதாகத் தெரியும். இக்காரணத்தினால் இவைகள் சில காலம் மாலை வெள்ளியாகவும் சில காலம் உதயவெள்ளியாகவும் பிரகாசிக்கின்றன. இவைகள் சூரியனைச் சுற்றி வரும்போது ஒரு தடவை சூரியனுக்கு முன் புறத்திலும் ஒரு தடவை பின் புறத்திலும் மறைகின்றன. புதனும் சுக்கிரனுமல்லாத இதர கிரஹங்களெல்லாம் மேல்தர வகுப்பைச் சேர்ந்தவைகள்.

மேற் குறித்த இருவகைக் கிரஹகங்களும் சாதாரணமாக நக்ஷத்திரக்கூட்டங்களுக் கிடையில் கீழ்த்திசை நோக்கி நகர்ந்து செல்லுகின்றன. ஆனால் சில வேலைகளில் அவைகள் அசையாமல் நின்று, பின் மேற்றிசை நோக்கி நகர்ந்து கொண்டு போகிறதைப் பார்க்கிறோம். இன்னும் சில நாட்களில் அவைகள் திடீரெனக் கீழ்த்திசைநோக்கி ஓட ஆரம்பிக்கின்றன. இவ்வாறு மேற்கு நோக்கி நகர்வதை வக்ரகதி என்று கூறுவார்கள். பூமி அசைவற்று நிற்குமானால் இவ்வித மாறுதல்கள் ஒன்றும் ஏற்படாது. கிரஹங்கள் ஓடுவதல்லாமல் பூமியும் ஓடுவதால் இவ்வக்ரகதி ஏற்படுகிறது.

## வால் நக்ஷத்திரங்கள்

வால் நக்ஷத்திரங்கள் சூரிய மண்டலத்திலுள்ள மற்ற கிரஹங்கள் மாதிரி எப்பொழுதும் தென்படுவன வல்ல. அவைகள் அண்டாகாரமாக மிகவும் நீண்ட பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியன் நடு மத்தியிலிராமல் ஒரு பக்கம் ஒதுங்கி இருக்கிறது. அதனால் சூரியன் சமீபத்தில் அவைகள் வருகிற காலங்களில் மாத்திரந்தான் நம் கண்களுக்குத் தென்படுகின்றன.

வால் வெள்ளிகள் சூரியனிடமிருந்து வெகுதூரத்திலிருக்கும்போது உருண்டை வடிவமாக இருக்கின்றன. சூரியனை அணுக அணுக அவைகளினுடைய மேற்பரப்பு சூடேறி உருகி ஆவிரூபமாக மாறி மெல்லிய அணுக்களாகப் பிரிந்து விடுகின்றன. அவ்வாறு பிரிந்து நிற்கும் அணுக்களைச் சூரியனிடமிருந்து வெளிக் கிளம்பும் ஒரு வகை சக்தி சூரியனிடமிருந்து வெளிப் பக்கமாகத் தூரத்துகிறது. அப்படி தூரத்தப் படுவதால் அம்மெல்லிய அணுக்கள் வால்ரூபமாகத் தோன்றுகின்றன.

## உலகங்களும் வானகற்களும்

கிரஹங்கள், வால் வெள்ளிகள் முதலியன போல் வான வெளியில் அனந்த கோடி சிறு குண்டுகள் சுற்றித்திரிகின்றன. அவைகளின் ஓட்டமும் அநேகமாகக் கிரஹகங்களை யொத்ததே. அவைகள் மிகவும் விரைவாக ஓடிக்கொண்டுவரும் சமயத்தில் ஏதாவதொரு காரணத்தினால் திடீரென்று பூமியை நோக்கி இழுக்கப்படுகின்றன. அப்போது அவைகள் பூமியைச் சூழ்ந்து கொண்டிருக்கும் வாயு மண்டலத்தில் மிகவும் விரைவாகப் பிரவேசிப்பதால் வாயு அணுக்களின்மீது உராய்ந்து உஷ்ணமடைந்து பிரகாசிக்கின்றன. அச்சமயங்களில் தான் அவைகள் வானத்தில் கோடிட்டாற்போல் விரைவாகச் செல்வதை நாம் காண்கிறோம். அவைகளே உலகங்கள் என்று சொல்லப்படுவன. அதிக உஷ்ணத்தினால் அவைகளின் பெரும்பாகம் ஆவிரூபமாக மாறி எரிந்து விடுகின்றன. எரியுந் தன்மையில்லா மற்ற பாகங்கள் உஷ்ணத்தினால் மிகவும் சிறு அணுக்களாகப் பிரிக்கப்பட்டுப் பூதலத்தை அணுகுகின்றன. சில சமயங்களில் மிகவும் பெரிய குண்டுகள் வான வெளியிலிருந்து பூமியை நோக்கி வருகின்றன. அவைகள் வாயு மண்டலத்தின் குறுக்காக வரும்போது உஷ்ணத்தினால் சிறுபாகமே குறைவடைந்து அவைகளின் பெரும்பகுதி பூமியின்மீது மிகவும் விரைவாக விழுகின்றன. இவைகள் வான்கற்கள் எனப்படுவன.

## நக்ஷத்திர மண்டலம்

சூரிய மண்டலத்திலுள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் பற்றி நாம் ஒரு சிறிது தெரிந்து கொண்டோம். இனி நக்ஷத்திர மண்டலத்தைப் பற்றி விசாரிப்போம். இரவில் ஆகாயம் நிர்மலமாக இருக்கும்போது நாம் ஆயிரக் கணக்கான வெள்ளிகளைப் பார்க்கிறோம். அவைகள் யாவும் உருவத்திலும் ஒளியிலும் ஒரே தன்மை யனவாக இராமல் வித்தியாசப்பட்டிருக்கின்றன. இவ்வொருகாரணத்தினால் தான் நாம் அவைகளைத் தனித் தனியாக அறிந்துகொள்ள முடிகிறது. சாதாரணமாக நமது கண்ணுக்குத் தென்படும் நட்சத்திரங்கள் சுமார் 7500. அவைகளை ஒளியின் அளவை வைத்து ஆறு தரங்களாகப் பிரித்திருக்கிறார்கள். முதல் தரமானவைகள் சுமார் 20 நக்ஷத்திரங்கள் இருக்கின்றன. அவைகளில் நமக்கு முக்கியமானவை ரோகணீ, திருவாதிரை, சித்திரை, சுவாதி, கேட்டை, திருவோணம் முதலியன. மற்றபடி யாம் அவைகளின் தூரத்தை மைல்களாகக் கணக்கிட்டுச் சொல்வதானால் முடியாத காரியமாகும். ஒளி கிரணங்கள் மணியொன்றுக்கு 67 கோடி மைல்தூரம் ஓடுகின்றன. இவ்வித வேகத்தோடு ஒரு ஒளி கிரணம் நமக்குச் சமீபத்திலுள்ள ஒரு நக்ஷத்திரத்திலிருந்து புறப்பட்டு நம்மிடம் வந்துசேருவதற்குச் சுமார் $3\frac{1}{2}$ வருஷகால மாகிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அப்படியானால் அவைகளினுடைய தூரம் எவ்வளவென்பதை நாம் ஒருவாறு யூகித் தறிந்து கொள்ளலாம். எண்ணுதற்கரிய இவ்வளவு தூரத்திலிருக்குமிந் நக்ஷத்திரங்கள் சூரியனிருக்கும் அவ்வளவு சமீபத்திற்குக் கொண்டுவரப்பட்டால் சூரியனைவிடப் பல மடங்கு பெரியவையாகத் தோன்றும். ஆகாயத்தில் தோன்றும் ஒவ்வொரு நக்ஷத்திரமும் நமது சூரியனைப் போலொத்த பெரிய சூரிய மண்டலங்களே. அவைகளும் நமது சூரியன் மாதிரியே கிரஹங்கள், உபகிரஹங்கள், வால் வெள்ளிகள் முதலிய கூட்டங்களோடு வான வெளியில் உலாவி வருகின்றன. முக்கியமான நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றையும்பற்றி நாம் எழுதிக்கொண்டு வந்தோமானால் இவ்வியாசம் மிகவும் பெருத்து விடும் என்றஞ்சி நமது பஞ்சாங்கத்திற்கு வேண்டிய நட்சத்திரங்களைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வோம். குறிப்பிட்ட காலத்தில் சூரியனும் சந்திரனும் எவ்விடத்திலிருக்கிறதென்பதை அறிவதற்காகச் சூரியவீதி




## யந்திர நாகரிகத்தின் பலன்

[30-8-30 திராவிடனில் கண்டது]

உலக முழுதும் வறுமை பெருகி வருகிறது. வர்த்தகம் மந்தப்பட்டு விட்டது. வேலையில்லாத் தொழிலாளர் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. பிரிட்டனில் சுமார் 22 லட்சம் பேர் வேலையில்லாமல் தவிக்கிறார்கள். ஜெர்மனியில் 20 லட்சம் பேரும், அமெரிக்காவில் 50 லட்சம் பேரும் தொழிலின்றிப் பட்டினி கிடக்கிறார்கள். உலக முழுதும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் குறைந்து கொண்டு வருகிறது. எனவே ஏற்றுமதி வர்த்தகத்தினால் உயிர் வாழ்ந்து வரும் தேசங்கள் நடுங்கத்தொடங்கிவிட்டன. பிரிட்டிஷ் கைத்தொழில்களும் பாதிக்கப்பட்டு விட்டன. லங்காஷயர் நெசவுத் தொழில் முறிந்து விட்டது. சரக்குகளின் விலையைக் குறைத்து, வெளி நாட்டு பிரிட்டிஷ் வர்த்தகத்தை இழுத்துக் கொள்ள ஜெர்மனி ஏற்பாடு செய்து வருகிறது. சரக்குகளின் விலையைக்குறைப்பதினால் ஏற்படக்கூடிய நஷ்டத்தைத் தொழிலாளர் சம்பளத்தை 100-க்கு 20 விகிதம் குறைத்து ஈடு செய்து கொள்ள ஜர்மனி உறுதி செய்திருக்கிறது. இந்திய சட்ட மறுப்பியக்கப் பயனாய் பிரிட்டிஷ் ஜவுளிகள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. எனவே, பிரிட்டிஷ் ஆலை முதலாளிகள் தவிக்கின்றனர். கானடாவில் தானியங்கள் மலைமலையாய்க் குவிந்து கிடக்கின்றன. அந்தத் தானியங்களை இறக்குமதி செய்வாரைக் காணோம். சீனத்திலும் வெளி நாட்டு வர்த்தகம் படுத்து விட்டது. ஐரோப்பிய மகா யுத்தத்துக்குப்பிறகு சீனப்பொருளாதார நிலை சீர்பெறவில்லை. உள்நாட்டுப் போராட்டம் நின்று அரசியல் நிலை உறுதிப்படாததினால் ஜனங்களின் செல்வநிலை மிக மோசமாகவே இருக்கிறது. ருஷிய வாத்தகமும் மிகக் கேவலமாகவே இருக்கிறது. ருஷிய ஜனத்தொகைக்குத் தக்கபடி அங்கு வர்த்தகம் நடைபெறவில்லை. அரேபியா ஒன்றே தன் உணவு கொண்டு திருப்தியுடன் வாழ்கிறது. மேனாட்டு யந்திரங்களும் கீழைத் தேசங்களுக்கு முன் போல ஏற்றுமதியாகவில்லை. ஆகவேஎங்குப்பார்த்தாலும்பொருளாதார நிலைமிக பயங்கரமாகவே இருக்கிறது. இந்தியப் பொருளாதார நிலை பழுதுபட்டதற்கும் வர்த்தகம் முறிந்ததற்கும் சட்டமறுப் பியக்கமே காரணமென்று இந்திய எதிரிகள் கூறுகிறார்கள். ஆனால் உலகம் முழுதும் வர்த்தகமும் கைத்தொழிலு சீரழிந்து போகக் காரணமென்ன? செல்வம் மிகுந்த நாடுகளாகக் கருத்தப்படும் பிரிட்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்களில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் தொழிலின்றித் தவிக்கக் காரணமென்ன? தற்காலப் பொருளாதாரச் சீர்கேடு இப்படியே இன்னும் கொஞ்சகாலம தொடர்ந்து கொண்டு போகுமானல் உலகத்தின் நிலை என்னாகும்? வாஸ்தவத்தில் உலகப்பொருளாதார நிலை மிக



அஞ்சத் தக்கதாகவும் ஆபத்துக் கிடமானதாகவும் இருக்கிறது. எனவே பல பெயர் பெற்ற அர்த்த சாஸ்திர வல்லுநர்கள் இவ்விஷயத்தைப் பற்றிப் பரிசீலனைசெய்யத் தொடங்கி விட்டனர். ஹெரால்டு காக்ஸ் என்னும் பெயர்பெற்ற ஆங்கில அர்த்த சாஸ்திரி கூறுவதாவது:—

"தொழிலில்லாத் தொல்லை ஏதேனும் ஒருதேசத்தில் மட்டும் காணப்படும் காட்சியல்ல. உலக முழுதும் அந்தத் தொல்லை இருந்துதான் வருகிறது. காப்பு வரி போன்ற அரசியல் சூழ்ச்சிகளால் அத்தொல்லையை ஒழிக்க முடியாது. பொருளாதாரச் சீர்கோட்டுக்கு அடிப்படையான காரணங்களை நாம் நீக்க முயல வேண்டும்."

பொருளாதாரச் சீர்கேட்டுக்கு அடிப்படையான காரணம் என்ன என்பது தான் முக்கியமான கேள்வி. இது விஷயமாக ஆஸ்டிரேலியா கவர்னர் ஜெனரல் லார்டு ஸ்டோன் ஹெவன் கூறுவதாவது:—

"கைத்தொழில் புரட்சிக்குச் சமமான ஒரு சமூகப்பிரச்சினை இந்த இருபதாவது நூற்றாண்டில் தலைதூக்கியிருக்கிறது. யந்திர நிர்மாண விஷயத்தில் மக்கள் அமிதமாக விர்த்தி யடைந்து விட்டனர். எனவே மக்கள் தேவைக்கு அதிகமான சாமான்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவைகளை வாங்க மக்களுக்குச் சக்தியில்லை. எனவே வேலையில்லாத்தொல்லை ஏற்படுகிறது. இது தற்காலீகமான தொல்லையல்ல, காலக்கிரமத்தில் சாசுவதமாகி விடும்".

உலகப் பொருளாதாரச் சீர்கேட்டின் உண்மைக் காரணத்தை லார்டு ஸ்டோன்ஹெவன் மிகத் தெளிவாக விளக்கி விட்டார். உலக வர்த்தகமந்தத்துக்கும், பொருளாதாரச் சீர்கேட்டுக்கும், வேலையில்லாத்தொழிலாளர் தொகைப் பெருக்கத்துக்கும் யந்திர நாகரீகமே காரணமாகும். யந்திரங்களின் உதவியால் அதிகப்படியான சாமான்களை உற்பத்தி செய்து வெளி நாடுகளுக்கு அனுப்பித் தம் நாட்டின் செல்வ நிலையை விருத்திசெய்ய யந்திர நாகரீகத்தில் முன்னணியில் நின்றதேசங்கள் எண்ணின. மோட்டார் சக்கரவர்த்தியான திரு. ஹென்ரி போர்டு மிகக்குறைந்த விலைக்குத் தம் கார்களை விற்று உலகம் முழுதும் தம் வர்த்தகத்தைப் பரப்பும் நோக்கத்துடன் கணக்கற்ற மோட்டார்களை உற்பத்தி செய்தார். மோட்டார் தொழில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி முதலிய தேசங்களிலும் விர்த்தி யடைந்து விட்டதினால் போர்டு கார்கள் விற்பனையில்லாமல் குவிந்து கிடக்கின்றன. இது போலவே யந்திர நாகரீகம் உலகம் முழுதும் பரவி விட்டதினால் மக்கள் தேவைக்கு மிஞ்சிய சாமான்கள் உற்பத்தி பண்ணப்படுகின்றன. கீழைத் தேசங்களில் கைத்தொழில் நிலை மிக மோசமா யிருந்தாலும் மேல் நாடுகளில் எல்லாத் தேசங்களிலும் கைத்தொழில் மிக அபிவிர்த்தி அடைந்திருக்கின்றது. கைத்தொழில் சிறுக்கினால் அநேக தேசங்கள் விவசாயத்தைக் கை நழுவ விட்டு விட்டன. விவசாய நாடாயிருந்த இத்தாலியா இப்பொழுது கைத்தொழில் நாடாய் விட்டது, பால்ட்டிக் கடலையடுத்த தேசங்களும் இப்பொழுது கைத்தொழிலில் விருத்தியடைந்து வருகின்றன. மகாயுத்தத்துக்குப் பிறகு புது முறைகளைக் கையாண்டு ஜெர்மனி கைத்தொழில் விஷயத்தில் வியக்கத் தக்கபடி முன்னேற்ற மடைந்து விட்டது. இவ்வண்ணம் உலகம் முழுதும் கைத்தொழில் பெருகினால் உற்பத்தியான சாமான்களை வாங்குவதுயார்? விவசாயத் தொழிலிலும் யந்திரம் புகுந்து கானடா, அர்ஜெண்டினா, அமெரிக்கா முதலிய நாடுகளில் அளவுக்கு மிஞ்சிய தானியங்கள் குவிந்து கிடக்கின்றன. ருஷியாவிலும் சீனத்திலும் தானியப் பஞ்சம் ஏற்பட்டிருந்தும் மேலே கூறிய நாட்டுத் தானியங்கள் தேவையுள்ள தேசங்களுக்குச் செல்ல மார்க்கம் காணவில்லை. ஆகவே உலகப் பொருளாதார விடுதலைக்குக் கருவியாகத் தோன்றிய யந்திரங்களே இப்பொழுது மக்களுக்கு யமனாகப் பரிணமித்து விட்டன. யந்திர நாகரீகம் பெருகப் பெருக மக்களின் தேவைகளும் ஒன்று பத்து நூறாகப் பெருகிக்கொண்டு போகின்றன. மேனாட்டுக் கைத்தொழில் சாமான்களை விற்பனை செய்வதற்கு மேனாட்டார் வேறொரு சூழ்ச்சியையும் கையாண்டு வருகிறார்கள். வெளி நாடுகளில் ஐரோப்பிய நாகரீகத்தைப் புகுத்தி ஐரோப்பிய சாமான்களுக்குப் புது மார்க்கட்டுகள் தேட மேனாட்டு அர்த்த சாஸ்திர நிபுணர்கள் யோசனை செய்கிறார்கள். வாஷிங்டன் புரூக்கிங் கலாசாலையில் அர்த்த சாஸ்திர போதகாசிரியரா யிருக்கும் டாக்டர் ஜி நர்ஷ் கூறுவதாவது :—

"கீழைத் தேசத்தார் ஐரோப்பிய ஆடைஅணிந்து, அமெரிக்க சிகரெட்டுகளைப் புகைத்து, அமேரிக்க மாவையும் ஆரஞ்சுகளையும் முக்கிய உணவாகக் கொள்ளும் ஒரு காலம் வரும் என்று நாம் எதிர்பார்த்தோம். அப்படியே அக்காலமும் வந்தது. அமெரிக்க சாமான்கள் மேலும் தாராளமாக விற்பனையாக வேண்டுமானல் தென் அமெரிக்காவிலும் மேனாட்டு நாகரீகம் பரவாத இடங்களில் நாம் மேனாட்டு நாகரீகத்தைப் புகுத்த அதிதீவிர முயற்சி செய்யவேண்டும்."

மேனாட்டு நாகரீகத்தைப் பின்பற்றியதினால் நாம் படும்பாட்டை எல்லோரும் நன் கறிவார்கள். சிகரட்டு, பௌண்டன்பேனா, சைக்கில், மோட்டார், மதுவகைகள் முதலிய மேனாட்டுச்சாமான்கள் நமது நாட்டை வறுமைப்படுத்தி வருவதை யார்தான் அறியார்கள். நமது குழந்தைகள் வளர வேண்டுமானால் 'மெல்லின்ஸ்புட்" இல்லாமல் முடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. முகப் பௌடர்கள் இல்லாமல் நமது பெண்கள் வெளியில் இறங்கக் கூசுகிறார்கள். பியர்ஸ் சோப்பும், பீச்சாம் மாத்திரைகளும், பிரிட்டிஷ் பிஸ்கத்துகளும்,ஜின், பீர், சாம்பெயின் வகையராக்களும் நமது நீக்கமுடியாத தேவைகள் ஆய்விட்டன. எனவே இந்தியா நாளுக்குநாள் வறுமையடைவது ஆச்சரியமா? பொ

(317-வது பக்கத் தொடர்ச்சி)

யை 12 இராசிகளாகவும், சந்திர வீதியை 27 நக்ஷத்திரங்களாகவும் பிரித்திருக்கிறார்களென்று முன்னரே கூறினோம். அவ் விருபத்தேழு நக்ஷத்திரங்களும் முறையே

| | | |
|---|---|---|
| அசுபதி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| உரோகணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசீரிடம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதையம் |
| புனர்பூசம் | விசாகம் | புரட்டாதி |
| பூசம் | அனுடம் | உத்திரட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி |

என்றழைக்கப்படுகின்ற இப்பெயர்களே தனித்தனி ஒவ்வொரு நக்ஷத்திரத்தைக் குறிப்பனவல்ல. அவைகள் நக்ஷத்திரக் கூட்டங்களைக் குறிக்கின்றன. இக் கூட்டங்கள் சந்திர வீதியில் சமதூரத்திலிராமல் (அதாவது, ஒன்றுக்கொன்று $13\frac{1}{3}$ பாகையிலிராமல்) சில பக்கங்களில் மிகவும் நெருங்கியும் சில பக்கங்களில் விலகியு மிருக்கின்றன.

சூரிய மண்டலத்திலுள்ள கிரஹகங்கள் உபகிரஹங்கள், வால் வெள்ளிகள், முதலியவைகளைப் பற்றியும் நக்ஷத்திரங்களைப் பற்றியும் நாம் ஒரு சிறிது தெரிந்து கொண்டோம். இனி இவைகளுக்கும் சாதாரணமாக நம் நாட்டில் வழங்கிவரும் பஞ்சாங்கங்களுக்கும் என்ன சம்பந்தம் என்பதைப்பற்றியும், அவைகள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன என்பதைப் பற்றியும் அடுத்த வியாசத்தில் ஆராய்ச்சி செய்வோம். (தொடரும்)

# ஆராய்ச்சிப் பகுதி

## நமது புராதன வழக்க ஒழுக்கங்களின் ஆராய்ச்சி.

[திருவாளர். வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

பண்டைக்காலத்தில் நமது முன்னோர்கள் சகல சாஸ்திரங்களையும் நீதிநூல்களையும் கற்றுணர்ந்து ஒழுக்கம் பிழையாதவர்களாய் மிகுந்த நுண்ணறிவும் ஆராய்ச்சியுமுடையவர்களாய் விளங்கியிருந்தார்கள். அவைகளை யனுசரித்தே சகல இலௌகீக ஆசாரங்களையும், அனுஷ்டானங்களையும், ஒழுக்க முறைகளையும் ஏற்படுத்தினார்கள். வெகுவாய் ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வோரனுஷ்டானத்தில் பொருத்தியே பிணைத்திருக்கிறார்கள். இவ்வனுஷ்டானங்கள் சுகாதாரம் ரஸாயன சாஸ்திரம் முதலிய தற்காலத்திய நூல்களுக்குப் பொருத்தமுடையனவாகவே யிருக்கின்றன. இம்மை மறுமைப் பயன்களை யநுசரித்தே ஒவ்வொரு இலௌகீக விஷயமும் அமைக்கப்பட்டு ஈசுரசிந்தனையும், ஆஸ்தீக புத்தியும், நம்பிக்கையும் பெருகும்படி நமது நாட்டில் விளங்கிக்கொண்டிருக்கின்றது. ஆதலால் நமது மூதாதையர்களுடைய அனுஷ்டானங்களையும் நம்பிக்கைகளையும் (புராதன வழக்கங்களை) மூடத்தனமென்றும் குருட்டுத்தனமென்றும் இகழ்ந்து கூறாமல், அவைகளி னுண்மைத்தத்துவத்தையும், அவைகளைச் செய்வதனா லடையும் நன்மைகளையும் சிந்தித்தறிந்து, புராதன வழக்க ஒழுக்கங்களைக் கைக்கொண்டொழுகி ஆசார சீலராய் விளங்க முன் வருவீர்களாக. ஆகையின் ஈண்டு நமது முன்னோர்களின் புராதன வழக்கங்கள் சிலவற்றை யாராய்ச்சிசெய் தின்புறுவோமாக:—

1. அதிகாலை எழுந்திருத்தல்:—நமது முன்னோர்கள் அதிகாலையில், அதாவது சூரியன் உதிக்க 5 நாழிகைக்குமுன் நித்திரைவிட்டெழும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள். நவீன நாகரீகம் பரவியிருமிந்நாளில் சுமார் காலை 8 மணிக்குப் படுக்கைவிட்டெழும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. இதனால் புத்தி குறைவும், சோம்பேறித்தனமும், பலவித ரோகங்களும் உண்டாகின்றனவேயன்றி, யாதொரு நன்மையும் ஏற்படுகிறதாகத் தெரியவில்லை. அதிகாலையில் துயில்விட்டெழுதலால் மனமானது தெளிவடைந்திருக்கும். புத்தி மனத்துடன் பொருந்தி விசாரித்தறியுஞ் சக்தியையடையும். பின் தெளிவு ஏற்படும். தேக சிரமம் நீங்கி நரம்புகளெல்லாம் சரியான நிலைமையை யடைந்து பரிசுத்தம் பெறும். வியாதிகளணுகா. பைத்தியகுணம் வலிகுன்றும். வாத பித்த சிலேத்துமங்கள் தத்தம் நிலையை யடையும். சுறுசுறுப்பும் ஊக்கமும் ஏற்படும். நமது தொழிலில் காலக்கிரமப்படி குறித்த நேரத்தில் பிரவேசிக்கவும் அநுகூலம் ஏற்படுகிறது தவிர, ஒரு வியாபாரத்திலோ அல்லது யாதொரு தொழிலிலோ யாவருக்கும் முன்னதாகவே பிரவேசித்து இலாபத்தையடையவும், போதிய அவகாசமும், நன்மனத் தெளிவும், வியாபார ஊக்கமும் ஏற்படுகின்றன. இதனை நோக்கியே,

"வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை"

என்று விதித்திருக்கிறார்கள்.

'கதிர்வன் எழுமுன் கடிகை யைந்தென,
மதிபெற வெழுந்து மகேசனை நினைந்தே'

என்றும் கூறியிருக்கிறார்கள். தவிர,

"புத்தியதற்குப் பொருந்தும் தெளி வளிக்கும்
சுத்தநரம்பினற்றூய்மையுறும்—பித்தொழியும்
தாலவழி வாதபித்தம் தத்தநிலை மன்னும் அதி
காலை விழிப்பின் குணம்"

என்று மருத்துவ நூலாருங் கூறியிருத்தல் காண்க. அதிகாலையிலெழுந்திருந்தால்தான் உலக விவகாரங்களைத் தெரிந்துகொள்ளவும், ஒவ்வொருவர் செய்யுஞ் செயல்களைக் கண்டறியவும் போதிய அவகாசம் ஏற்படும். நமது தொழிலில் சரியான காலத்தில் பிரவேசிக்கவும் கூடும். ஆதலால் அதிகாலையில் நித்திரைவிட்டெழுதலே மிக்க சிறப்புடைத்து.

2. கடவுளைத் தொழுதல்:—நாஸ்திகம் பரவுமிந்நாளில் அநேகர் கடவுளைத் தொழுவதையே விட்டுவிட்டார்கள். கடவுள் இல்லையென்றே கூறவும் பலர் முன்வந்துவிட்டார்கள். கடவுள் வணக்கம் குறைவென்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். கடவுள் வணக்கம் செய்தல் வீண் காலப்போக்கு என்று (waste of time) பலர் கருதுகின்றனர். இதெல்லாம் அறியாமையின் கூற்றே! தூங்கி விழித்தவுடன் கோடுவாயையும் முகம் கை கால்களையும் குளிர்ந்த ஜலத்தால் சுத்தி செய்துகொண்டு, மனமானது வேறொன்றிலுஞ் செல்லாததற்கு முந்தியே கடவுளைத் தொழும் வழக்கத்தை நமது முன்னோர்கள் மேற்கொண்டிருந்தார்கள். தூய்மையான மனப்பூசையொன்றையே கடவுள் விரும்புகிறார். அதிகாலையே மனம் தூய்மை யடைந்திருக்குஞ் சமயம். ஆதலால் அப்போது கடவுள் வணக்கஞ் செய்தலை நமது முன்னோர்கள் பல சாஸ்திரங்களிலும் இதிகாச புராணாதிகளிலும் மிகத் தெளிவாக கூறியிருக்கிறாகள். மனஞ் சலனமற்று ஒருமித்திருக்கும் நேரமாகிய அதிகாலையே கடவுள் வணக்கஞ் செய்தற்கு ஏற்ற காலம். தாமதஞ் செய்தால் பட்சிகளும் மிருகங்களும் எழுந்து ஆரவாரஞ் செய்யும்; பிறகு மனது ஒருவழிப்படாது. மனம் தெளிவடைந்து ஒரு நிலையிலிருக்கும்போதே கடவுளை வணங்கினால்தான் பலனுண்டாகும். கடவுளை எந்த எந்த வுருவாய் வேண்டுமானாலும் தியானித்து வணங்கலாம். "கடவுள் சிவலிங்க உருவமாகவாவது மானிட உருவமாகவாவது தோன்றியிருந்து அருள் செய்கிறார்" என்று சுருதிவாக்கியம் முறையிடுகின்றது. அதுபடி சிவலிங்கவுருவமாகவாவது அல்லது மானிடவுருவத்தில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றபடி தாயையும் தந்தையையுமேயாவது கடவுளாகப் பாவித்து வணங்கலாம்; குருவையுங்கூடக் கடவுளாக எண்ணி வழிபடலாம். தந்தையுந் தாயும் பக்கத்திலில்லாவிட்டால் மானதமாய் வணங்குதல் வேண்டும். நமது சாஸ்திரங்களில் கடவுள் வணக்கஞ்செய்த பிற்பாடே யாதொரு தொழிலையோ அல்லது கருமத்தையோ ஆரம்பிக்கும்படி கூறப்பட்டிருக்கின்றது. அதையொட்டியே நாம் நமது நித்தியகருமமாகிய தொழிலில் ஒவ்வொரு நாளும் பிரவேசிக்கவும், அவை யாதொரு விக்கினமுமின்றி சித்திபெறவுமே நமது முன்னோர்கள் அதிகாலையில் கடவுளை வணங்கும் வழக்கத்தைக் கடைபிடித்தொழுகினார்கள் என்பது வெளிப்படை. அதிகாலையில் கடவுளை வணங்கித் தொடங்கிச் செய்யப்படுங் காரியம் முட்டின்றி விரைவில் சித்தி பெறுகின்றதென்பது யாவரும் கண்டறிந்த அநுபவம். ஆதலால் அதிகாலையில் தூய மனதோடு கடவுளை வணங்குதல் மிக்க சிறப்புடைத்தென்பது உள்ளங்கை நெல்லிபோல் நன்கு விளங்குகின்றது. எனவே இவ்வழக்கத்தை நம்மவர்கள் யாவரும் கைக்கொண்டு சித்திபெறுவார்களென்று நம்புகிறேன். இதுகாறுங் கூறியவற்றால் அதிகாலையில் கடவுளைத் தியானித்தல் மிக்க அத்தியாவசியம் என்பது நன்கு புலனாகின்றது.

3. அதிகாலையில் குளிர்நீராடல்:—அருணோதயமாவதற்கு முன்னமே குளிர் நீராடுதல் நம் முன்னோர்களுடைய வழக்கமென்பதை யொருவரும் மறுக்கமாட்டார்கள். நீராடற் கருமம் யாவருக்கும் இன்றியமையாதது. ஒவ்வொருவரும் அதிகாலையில் ஸ்நானம் செய்தலே மிக்க சிறப்புடைத்து. வைகறையெழுந்து மலசலவிசர்சனாதிகள் முடித்துத் தந்ததாவனஞ் செய்துகொண்டு சூர்யோதயத்திற்கு முந்தியே குளிர்நீராடுதல் வேண்டும். இதனை இன்றும் சில வைதிகர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள். காலையில் குளிர் நீராடுதலால் உடம்பில் சூடு தணிந்து பசி நன்றாய் எடுக்கும். தேக ஆரோக்கியம் ஏற்படும். தேகத்தின் உள்ளிருக்குங் கருவிகளெல்லாஞ் சரிவரத் தத்தம் வேலைகளைச் செய்யும். பித்தம் கழியும். மூளை சுத்தமாகும். புத்தி தெளிவடையும். உஷ்ண சம்பந்தமான சொறி, சிரங்குகள் முதலிய நோய்கள் அணுகா. தளர்ந்த தேகம் இறுகும். விந்து கட்டும். இரத்தமானது அளவுபிரசாரம் தேகமெங்கும் பரவும். தோலைப்பற்றிய சர்மவியாதிகள் தலைகாட்டாதொழியும். இரவில் சந்திரிகை சம்பந்தப்பட்ட குளிர்ந்தநீரில் உயிர்ச்சாரசக்தி (Vital force) அதிகமாக இருக்கின்றது. ஆயுளை விருத்திசெய்யும் அமிர்தகுண சத்தும் இதில் விரவியிருக்கிறது. ஆகையினாற்றான் குளிர்ந்த நீரில் அதிகாலையில் ஸ்நானம் செய்யும்படி நமது முன்னோர் நூல்கள் கூறுகின்றன. நமது முன்னோர்கள் இதனை அநுஷ்டான வழக்கில் கொண்டுவந்திருக்கிறார்கள். சூரியன் உதித்தபின் அச்சக்தி சூரிய கிரணங்களால் பரிணமிக்கப்பட்டுக் குறைந்து போகிறபடியால் காலை ஸ்நானமே விசேடமாகக் கூறப்பட்டது. ஒருவன் மூர்ச்சையாய்க் கிடக்கும்போது கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தை அவன் முகத்தில் தெளித்தால் உடனே மூர்ச்சை தெளிந்து சுகமடைகிறான். ஒருவன் அதிக பசியுடன் களைப்பாய் வந்தவுடனே குளிர்ந்தநீரில் குளித்தானானால் களைப்பு நீங்குகிறான் ஆகையால் குளிர்ந்த நீரில் ஒருவகையான உயரிய குணம் (உயிர்ச்சாரசக்தி) இருக்கிறதென்பது புலனாகின்றது. இதனை ஆங்கிலத்தில் Life-giving energy என்றும், Universal principle of energy என்றும் கூறுகிறார்கள். நித்தியப்படி குளிர்ந்த நீரில் அதிகாலையில் ஸ்நானஞ் செய்பவர்களுக்கு இந்த உயிர்சார சக்தியின் பலன் அதிகரிக்கின்றது. அதனால் ஐசுவரியம், புத்திகூர்மை, மனத்தெளிவு, தேகாரோக்கியம், சுறுசுறுப்பு, நீடித்த ஆயுள் உண்டாகின்றன. சரீரத்திற்கு ஒரு தாவள்யத்தையுங் கொடுக்கின்றது. ஆகையால் நம்மவர்கள் யாவரும் இந்த அதிகாலை ஸ்நானத்தைக் கடைபிடித்தொழுகி நன்மைபெற்றுய்வார்களாக.

4. தூயவுடையணிதல்:—நமது முன்னோர்கள் நிதப்படி தோய்த்துலர்ந்த வெள்ளிய வஸ்திரங்களைத் தரிக்கும் நியமம் பூண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுதுள்ளவர்களோ, அந்நியமந்தவறி மனம் போனவாறு நடந்துகொள்ள முன்வந்து விட்டார்கள். குளித்தவுடனே தோய்த்துலர்ந்த புதிய ஆடையுடுத்துவதை விட்டுத் தான் முன்கட்டியிருந்த பழைய அழுக்காடையையே மீண்டும் தரித்துக்கொள்

(319-வது பக்கத் தொடர்ச்சி)

ருளாதார விஷயத்தில் இந்தியா முன்னேற்றமடையவேண்டுமானால் வெளி நாட்டுப் பொருள்களின் தேவை குறையவேண்டும். நமக்குத் தேவையான சாமான்கள் எல்லாம் இந்தியாவிலே உண்டாகவேண்டும். ஒருகாலத்திலே இந்தியா தன் தேவையைப்பூர்த்தி செய்ததுடன் வெளி நாட்டார் தேவையையும் பூர்த்திசெய்து தான் இருக்கிறது. அந்த நிலைமை மேலும் ஏன் ஏற்படக்கூடாது? இந்தியா முன்னேற்ற மடையவேண்டுமானால் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். இந்தியர்கள் துணிவு கொண்டால் ஏற்படுவதும் அசாத்தியமல்ல. இந்தியர்கள் துணிவு கொள்வார்களா? அல்லது மேலும் அடிமைகளாகவே இருந்து வாணாளை வீண்நாள் ஆக்குவார்களா?

ளும் வழக்கம் இப்பொழுது மலிந்துவிட்டது. ஆடையைத் துவைத்துடுத்தலென்பது அருமருந்தாய்விட்டது. அழுக்காடை யணிவதில் தேகாரோக்கியத்துக்குக்கெடுதல் என்பதைஇவர்கள் கருதுவதில்லை. நமது முன்னோர்கள் எப்பொழுதும் அழுக்காடை யணிவதேயில்லை. தோய்த்துலர்ந்த மடிவஸ்திரங்களே யணிந்துவந்தார்கள். இப்போதும் மடியுடுத்திக் கொள்ளும் வழக்கம் பலரிடத்துக் காணப்படுகிறது. ஒவ்வொருவரும் தங்கள் தேகசுத்தியின் பொருட்டுத் தாங்கள் உடுத்திக்கொள்ளும் உடைகளை அழுக்கில்லாமல் சுத்தமாய் வைத்தாவது துவைக்கச் செய்தாவது உடுத்திக் கொள்ளுதல் வேண்டும். "கந்தையானாலுங் கசக்கிக்கட்டு" என்னும் பழமொழி இதை முன்னிட்டே வழங்கப்பட்டு வருகின்றது. அழுக்காடையணிபவனிடம் மூதேவி வாசம்பண்ணுவாளென்பது நம் முன்னோர்களின் கொள்கை. ஆகையின் நமது ஆடைகள் எப்பொழுதும் அழுக்கின்றிச் சுத்தமாய் வெள்ளியதாயிருக்கவேண்டும். இவைகளே தேகசுகத்திற்கும், பிறமதிப்புக்கும், மனஉற்சாகத்திற்குங் காரணமாயிருக்கின்றன. துணியானது தொத்து வியாதிகளைப் பரவச்செய்யுங் குணமுடையது. வியாதிகளைப் பரவச்செய்யும் புழுக்கள் துணிகளில் அதிசீக்கிரம் ஒட்டிக்கொள்ளும். அதனால்தான் சந்தை முதலிய ஜனக்கூட்டமான பொதுவிடங்களுக்குப் போனாலும், வியாதிஸ்தர்களைப் பார்க்கச் சென்றாலும், போய்வந்தவுடன் துணியைத் துவைக்கவேண்டுமென்று விதியை ஏற்படுத்தினார்கள். பட்டு கம்பளம் முதலிய உடைகளில் இவ்வித புழுக்கள் அணுகா. ஆகையாற்றான் அவைகளுக்குத் தீட்டில்லை (தோஷமில்லை) என்று கூறுகிறார்கள். நாம் உடுக்கும் துணியை அன்னியனொருவன் தொட்டுவிட்டால் அது தீட்டாய்ப்போய்விடுகிறது என்று சொல்லுவதின் கருத்தும் இதுவே. ஒருவனிடமிருக்கும் நோய்க்கிருமிகள் நாம் அவனைப் பரிசிப்பதாலும் அல்லது அவன் நம்மைப் பரிசிப்பதாலும் நமது ஆடைகள் முதலியவற்றில் அக்கிருமிகள் ஒட்டிக்கொண்டுவந்து நம்மிடைப் பரவி இன்னல் விளைவிக்கும். அதனால்தான் நித்தியப்படி நாம் உடுக்கும் உடைகளைத் தோய்த்துலர்த்தி யணிய வேண்டுமென்று சுகாதார நூல்கள் கூறுகின்றன. இந்த அந்தரங்கத்தையமைத்தே நமது முன்னோர்கள் தீட்டு, தீட்டு என்று கூறிவந்தார்கள். இப்போது இதனுண்மை இன்னதென்றுவிளங்கிவிட்டதல்லவா? எக்காரணத்தை முன்னிட்டும் ஒருவன் தரித்திருந்த உடைகளை ஒருபோதும் நாம் உடுக்கலாகாது. "சுத்தம் சோறுபோடும்." என்னும் பழமொழியும் இங்கு நோக்கத்தக்கது. அழுக்காடையணிதலால் சோம்பலும் நோயும் உண்டாகின்றன. இது அநுபவத்திற் கண்டது ஆகையால் "வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை" என்று கூறியபடி வெள்ளிய சுத்தமான தோய்த்துலர்ந்த உடைகளையே எப்போதும் அணிய முயற்சிப்பீர்களாக.

**5. வெண்ணீறணிதல்: மதக்குறியணிதல்:—** விடியற்காலையில் படுக்கையைவிட்டெழுந்தவுடன் முகங்கால்கை சுத்திசெய்துகொண்டு வடக்குமுகம் நோக்கியிருந்து பகவத் சிந்தையோடு வெண்ணீறு (விபூதி) உளத்தூளனமாக வணிந்துகொண்டு தம் வேலைமேற் செல்லுதலும், பிறகு ஸ்நானம் முடிந்தவுடன் விபூதியோ அல்லது திருமண்ணோ அவரவர்கள் சமயாசாரத்திற்கேற்ற திரிபுண்டரமாகவோ ஊர்த்துவபுண்டரமாகவோ அணிதலும், (சிலர் கோபி சந்தனத்தை யணிவதுமுண்டு;) போஜனத்திற்குச்செல்லுமுன்பும் போஜனம் முடிந்து எழுந்தவுடனும், படுக்கைக்குப் போகும்போதும் படுக்கைவிட்டெழும்போதும் சிவசிந்தனையோடு விபூதியணிதலும், எந்தக் காரியத்திற்கு (வேலைக்கு)ச் செல்லும்போதும் வீபூதியணிந்துக்கொண்டு செல்லுதலும், நம்மவர்களுடைய பூர்வீகவழக்கமாயிருந்தது. இப்போதும் இவ்வழக்கம் சில அறிவுடைப் பெருமக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் பெரும்பான்மையோரிதை யனுசரிப்பதேயில்லை. விபூதி யென்பது சாம்பல் தானே; அச்சாம்பலைப் பூசுவது அநாகரீகச்செயலன்றோ? என்று சொல்லுகின்றனர். வேதங்களாலும் உபநிஷத்துகளாலும் சிவாகம புராண இதிகாச ஸ்மிருதிகளாலும், வீபூதி, பஸ்பம், பஸிதம், க்ஷாரம், இரக்ஷை, ஐஸ்வரியம் என்று பலவாறு புகழ்ந்தோதப்பட்ட திருவெண்ணீற்றைச் சாம்பலென்றும் மண்ணென்றும் இழித்துக் கூறுகின்றனர். இவர்கள் அறியாமையின் கூற்று என்னே? "நீறில்லா நெற்றிபாழ்" என்று ஔவைப் பிராட்டியார் கூறியிருத்தலையும் "திருவெண்ணீறணியாத திருவிலூரும்" எனவும், "அடவி காடு" எனவும் நமது வாகீசப்பெருந்தகையார் கூறியிருத்தலையும், "வெண்ணீறணிகிலாதவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே" என்று மணிவாசகங் கூறியிருத்தலையும், இவர்கள் ஒரு சிறிது மறிந்திலர் போலும். வீபூதி மேலான ஐஸ்வரியமென்பதை இவர்கள் உணரவேயில்லை. வீபூதியணிதலால் உண்டாகும் பயனையாவது, ஏன் விபூதி யணியவேண்டு மென்னு மாராய்ச்சியையாவது இவர்கள் சிந்தித்தறிந்தனரில்லை. காலையில் எழுந்தவுடன் விபூதி நெற்றியிலணிதலால் இரவில் படுக்கையிலிருக்கும் போது சிரசிலேறிய துர்நீர் முதலியவைகளெல்லாம் விபூதியால் இழுக்கப்பட்டு ஜலதோஷம், கண்வலி, தலைவலி, தலைபாரம், ஒற்றைத்தலைவலி, காது குடைச்சல், சீவடிதல் முதலிய வியாதிகளெல்லாம் உண்டாகாமல் தடுக்கிறது. ஸ்நானம் முடிந்தவுடன் விபூதி யணிதலால் தலையிலுள்ள ஈரம் மூளையைத் தாக்கிக் கெடுதி செய்யாமலும் கண் முதலிய விடங்களில் நீர் கோத்துக்கொண்டு வியாதியை யுண்டுபண்ணாமலும், நீரையிழுத்து உஷ்ணத்தை உண்டாக்கிப் பிராணாக்கினியை விருத்தி செய்கிறது. போஜனஞ் செய்கையில் குளிர்ச்சியைத் தரும் மோர் முதலிய திரவபதார்த்தங்களையும் ஜில்லிப்பை உண்டாக்கும் மற்றேனைய ஆகாரங்களையும் நாம் உட்கொள்ளுவதால் உதராக்கினி தணிந்து உள்ளாவி விளம்பி மூளையைப்பற்றி நீர் சளிப்பு, ஜலதோஷம், முதலிய இன்னல்களை விளைக்குமாதலால், அதற்காகவே போ






## பாலர் பாதுகாப்பு

### மக்கள் கேட்டிற்கு மாதா பிதாக்களே காரணம்

காப்பித் தேயிலை பானம்

[10-8-30 இந்திய மித்திரனில் கண்டது]

பெற்றோரில் பலர் தம் பிள்ளைகளை வளர்ப்பதில் அப்பிள்ளைகளின் விதிபோலாகட்டு மென்றும், எல்லாம் தெய்வ சம்மதம் போல் நிகழுமென்றும் கூறுவாருளர். 'தெய்வத்தாலாவதெனினும் முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்" என்ற திருவாக்கை யனுசரித்த படியாக எதிலும் நாம் புரியும் வேலைக்கேற்ற கூலியே கடவுளால் நமக்களிக்கப்படுவதாயிருக்கிறது. வித்திட்டால் அதனை வேண்டுமாறு காலமறிந்து பராமரித்தால்மட்டுமே விளையுமன்றித் தெய்வந்தரு மென்று சோம்பேறி நியாயம் பேசிக்கொண்டிருந்தால் விளைவெப்படியுண்டாகும்? அது போலவே, நமது மக்களுக்கும், தெய்வ கிருபையும், பிராரத்வ வினைப்பயனும் தொடர்ந்து நிற்பினும், பெற்றோரின் பக்குவ பராமரிப்பை யனுசரித்தே தெய்வ கிருபையும் வினைப்பயனும் லபிப்பதாயிருக்கின்றனவென்பதை மறத்தலாகாது. இதற்குத் திருஷ்டாந்தமாகப் பெற்றோர் சுகசரீரிகளாயிருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் சிசுவும் சுக சரீரியாகப் பிறக்கிறதும் பெற்றோர் நோயாளிகளாயிருந்தால், வாழ்க்கை நல வியவஸ்தையற்ற துராசாரிகளாயிருந்தால் பிறக்கும் பிள்ளையும் நோயாளியாகவே இருக்கநேரிடுகிறதும் பிரத்தியக்ஷ அனுபவமாயிருக்கின்றன. நமது இந்திய குடும்பங்களிற் பெரும்பாலும் முன் பிறந்த சிசுவுக்கு வருடப்பூர்த்தியாகுமுன்பே மற்றொரு சிசு பிறந்து விடுவது சகஜமாயிருந்து வருகிறது. அவ்வாறு பிறக்கும் சிசுக்களாகட்டும், அச்சிசுக்களை யீன்ற மாதாவாகட்டும் எவ்வாறு சுகதேகிகளாக நீடிய ஆயுளுடையவர்களாக இருக்க வியலும்? இதே காரணத்தால் இந்தியர்களுக்குள் சிசு மரணம் அளவிலதிகம் ஏற்பட்டு வருகிறது. ஆகையால் பிறந்த மக்கள் பூரண ஆயுளோடும், தேகாரோக்கிய திடகாத்திரத்தோடும் இருக்கப் பெற்றோரும் தமது மாம்ச இச்சையை மட்டுப்படுத்திக் கட்டில் நிறுத்திக் காலமறிந்து சேர்ந்து வர வேண்டுவதும், தேகாரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுவதும் இன்றியமையாததாகின்றன. இன்னும் கர்ப்ப வளர்ச்சி காலத்திலாகட்டும், பிரசவ காலத்திலாகட்டும், பிரசவத்தின் பிந்தியாகட்டும், தாய்மார்கள் தாறுமாறாய் நடந்துக்கொள்வதாலும் சிசுக்களை அத்தாய்மாரின் நடவடிக்கை பாதிக்கிறது. மேற்கூறிய காலங்களில் தாய்மார் தமது ஆகாராதிகளிலும், கிருக கிருத்தியங்களிலும், பிரவாசங்களிலும் மற்றெல்லாக் காரியங்களிலும் மிக்க கிரம தோரணையைக் கைக்கொள்ள வேண்டும். மகப்பேறடைந்த பின் மாதாக்கள் தம்மக்களின் சக்திக் கனுசரித்ததான இலேசும் விரைவில் ஜீர

---

(322-வது பக்கத் தொடர்ச்சி)

ஜனத்துக்கு முன்னும் பின்னும் விபூதியணிய நமது சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது. படுக்கையில் நாம் உறங்குகையில் தேகத்திலுள்ள நீறு சிரசிலேறுமாதலால் படுக்கைக்குப் போகு முன்னும் படுக்கை விட்டெழுந்த வுடனேயும் விபூதியணியும்படி விதித்தார்கள். தவிர பேய் பிசாசு முதலியவைகளணுகாம லிருக்கவும், தீக்கனா முதலிய சொற்பனாவஸ்தை பீடிக்காதிருக்கவும் திருநீறணிதல் வழக்கம். இடகலை, பிங்கலை, சுழுமுனை என்னு மூன்று நாடிகளும் சந்திக்குமிடம் புருவமத்தியஸ்தானம். இவ்விடத்தில் ஆன்மா முப்பத்தாறு கருவிகளுடன் வசிக்கும். இதுவே ஞானஸ்தானமெனப்படும். சுவாசமியங்கும் வேகத்தால் மேனோக்கியெழும் சில அம்சங்கள் ஆவிரூபமாய் மேற்கூறிய சந்தி ஸ்தானத்தையடையும். அவ்விடம் அசுத்தமுறாமல் ஆவிரூபமாயெழும் அசுத்த நீருகளை இழுக்கவே நெற்றியில் விபூதியணிய நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. நமது சுகாதாரத்தை உத்தேசித்தே முன்னோர்கள் நெற்றியில் விபூதியணிய விதி ஏற்படுத்தினார்கள். ஆகையால் யாவரும் தவறாமல் நெற்றியில் விபூதியணியும் புராதன வழக்கத்தைக் கைக்கொண்டொழுகுவீர்களாக.

(தொடரும்)

ணிக்கத் தக்கதுமான சத்துள்ள நல்லாகாரத்தையே கொள்ளவேண்டும். இதை யுத்தேசித்தே “வாய் கட்டியவளுக்குப் பிள்ளை, வயறு கட்டியவளுக்குப் புருஷன்” என்னும் பழமொழி யொன்று தமிழில் சாதாரண ஸ்திரீகளுக்கிடையேயும் வழங்கி வருகிறது. வாய் கட்டாமல் கண்டதைத் தின்று கொண்டே கோலமாகத் திரியும் தாய்மார்களின் சிசுக்கள் ஒரு போதும் சுகசரீரிகளாகவும், தீர்க்காயுளாகவும், சத்சந்தானமாகவும் இருக்க வியலாது.

இஃதிப்படியாக, இந்நாளில் எல்லாத்தாய்மாரும் தத்தம் அரும்பாலர்களுக்கு அமிர்தமெனக் கருதி காளகூட விஷக்கலப்புப் பானமொன்றை அப்பாலரின் 7-8-மாத வயது முதற்கொண்டே பருகக் கொடுத்துப் பாழ்படுத்துகின்றனர். அப்பானம் எதுவென்னில், அது தான் காப்பி தேயிலை என்னும் கொடிய விஷ சமான பானம்.

சிசுவுக்கு 6-7-மாதங் கடந்ததும், தாய்ப்பால் போதாக் குறையைக் காரணமாகக் கூறியோ, பெருத்த அனுகூலமிருக்கிறதெனக் கருதும் அறியாமையாலோ பசும் பால் அல்லது எருமைப்பால் அல்லது புட்டிப்பாலிலோ, சர்க்கரையையும் காபிக்கஷாயம் அல்லது தேயிலைக் கஷாயத்தையும் கலந்து அளவு கடந்த அன்போடும் ஆர்வத்தோடும் தேவாமிர்தமே அதுவெனக் கருதி யூட்டுகின்றனர். அச்சிசுக்களுக்கு அது வழக்கத்திலும் பழக்கத்திலும் வந்து, சின்னாளில் வயதேறவேற, அபின், கஞ்சா, கள், சாராயம் முதலிய மயக்க வஸ்துக்களை அமிர்த சமானமாக உபயோகிக்கும் மனுஷர்களை விட அதிகமாகக் காப்பிப் பைத்தியமும், தேப்பானப்பைத்தியமும் அம்மக்களைப் பாதிக்கத் தொடங்குகின்றன. அப்பானங்களால் இளம்பாலரின் ஜீரணக்கருவிகள் கெட்டு மற்ற ஆகாரங்கள் சரியானபடி ஜீரணமாகாமல் “நித்ய கண்டம் பூரணாயிசு” என்றபடி, அப்பாலர்கள் தினசரி ஒன்றில்லையேல் மற்றொன்றாக ஏதேனும் ஒரு நோயின் நேயர்களாக நாளைக் கடத்த நேரிடுகிறது. காப்பி, தேயிலைப் பானங்களால் சில பாலர்களுக்குக் கேடொன்றும் தாக்காதிருக்கக் காண்பதுவு முண்டு. அதைக் காரணமாகக் காட்டிக் காப்பிதேப்பானங்கள் தேகாரோக்கியத்திற்குரியவையென வாதாடும் பெற்றோரு முண்டு. ஆனால், அதன் பலாபலன் அப்பாலரின் ஆயுள்நாளிடையில் காட்டாமலென்னவோ விடுவதில்லை. வயதேறியபின் வரும் வியாதிகளுக்கு வேறு காரணங்கள் கூறி மழுப்பலாமாயினும், மூலகாரணம் காப்பி தேப்பானங்களே யென்பது தேர்ந்த வைத்திய நிபுணர்களின் திடமான நம்பிக்கை. காப்பி தேயிலைப் பானங்கள் மிகக் குளிர்ச்சியுள்ள சீதளப் பிரதேசங்களில் தேகத்தை எப்போதும் உஷ்ணமாக வைத்துக்கொள்ள நிமித்தம் ஏற்பட்டிருந்தது. எப்படியோ இந்தியாவைப் பிடித்த ஜென்மச் சனியால் எங்கெங்கிருந்தோ வந்து நுழைந்து பேயாய் பிரம்மராக்ஷசமாய்ப் பிடித்தாட்டுகிறது. இதை எழுதும் நாம் அந்தக் காப்பி தேப்பானங்களாலுள்ள கேடுபாடுகளை நன்குணர்ந்திருக்கிறோமாயினும், ‘தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்’ என்ற பழமொழிக் கிலக்காகவேயிருக்கின்றோ மென்பதையும், நாம் அச்சனியை விட்டு விலகப் பார்ப்பினும், சுற்றுச் சூழலால் அது நம்மை விட்டு நிரந்தரமாக நீங்க மார்க்க மில்லாதிருக்கிற தென்பதையும் விசனத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம். ‘பழம் புண்ணாளி பாதி வைத்தியன்’ என்ற முறையில் தான் நாம் அக்காப்பிதேப்பானங்களின் கேடுபாடுகளை உலகிற் கெடுத்தோதி நமது வருங்கால சந்ததிகளாவது அந்த அந்தக சமானக்குடியிலிருந்து விடுபடவேண்டுமெனவும், அதால் நமது நாடு தேகாரோக்கிய திடகாத்திரமுள்ள மக்களைப்பெற்றதாகப் பரிணமிக்கவேண்டுமெனவும் விரும்புகிறோம். இந்தக் காபிதேப்பானத்தால் நம்மக்களின் சகல சுகமும் கெட்டுக் குட்டிச்சுவராவது மாத்திரமல்லாமல் நம் நாட்டின் சம்பத்தும் நாசமாகத் தக்கபடி லக்ஷோபலக்ஷம் திரவியமும் நமது நாட்டைவிட்டு வெளியேறுகிறது. பெரும் பணம் படைத்தவர்கள்பாடு எப்படியாவதானாலும், மத்திய தரத்தவர்களும், கூலிகளும், வறிஞர்களுமாகிய நம்மவர்கள் இப்பானங்களால் அடைந்துவரும் கஷ்ட நஷ்டங்களும், தரித்திராவஸ்தையும் செப்புந்தரத்தனவாயில்லை. ஆகையால் போனது போக, இப்போதடைந்துவரும் செப்பரிய இன்னல்களொருபுறமிருக்க, இனிமேலேனும் மக்களைப் பெற்ற, பெறும் மாதாபிதாக்கள், தம்மக்களுக்கு அந்தக் காப்பி தேபானத்தின் வாசனையும் காட்டாது காப்பாற்றுவார்களானால், அஃதோர் பெருத்த தேசோத்தாரண தொண்டாகக் கொள்ளக்கிடக்குமென வினயபூர்வம் விண்ணப்பித்துக்கொள்ளுகிறோம்.

மக்களைப் பெற்றோர் தத்தம் மக்களின் குணாகுணங்களை நல்லபடி ஆழ்ந்து கவனித்து அதற்கேற்றவாறு புரிந்து மக்களை நல்வழிப்படுத்தப் பிரயத்தனப்படவேண்டும். கெட்ட பிள்ளைகளோடு சேரவிடாமலும், ஒரு கால் நிவர்த்தியில்லாத நிலையிற் சேரச்சம்பவித்துவிட்டால் என்னென்ன கெட்ட குணங்களில் தம்மக்கள் ஈடுபட்டிருக்கின்றார்களென்பதை மிகக் கவலையோடு கவனித்து எப்பாடுபட்டாவது அப்பாலரைச் சூழ்ந்த கேட்டிலிருந்து அவர்களை விடுவித்துக் சற்புத்திரராகத் தக்க வழிவகைகளை விழிப்போடு செய்யச் சிறிதும் பின்னடையலாகாது. முளையிலேயே அத்தகைய கேடுபாடுகளைக் கிள்ளியெறியாத வரையில், பிந்திய காலத்தில் பேராபத்தாக விளைந்து அப்பாலர்மட்டுமன்றி அவர்களைப் பெற்றோரும் குடும்பமும் அளப்பரிய அவதியுற நேரிடுமென்பதை மறக்கலாகாது.

இனி அது நிற்க. மக்களின் கல்வி முன்னேற்றத்தைப்பற்றிச் சற்றுச்சிந்திப்போம். படிப்பதற்கென்று பெற்றோர் தம்மக்களைப் பள்ளிக்கனுப்புகின்றனர். ஆனால் நமதுமக்கள் பள்ளிக்குப்போய்க் கல்விதான் கற்கின்றார்களா? அன்றி, கண்டகண்ட துஷ்டப் பிள்ளைகளோடு சேர்ந்துகொண்டு ஏதேனும் துஷ்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனரா என்பதைக் கவனிக்கும் பெற்றோர் மிகச் சுருக்கமெனவே கூறலாம். வருடத்திலொருமுறை தம

(325-வது பக்கம் பார்க்க)



## நாவல் பகுதி

### சிந்தாமணி யெழுதிய சித்திரம்

[கலைமகள்]

(தொகுதி ச, பகுதி ரு, 219-வது பக்கத் தொடர்ச்சி)

காரியதரிசியானவர் பேசிமுடிந்ததும் பரிசு கொடுக்கவந்த கனவான் எழுந்து உரத்த குரலில், “சென்னை ராஜதானியில் தஞ்சை நகர வாசியாகிய ஸ்ரீமதி சிந்தாமணி, வங்கநாட்டில் கல்கத்தா நகரவாசியாகிய ஸ்ரீமான் இந்திரவர்மா, இருவரும் முதற்பரிசு பெற வருக” என்று அழைக்கவும், சிந்தாமணி, தன்தோழியான சூடாமணியினாற் தொடரப்பட்டு மலர்ந்த முகத்துடன் சபைமுழுவதும் இங்ஙனது இளமையையும் [illegible]யையும் ஒப்பிட்டு ஆச்சரியப்பட எழுந்துபோய் பரிசளிப்பவர் முன்பு நின்றாள்: அவளையடுத்து அவளுக்குச் [illegible]மாய் வெற்றிபெற்ற வடநாட்டு வாலிபனாகிய இந்திரவர்மன் கந்தருவன் போன்ற அழகிய தோற்றத்துடன் நின்றான். அவ்விருவருடைய முகலக்ஷணமும் இளவயதும் அரிய வேலைத்திறமும் சபையாரை வியப்படையச் செய்தன.

பரிசளிப்பவர் ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்குச் செக் எழுதிய இரண்டு கடிதங்களை அவ்விருவர் கையிலும் அளித்து, இருவருடனும் அன்புடன் கை குலுக்கி, அவர்களுடைய நல்லதிருஷ்டத்தையும், சித்திரவித்தைத் தேர்ச்சியையும் பாராட்டியுரைக்க, இருவரும் அவரை வந்தனம் செய்து பரிசைப் பெற்றுக்கொண்டனர். அப்பொழுது அவள் சித்திரத்தைக் கண்டு, அவளைக் காணு முன்பே அவள்மீது மையல்கொண்ட இந்திரவர்மன், அவளுடைய பணிவையும், இனிய முகத்தையும் கண்டு, பின்னும் மனம் கவரப்பட்டவனாய், அவளை நோக்கித் தன்னுடன் பரிசுபெற்ற அவள் படத்திற்குச் சரிசமானமான படம் எங்குமில்லையென்றும் அவள் படத்தில் காணப்பட்ட கறையில்லாமலிருந்தால், தன் படத்தைவிடச் சாலவும் சிறப்புடையதான அவள் படத்திற்கே இரண்டு பரிசுகளும் வந்திருக்கு மென்பதில் ஐயமில்லை யென்றும் அவளுக்குச் சந்தோஷ வார்த்தை கூறினான். அவன் கூறியவற்றால் திப்பிரமையடைந்து அங்குவைத்திருந்த தன் சித்திரத்தைப் பார்த்தாள் சிந்தாமணி. அதில் இருந்தது அவள் மனதைக் குழப்பியது. அத்தனை நாள் கஷ்டப்பட்டு எழுதிய அவளுடைய அழகான சித்திரத்தின் கீழ்ப்புற முழுவதும், முதல் உருவத்தின் அரைப்பாகமும், பச்சை மை தோய்ந்து ஊறி விகாரமாகி யிருப்பதைக் கண்டு, பரிசளித்த கனவானை நோக்கி, வாய் பேச எழாமையால், கைவிரலால் படத்தைச் சுட்டிக் காட்டினாள். அதற்கு அக்கனவான் பக்ஷமாய், “பெண்மணியே! உன் படத்தின் அழகு பரீக்ஷகர்கள் மனதைக் கவர்ந்துவிட்டது. அத்துணை அழகிய படம் வரையவல்ல நீ, அவ்வளவு அஜாக்கிரதையாகப் படத்தில் ஓரமுழுவதும் உருவத்தின் கீழ்ப்பாகத்தையும் மையாற் கறைப்படுத்தியிருக்கமாட்டாய்; ஏதோ அசந்தர்ப்பத்தால் நேர்ந்ததென்று தீர்மானித்து உனக்குப் பரிசளிக்க

(324-வது பக்கத் தொடர்ச்சி)

து ஆணோ பெண்ணோ பரிக்ஷையில் தேர்ந்து மேல் வகுப்புக்கு மாற்றப்பட்டதென்று அறிவதொன்றாலேயே பெற்றோர் மட்டற்ற மகிழ்ச்சிகொண்டு மக்களை மனம்போனபடி விட்டுக் கவனியாதிருக்கின்றனர். மக்களின் கல்வியேற்றத்தைமட்டும்கவனித்து மகிழ்ந்துவிடுவதாற் பயனில்லை. கல்வியிற் கவியரசருக்கீடான எத்துணையோ பேர் எண்ணித் தொலையா துர்நடவடிக்கைகளி லீடுபட்டிருப்பதை நாம் பிரத்தியக்ஷ அனுபவத்திற் கண்டுவருகிறோம். கல்விச் செல்வம் நிறைந்த அவர்கள் துர்த்த செய்கைகளிலும் நிபுணர்களாகி நாலாவழியிலும் நாசமடையக் காரணமென்ன? அது அவர்களுடைய பெற்றோர்செய்த பெரும்பிழையின் விளைவேயன்றி வேறன்று. ஆகையால் ஒவ்வொரு பெற்றோரும் தம்மக்களின் கல்வியொன்றையே குறியாகக்கொள்ளாமல் அவர்களுடைய நடவடிக்கைகளிலும் ஆரம்பமுதலே கவலைமிக்குடையவர்களாய்த்தக்கபடி நற்சகவாசத்திலும், நன்னடவடிக்கைகளிலு மிருந்துவரத் தக்கபடி நயத்தாலும் பயத்தாலும் பழக்கிப் பண்படுத்தவேண்டும். மக்கள் செல்லும் பள்ளிக்கூடங்களுக்குப் பெற்றோர் அவ்வப்போது அவகாசம் கிடைத்தபோதெல்லாம் சென்று ஆசிரியர்களோடு அவர்களைப்பற்றி விசாரிப்பதோடு, அவர்களுடன் படிக்கும், பழகும், நேசிக்கும் மற்ற பிள்ளைகளின் நோக்கும் போக்கும் எத்தன்மைத்தெனவும் சீர்தூக்கிப்பார்த்துச் சதா தம் மக்களைச்சீர்த்திருத்தும் கவலையைத் தமது எல்லா வேலைகளோடு முக்கியமான ஒரு வேலையாகக் கொள்ளவேண்டும். இன்னும் இதைப்பற்றி விரிக்கிற் பெருகும். ஆரம்பத்திலேயே வித்தைப்போலும் வித்திடும் நிலத்தைப் போலுமே விளைவிருக்குமெனக் கூறியுள்ளோனாகையால், விசேஷமாக விரித்துரைத்தல் மிகையாகுமெனக்கருதி இத்துடன் நிற்கிறேன்.

விரும்பினர். அது மட்டும் கறைப்படாமலிருந்தால் மூன்று பரிசுகளில் இரண்டும் உனக்கே அளிக்கப்பட்டிருக்கும். உனக்கடுத்த படியாய் எழுதினாலும், இந்திரவர்மனின் படம் சுத்தமாயிருந்ததனால், மூன்றாவது பரிசு உங்களிருவருக்கும் சமமாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது என்றார்.

சிந்தாமணி அவர் கூறியவற்றைக் கேட்டும் தன் படத்திற் குற்றத்தைக் கண்டும் மதிமயங்கி மனம் பதைத்து, மூளை சுழன்றவளாய், 'அந்தோ! இது யார் செய்த கோலம்! நான் எவ்வளவோ ஜாக்கிரதையாக அனுப்பினேனே!' என்று கூவி மூர்ச்சித்தாள்.

அவளை விழாதபடி தாங்கிய அவள் தோழியும் இந்திரவர்மாவும், மேல் நடப்பவற்றைக் காணத் தாமதியாமல், காரியதரிசியிடம் விடைபெற்றுச் சிந்தாமணியின் பாட்டனாரிடம் வந்து நடந்தவற்றைத் தெரிவித்தனர். தன் அருமைப் பெயர்த்தி உணர்விழந்து கிடப்பதைக் கண்டு மனம் பதைத்த அக்கிழவரையும் இன்னும் மயக்கந் தீராத சிந்தாமணியையும் சூடாமணியின் வீட்டிற்கொண்டு சேர்த்துவிட்டு, மறுநாட்காலை வருவதாய்ச் சூடாமணியிடஞ் சொல்லிப் பிரிந்தான் இந்திரவர்மன். மூர்ச்சையோடிருந்த சிந்தாமணியைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தார் அவள் பாட்டனார். அவள் மூர்ச்சை தெளிந்து விழித்ததும், "அம்மா ஏதாவது பலகாரம் சாப்பிடுகிறாயா? இப்பொழுது எப்படியிருக்கிறது? உடம்பெல்லாம் துரும்பாய்விட்டதே, சிந்தாமணி!' என்று பரிவுடன் கேட்டார்.

"தாதா, இப்பொழுது ஒன்றுமில்லை. தாதா, யாரவ்விதம் அதைப் பாழ்படுத்தி யிருப்பார்கள்? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே! அவர் எங்கே, தாதா? அவரைக் கேட்டால் தெரியவரும்' என்றாள் சிந்தாமணி.

"சித்திரவர்மனை நேற்றுமுதல் காணோம். நேற்றிரவு சாப்பிடக்கூட வரவில்லை. தனக்கு முதற்பரிசு கிடைக்கவில்லையென்ற வருத்தத்தினால் அப்படியிருக்கிறானென்று நினைக்கிறேன். உன் ஜயத்தைக் கேட்டுச் சந்தோஷப்பட்டதும், இந்தச்செய்தியைக் கேட்டேன். நீ உடனே மூர்ச்சித்து விட்டாயாம். உன்னை வண்டியில் போட்டுக்கொண்டு நாங்கள் மூவரும் வந்துசேர்ந்தோம்".

"அவருக்கு நான் மயக்கந் தெளிந்திருப்பதைச் சொல்லி அழைத்து வாருங்கள், தாதா."

பாட்டனார் அவள் மொழிக்கு எதிர் மொழி சொல்லாமல், சித்திரவர்மனிருந்த அறையண்டை போய்ச் சிந்தாமணி அவனைப் பார்க்க விரும்புவதைத் தெரிவித்தார். இரவெல்லாம் தூங்காமல் எண்ணமிட்டு ஏங்கி யிருந்த சித்திரவர்மன், அவள் தன் சூதைக் கண்டுபிடித்து விட்டாளோ என்றஞ்சியவண்ணம் அவள் அறைக்குள் நுழைந்தான்.

அவன் வந்ததைக் கண்டு ஆவலுடன் எழுந்திருக்க முயன்றாள் சிந்தாமணி. ஆயினும், எழுந்திருக்க முடியாமல் அவ்வளவு பலவீனமாயிருந்தது அவள் தேகம். ஆகவே படுக்கையிலுட்கார்ந்தவாறு அவனை அருகே வருமாறு சைகை செய்தாள். அவள் விரும்பியவாறு அருகாமையிற் போகாமலும், வாய்திறந்து பேசாமலும் நின்றான் சித்திரவர்மன்.

அவனுடைய நடத்தை விசித்திரமாயிருந்தது சிந்தாமணிக்கு.

"அன்பரே! ஏன் அங்கேயே நிற்கிறீர்கள்? நான் எழுந்துவர முடியாமல் உடல் துவள்வதால் உட்கார்ந்திருக்கிறேனென்று உங்களுக்குத் தெரியவில்லையா?"

"ஏன்? என்ன உடம்பு உனக்கு?" என்று அவளைப் பாராமல் ஈனசுரத்துடன் கேட்டான் சித்திரவர்மன்.

"என்ன உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் மூவரும்தானே என்னை வீடு சேர்த்தீர்கள்" என்று கேட்டாள் சிந்தாமணி.

"இல்லையே நேற்றெல்லாம் நான் இவ்விடத்திற்கு வரவில்லையே! காலை ஆறுமணிக்குத்தான் வந்தேன்."

"ஏன்! எங்குபோயிருந்தீர்கள்?"

சித்திரவர்மன் பதில் கூறவில்லை. அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்கவுமில்லை. சிந்தாமணிக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் அன்பற்றிருந்தமை அவள் மனதைத் துன்புறுத்தியது.

"என்ன என் மீது கோபம்? நான் முதற் பரிசு பெற்றதற்காக உங்களுக்குச் சிறிதும் சந்தோஷமிருப்பதாய்த் தோற்றவில்லையே! என்ன காரணம்?"

சித்திரவர்மன் மனவெறுப்புடன் அவளைப் பார்த்தான்.

"சந்தோஷமில்லாமலென்ன? ஒரு பெண்ணால் தோல்வி யடைந்தவனுக்கு அவளைக் கண்டால் எவ்வளவு சந்தோஷ மிருக்குமோ அவ்வளவு எனக்கு மிருக்கிறது" என்றான்.

"ஆகா! அன்பரே! நான் முதற் பரிசு பெற்றதற்காகப் பொறாமைப்படுகிறீரா? நான் உமக்குப் போட்டியாய் ஏற்பட்டதாக நினைக்கிறீரா?" என்று திகைப்புடன் கேட்டாள் சிந்தாமணி.

"இப்பொழுதே எனக்குப் போட்டியாய் நின்று எனக்கு மிஞ்சியவளா யிருக்க நினைக்கும் நீ என்னை மணந்த பிறகு என்னை எவ்விதத்திலும் மீறித்தானே நடப்பாய்?" என்று கூறினான் அவள் காதலன்.

"ஆ! இவ்வளவு அற்பமானதா உமது அன்பு? ஏதோ எனக்குத் தெரிந்ததை எழுதினேன். அவர்கள் பரிசு கொடுத்தார்கள். எனக்கு வந்த சந்தோஷம் உங்களதாய் நீங்கள் பாவித்துச் சந்தோஷிப்பதை விட்டு, உங்களுக்குக் கிடைக்காததைப் பெற்றாளென்று உமது மனைவியையே பார்த்துப் பொறாமை கொள்ளலாமா?" என்று விசனித்தாள் சிந்தாமணி



"சிந்தாமணி! நான் ஒன்று சொல்கிறேன் கேள். நாமிருவரும் மணம் புரிவதானால் ஒரு விஷயத்தைப்பற்றித் தீர்மானமாய் நீ பதில்சொல்ல வேண்டும். நம்மிருவரில், என் திறமையும் அதிகாரமும் முன் நிற்கவேண்டுமே தவிர, மனைவியால் ஆட்கொள்ளப்பட்டு, அவள் புகழும் பெயரும் மேலோங்கி, நான் மங்கி மறைவில் கிடந்து அவளுக்குப் பின்பாட்டுப் பாடமாட்டேன். எனக்கு மனைவியாக இருக்க விரும்புகிறவள், வீட்டிற்குப் போதுமான கல்வியும், புத்தியும், திறமையு முடையவளாய், உலகத்தாரின் புகழ்ச்சியையோ நன்மதிப்பையோ ஆசிக்காதவளாய், எனக்குட்பட்டவளாயிருத்தல் வேண்டும். நான் சொல்வது உனக்கு நன்கு விளங்குகிறதல்லவா? நீ என்னை மணம் புரிந்தால், சித்திரம் எழுதுவதை விட்டுவிட வேண்டும். சித்திரம் எழுதுவதாயின் என்னை மணப்பது முடியாது. இவ்விரண்டினுள் நீ எதை மிகவும் நேசிக்கிறாயோ அதைத் தேர்ந்து சொல்" என்று குரூரமாய்க் கூறினான்.

சிந்தாமணியின் கண்களில் கண்ணீர் பெருகியது.

"இந்தப் படத்தை ஏன் எழுதினேன்? இவ்வாறு உமது மனதிற்கு விரோதமாகி விடுமென்றறிந்திருந்தால், அதை எழுதுவதைவிட, இக்கையையே துணித்திருப்பேன். இவ்வாறு நான் பரிசு பெறுவேனென்றும், அதனால் நீங்கள் அழுக்காறடைந்து, என் வாழ்க்கையில் இன்பமயமான சித்திர வித்தையை விடச்சொல்லவும் நேரிடுமென்றும் கனவிலும் நினைக்கவில்லையே! உங்களுக்காகச் சித்திர வித்தையை மறப்பது பெற்ற சேயைப் பிரிவதற்கு ஒப்பாகுமே!" என்றழுதாள்.

"நான் இரண்டிலொன்றை விடு என்று தானே சொன்னேன். நானா? சித்திரமா? நீ மிகவும் விரும்புவதெதுவோ அதைத் தேர்ந்து கொள். சித்திரவித்தையை மறக்க முடியாவிடில் என்னை மறந்து விடு."

"என்மீது இப்படி அன்பற்றுப் போய் விடலாமா? நான் உங்களை யெவ்வளவு நேசிக்கிறேனோ அவ்வளவு என் வித்தையையும் நேசிக்கிறேன் உங்களைப் பிரிந்தால் என் வித்தை எனக்கு இன்பந்தராது. சித்திரமில்லையேல் இன்பமில்லை யுலகில்."

"அப்படிக் கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசையென்றால் சரிப்படாது. நீ என்மீதுள்ள அன்பறியச் சொல். இரண்டிலொன்று கூறிவிட்டாயானால் நான் இப்பொழுதே ஊருக்குப் போகலாமென்றிருக்கிறேன்"

சிந்தாமணி ஒரு நிமிஷ நேரம் சிந்தித்தாள். பிறகு ஒரு முடிவிற்கு வந்தவளாய்த் துணிவுடன் எழுந்து, சித்திரவர்மனின் தோள்களின் மீது தன் கைகளை வைத்துத் தன் அழகிய கண்களால் அவன் முகத்தைப் பார்த்தவாறு, உறுதியாய்க் கலக்கமற்ற தெளிந்தகுரலில், "நான் உம்மைக்கலியாணஞ்செய்துகொள்ளும் அன்றுமுதல் சித்திரம்எழுதுவதில்லை என்று உம்மிடன் நான் கொண்ட காதலறியச் சொல்கிறேன். உங்கள் மீது அன்பு வைத்திருப்பது உண்மையானால், வர்ணக் கோலைக் கையினாலும் இனி எடுக்கமாட்டேன்" என்றுரைத்தாள்.

அவளை அப்பொழுது அவன் தன் கைகளால் அணைத்துக் கொள்ளாவிடில் சிந்தாமணி கீழே விழுந்துவிட்டிருப்பாள். இத்தகைய நற்குண நங்கைக்கு நாம் தீங்கிழைத்தோமே என்று சித்திரவர்மனின் மனம் பச்சாத்தாபமடைந்தது. அவன் அவளை நோக்கி இன்சொற் புகல ஆரம்பிக்குமுன், சூடாமணி அறையின் கதவைத் திடீரென்று திறந்து, "சிந்தாதணி! சிந்தாமணி!" என்று கூவியவண்ணம் உள்ளே நுழைந்தாள். அவளைக் கண்டு தன் காதலனின் அணைப்பினின்று நீங்கிய சிந்தாமணி 'என்ன விசேஷ'மென்று கேட்பதன் முன், சூடாமணி, கடுங்கோபத்துடன், ஒரு நசுக்கப்பட்ட வெள்ளியாலான வஸ்துவையும், மையில் அமிழ்ந்த ஒரு கைகுட்டையையும் சிந்தாமணியின் கையில் கொடுத்தாள்.

"சிந்தாமணீ! நீ என்னை இவ்வாறு அவமதிப்பாயென்று நான் நினைக்கவேயில்லை. நான் உனக்கு அன்புடன் அளித்த அன்னமைக்கூடல்லவா இது? இதை யிப்படி உருத் தெரியாமல் நசுக்கி, என் தோட்டத்து வடிகால் மண்ணிலேயே புதைத்து வைத்ததென்ன? வடிகாலை இன்று மண் வெட்டியால் வெட்டும்போது, இந்தக் கைகுட்டையில் சுற்றிக் கிடந்த இதை என் தோட்டக்காரன் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தான். உனக்கு அது வேண்டாமாயின் திருப்பிக் கொடுத்துவிடலாமல்லவா? இல்லாவிடில் கண் மறைவாய் உங்கள் ஊர்ச் சாக்கடையில் எறிந்துவிடுகிறதுதானே? என்னை வேண்டுமென்று அவமதிப்பதற்காகத் தானே இவ்விதம் செய்தாய்!" என்று கோபாவேசத்துடன் கூறினாள்.

அவ்வாறு செய்தது யாரென்று சொல்லாமலேயே நமக்கு விளங்கும். கண் காக்ஷிக்குப் போகுமுன் உடுப்புமாற்றுகையில் முன்பு அணிந்திருந்த சட்டைப் பையில் இன்னும் வைக்கப்பட்டு மறந்துபோன அம்மைக்கூட்டை எவரேனும் பார்த்துவிடப் போகிறார்களே என்று தோட்டத்திற்குச் சென்று ஒருகல்லால் உருத் தெரியாமல் நசுக்கி மண்ணில் மறைத்து விட்டுச் சனி ஒழிந்ததென்று நிம்மதியாயிருந்தான் சித்திரவர்மன். ஆனால் அவனொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தபடியால், அவனுடைய துரதிருஷ்டம், தோட்டக்காரனுருவாய் வந்து, அவன் குற்றத்தை வெளியிட்டு விட்டது.

முதலில் சூடாமணியின் கோபச் சொற்களால் புத்தியிழந்து சோர்ந்த சிந்தாமணிக்குத்திடீரென்று நடந்தவை முழுதும் நேரிற் பார்த்தாற் போல் விளங்கி விட்டது. மேஜை அறை திறந்திருந்த

தும், அன்று முதல் கூடு காணுமல் போனதும் அக்கூட்டிலிருந்த மையைப் போன்ற பச்சை மையே படத்தில் கொட்டி யிருந்ததும், எல்லாம் ஒன்றன்பின் ஒன்ருய்ச் சித்திரவர்மன் செய்கையை வெளிப்படுத்தின. சிறிது இருக்கும் சந்தேகமும், சித்திரவர்மனின் பெயர் பொறித்து மையில் அமிழ்ந்திருந்த அவன் கைகுட்டையால் நீங்கி, அவன் குற்றம் வெட்டவெளிச்சமாகி விட்டது. சொல்ல முடியாத சீற்றத்துடன் எழுந்தாள் சிந்தாமணி.

சித்திரவர்மன் தன் விருப்பம் கைகூடி வருகையில் தன் மோசம் வெளியாகியதைக் கண்டு, தோட்டக்காரனையும் தன் பொல்லா விதியையும் சபித்தவாறு, வெளியே போகக்கூடத் தோன்ருமல் மரமாய்த் திகைத்து நின்று விட்டான்.

சிந்தாமணி உரத்த குரலில், "தாதா! தாதா!" என்று சத்தமிட்டழைக்கவும் அவர் என்னவோ என்று பயந்து ஓடோடியும் வந்தார். அவரையும் சூடாமணியையும் விளித்துச் சிந்தாமணி நடந்தவை முழுதையும் சொன்னுள். பாட்டனுரிடம் அந்தக் கைகுட்டையையும் நசுங்கிய மைக்கூட்டையும் காட்டினுள்.

"தாதா! இவ்வளவு பொருமையும், இழிகுணமுமுள்ளவன் மீதுள்ள அன்பால், இனி வர்ணக் கோலைத் தொட்டுச் சித்திரம் எழுதுவதில்லையென்று உறுதி கூறினேன்!" என்று கண்ணீர் விட்டுரைத்தாள்.

அவள் பாட்டனுர் விவரிக்க முடியாத கோபத்துடன் எழுந்தார்.

"தாதா! நீங்கள் அவரை ஒன்றும் சொல்ல வேண்டாம். அவர் செய்தது அவர் முகத்திலேயே தெரிகிறது" என்று அவரை அடக்கிச் சித்திரவர்மனை நோக்கி, "உமது உண்மைக் குணம் வெளிப்பட்டது. இனி யும்மைக் கண்ணுல் பார்க்கவும் மனமில்லை எனக்கு. இனி நாம் ஒருவரை ஒருவர் மறத்தல்தான் நல்ல வழி. நீர் எனக்குச் செய்த தீமையை மன்னித்தேன். நீர் போகலாம்" என்று சொன்னதும், வாயிற்படியில் நின்றிருந்த ஒரு ஆடவனின் முகத்தின்மீது சென்றது அவள் பார்வை. அதே சமயத்தில் சூடாமணியும் பெரியவரும் அவள் பார்வை சென்ற இடத்தில் நேற்று அவர்களிடம் அதிக பக்ஷமாயிருந்த இந்திரவர்மா கையில் ஒரு படத்தைத் தாங்கி நிற்பதைக் கண்டு அவனை உள்ளே அழைத்தனர். அவன் சிந்தாமணியின் முகத்திலுள்ள துயரத்தைக் கண்டு என்ன விசேஷமென்று வினவினுன்.

சிந்தாமணியின் பாட்டனுர் நடந்த விவரத்தைச் சொல்லி முடிக்க, எல்லோரும் சித்திரவர்மன் நின்ற இடத்தை நோக்குகிருர்கள். அவனைக் காணும். எல்லோரும் மும்முரமாய்ப் பேசுகையிலேயே அவன் வெளியே நழுவி விட்டான். அவன் சென்றதைப் பார்த்திருந்தவள் சிந்தாமணி ஒருத்தியே. அவள் கண்களால் தன் குற்றத்தை மன்னித்தாளேனும், என்றும் மறக்கமாட்டாளென்றதைக் கண்டுகொண்டவனுய்த் தன் ஆயுட்கால முழுவதும் மனதைத் துன்புறுத்தும் நினைவுடன் அவளுடைய துயரமிகுந்த முகத்தை ஒரு முறை பார்த்துவிட்டு வெளியே சென்ருன் சித்திரவர்மன்.

சிந்தாமணி யெழுதிய சித்திரத்தின் வரலாறு முற்றுங் கேட்டபின் இந்திரவர்மன் தன் கையில் கொண்டு வந்த படத்தைப் பிரித்து அவள் முன்னர் அன்புடன் வைத்தான்.

"இப்படத்தைக் கண்டது முதல், இதை எப்படியாவது வாங்கவேண்டுமென்ற ஆவல் மிகுதியால் விலைக்கு வாங்கினேன். இதை நடுவிலுள்ள சித்திரத்தை விட்டு விட்டுத் தனித்தனியே இரண்டு படங்களாக்கி, முதற் படமாகிய 'அழகு' என்பதை என் வசமும், மூன்ருவதாகிய 'மகிழ்ச்சி'யை உன்னிடமும் இருக்க விரும்புகிறேன். என் வேண்டுகோளை மறுக்கக் கூடாது" என்று கனிந்த குரலில் கூறினுன் அவ் வாலிபன்.

"எப்பொழுது வாங்கினீரோ அப்பொழுது நீர் தான் அதற்குடையவர். அன்றியும் இனி எனக்கு "மகிழ்ச்சி" எதற்கு? "இன்பம்" இல்லாவிடில் மகிழ்ச்சி யேது? நீங்கள் இவ்வளவு நல்ல எண்ணத்துடன் செய்வதை மறுப்பதற்கு வருந்தவேண்டாம்" என்ருள் சிந்தாமணி.

"நான் உன்னிடம் எப்பொழுதுமே கொடுத்துவிடுவதாய்ச் சொல்லவில்லை. "அழகு"க்கேற்ற இன்னெரு "இன்பம்" என்னும் படத்தை மறுபடி எழுதி என்னிடம் கொடுத்தால் மூன்றும் பழையபடி பொருத்தமாகி விடும். முன்பு ஒரே படமாயிருந்தது. தனித்தனி மூன்று படங்களாக இருக்கும். நான் இச்சித்திரங்களை மட்டுமல்ல, இச்சித்திரங்களை எழுதிய திவ்விய அறிவுள்ள, கிடைத்தற்கரிய சிந்தாமணியைத் தான் வெகுவாய் விரும்பிக் கேட்கின்றேன்' என்று இனிய குரலிற் கூறினுன் இந்திரவர்மா.

"நான் இனி வர்ணக் கோலைத் தொடுவதில்லை என்று ஆணையிட்டுள்ளேன் என்பதை யறிந்தும் நீங்கள் இப்படிக் கேட்கலாமா?"

"இப்பொழுது 'அப்படி மனங்கசப்பாயிருக்கும் நிமித்தம் என் வேண்டுகோளை மறுக்கக் கூடாது. எத்தனை வருஷங்கள் கடந்தாலும், நீ இப்படத்திற்குக் குறைவானதை எழுதியனுப்புமட்டும் நான் காத்திருப்பேன். நீ 'இன்ப'த்தை என்று எழுதியனுப்புகிருயோ, அதைக் கண்டவுடன் உன்னையும் உன் வசமிருக்கும் 'மகிழ்ச்சி'யையும் பெற நான் ஓடி வருவேன்" என்று கரையிலா அன்புடன் கூறி வெளியே சென்ருன் அவ்வுத்தம குண வாலிபன்.

* * *

மேற்கூறியவை நடந்த இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகு, இந்திர வர்மாவும் சிந்தாமணியும் தமது மாளிகையில் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அவ்வறைச் சுவரில் இரண்டாவது முறையாகச் சிந்தாமணி எழுதிய 'இன்பம்'



என்னும் படம் மற்ற இரண்டு சித்திரங்களுக்கு நடுவில் மாட்டப்பட்டிருந்தது. சிந்தாமணிக்கும் இந்திரவர்மாவிற்கும் திருமண முடிந்து ஒருவருஷமாகவில்லை. கலியாணம் ஆன சில நாட்களுக்குப் பிறகு அவள் பாட்டனுர், மிக்க மனப்பூரிப்புடன் நிம்மதியாய்ப் பரலோகஞ் சென்ருர். அவருக்குப் பிறகு சென்னையி லிருக்கச் சிந்தாமணிக்கு விருப்பமில்லை.

கல்கத்தாவில் இந்திரவர்மன் சிறந்த ஒவியர்களில் ஒருவன். சிந்தாமணி, அவள் கணவன் என்ன வேண்டியும், வெளிப்படையாய்ச் சித்திரமெழுத மறுத்து விட்டாள். இந்திரவர்மனை இன்ப வெள்ளத்திலமிழ்த்திய "இன்பம்" அவளுடைய காதற்குறியென்றும், இனித் தான் பந்தயங்களிலோ பிறருக்கோ சித்திரம் வரையமாட்டாளென்றும் தீர்மானமாய்ச் சொல்லிவிட்டாள்.

அவளுடைய வாழ்க்கையை முற்றிலும் இன்பமயமாக்கிய அவள் குழந்தைகள் சிறுவர்களா யிருக்கையில், அவர்கள் அழுகையை மாற்றவும், சந்தோஷப்படுத்தவும், கண்ணிற் கண்டவற்றைச் சித்திரமாய் எழுதி விளையாட் அளிப்பாள். அவ்வளவுதான் அவளுடைய உயிர்த்தோழியாகிய சூடாமணி எவ்வளவோ முயன்று பார்த்தாள். அவளுடைய ஞாபகார்த்தமாகக் கூட எழுதவில்லை சிந்தாமணி.

இவ்வாறு, ஒரு அற்பகுண முடையவனுல் உலகம் சிறந்த ஒவியங்களை எழுதவல்ல சாமர்த்தியசாலியை இழந்தது.

அவளுடைய முதற் பரிசைப்பற்றி எங்கும் பரவிய புகழும் பெயரும் நாளடைவில் மறைந்தது. அவள் கணவனெருவனே அவளுடைய உண்மைத் திறமையை உள்ளபடி உணர்ந்து விசனமடைந்தான்.

'அவன் அதற்காக எவ்வளவு குறைபட்டாலும் எனக்கதில் நம்பிக்கையில்லை. ஏனெனில், தன்னை விடப் பெயர் பெற்ற பெண்மணியை விரும்பும் ஆடவன் உலகில் இருப்பது அசாத்தியம். ஆகவே இந்திரவர்மா எவ்வளவு தான் சிந்தாமணி பிடிவாதத்திற்காக வருந்தினுலும், ஒருபுறம் நிம்மதியுடையவனுகத் தான் இருப்பான் என்பது என் துணிபு.

முற்றிற்று


## மகம்மேரு தைலம்.

கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகளுக்கெல்லாம் இந்தத்தைலமானது மிகவும் கைகண்டது. சிரசைப்பற்றிய வாதநீர்சாலேத்நீர் மேகநீர் பித்த சுரத்தைக் கண்டித்துநேத்திரத்தில் பித்தநீராவது, மேகநீராவது, கபால



தைத்தப்பற்றியிருக்குமாகில்தலைமுழுதும்நமைச்சல், ஊரல், எரிச்சல், தலைமயிர் உதிரல், தலையில் சுண்டுகள், தலையில் ரணங்கள் இப்பேர்க்கொத்த கபால ரோகங்களை கைக்குமெய்யாய் கண்டிப்பதினுல் மகம்மேரு தைலமென்று பேர் வைக்கப்பட்டது. மேலும் மேக வெட்டையினுலாவது பித்தச் சூட்டினுலாவது உதிரம் கெட்டுப்போய் திரேகமுழுதும் ஊரல், நமைச்சல், சொரி, சிரங்கு, அழுக்குத்தேமல், தேகவரட்சி, தேகவெளுப்பு கண்களில் முகத்தில் இரத்தமில்லாமல் வெளுத்துப்போதல் இப்பேர்க்கொத்த வரட்சிகளெல்லாம் தணித்து நல்ல இரத்த ஓட்டமுண்டாக்கும்.

இந்த தைலத்தை நாலுநாளைக்கொரு முறை அதிகாலையில் தலைமுழுகவேண்டியது. அன்றையதினம் பகல் நித்திரையும் தயிர் மோர் குளுமையான பதார்த்தம் இதுகள் மட்டும் ஆகாது. மற்றபடி வேறே யாதொரு பத்தியமும் கிடையாது.

ஆழாக்கு தைலம் புட்டி ரூ. 1 8 0

## விஷ ஹரி,

தேள், பாம்பு, இதர விஷ ஜந்துக்களின்
கடியின் விஷ வேதனையை
உடனே நீக்கும்

ஆயிரக்கணக்கான ஜனங்களின் உயிர்களைப் பல கிராமாந்திரங்களிலும் வயல்களிலும் காப்பாற்றிப் பிரசித்தியடைந்து இருக்கிறது. ஒரு புட்டி உம்மிடமிருந்தால் சமயத்தில் ஒருயிரைக் காப்பாற்றலாமென்று உண்மையாய் நம்புங்கள்

விலை புட்டி 1-க்கு ரூ. 1 0 0
புட்டி 3-க்கு ரூ. 2 8 0

---

ஆனந்தா வைத்திய சாலை,
தபாற் பெட்டி நெ. 288,
சென்னை.




## குடியால் விளையுங் கேடுகள்

[திரு. ந. செம்பன்ன முதலியார் அவர்கள், நாகிரெட்டிபாளையம்]

நாகரீகத்தைக் கெடுத்துப் பெருங்கேட்டை விளைப்பது மதுபானம். மதுபானம் மனித சுபாவத்தையே கெடுத்து மிருகத்தன்மை யுண்டாக்கி விடுகிறது. மதுவானது இயற்கையிலேயே விஷம் போன்றதாகும். இதனை நன்றாகப் பரீக்ஷித்துப் பார்க்கின் பாஷாணம் என்பது இதுவே யெனச் சொல்லலாம். சாராயம், கள், பிராந்தி, விஸ்கி முதலிய வஸ்துக்களே மதுவென்னப்படும். வெறி தருவதும் வெறிதராததுமான இரண்டுவகைப் பானங்களில் இவை வெறிதரும் இனத்தைச் சார்ந்தவை. இவ்விதமாக வெறியுள்ளவை என்னும் தமிழ்ப்பதத்திற்கு 'இன்டாக்ஸிகென்ட்ஸ்' (intoxicants) என்னும் பதம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. இன்டாக்ஸிகென்ட்ஸ் என்னும் இந்த மொழி ஆதியில் (Toxicon) 'டாக்ஸிகன்' என்னும் க்ரீக் வார்த்தையினின்றும் உற்பவமானது. இப்பதத்திற்கே அப்பாஷையில் 'பாஷாணம்' என்று தான் பொருள் என்பது கற்றறிந்தோரது துணிபு.

இதனால் சாப்பிட்டவுடன் வெறியைத்தரக்கூடிய வஸ்துக்கள் எத்தனை உள்ளனவோ அத்தனையும் பாஷாண மென்றே கொள்ளலாம். இதுவே நன்கு கற்றுணர்ந்த வைத்திய நூலுடையார் துணிபு. ஆனால் முன் சொல்லியபடி பாஷாணத்தினும் மதுபானம் கொடியது. பாஷாணமானது அதனை உட்கொண்டவரை மாத்திரம் உபாதிக்கின்றது. மதுவோ அப்படியன்று; அதனை யுட்கொண்டாருடன் உற்றார், பெற்றார், உறவினர், மற்றுஞ் சகலரையும் உபாதிக்கின்றது. பாஷாணம் ஒருகால் இன்மை இன்பத்தைமட்டும் போக்குவதாகும். மதுவோ அத்தகையதன்று. இன்மை இன்பத்தையும் மறுமை யின்பத்தையும் சேரப் போக்கடிக்குந் தன்மையுடையது. இதனைக் கந்தபுராணத்துள் "கள்ளினை நுகர்வோன் கள்விலை கொள்வோன் கள்ளருந்துதற் குடன்படுவோன் கள்ளருந்துநரை மகிழ்நர் நரகில் கற்பகாலம் கிடந்தழுந்தி மல்லுறுங்கொடிய மலப்புழுவாகி மலத்தினை நுகர்ந்து பின் இறந்து வில்லுறுங்கொடியரவுரவநரகில் மீண்டு மீண்டுழன்று நாட் கழிப்பார்" என்று கூறிப்போந்த மொழியானது இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

பாஷாணம் அருந்தினரைப் பிரிதோர் மருந்தினால் மீட்டுக் கொள்ளலாகும். மது அருந்தினரையோ அம் மதுமயக்கம் தீர்ந்தாலொழிய வேறு மருந்தின் மூலம் மீட்டுக்கொள்வது அசாத்தியமேயாகும். பாஷாணம் உட்கொண்டவரை மானிட வகுப்பிற் சேர்த்துக் கொள்ளலாம். மது உட்கொண்டாரையோ, அந்தோ! ஐயறிவுடைய மாக்கள் வகுப்பிலேயும் (விலங்குகள் வகுப்பிலேயும்) சேர்த்துக்கொள்ள வகையில்லையே. பாஷாணம் புசித்தோரை நித்திரை செய்வாரோடு வொப்பிடலாம். மதுபானம் செய்தவரையோ செத்தவருக்கே ஒப்பிடவேண்டும். இதனை நன்கு விளக்கும் பொருட்டுத் தான் பொய்யா மொழிப்புலவரது "துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்னும் உயர்மொழி யானது சோதியுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. "என்னைப் பொறுத்தவரை மது அருந்துவதை விட விஷத்தைக் குடித்துவிடுவேன். விஷத்தைவிட மது அபாயகரமானது என்று தயங்காமல் கூறுவேன். ஏனெனில், விஷம் மதுவைப் போல் சன்மார்க்கத் தவறுதலுக்குக் காரணமாயிருப்பதில்லை. வெறியினால் நீசத்தனம் படைத்து அனேக நாள் கஷ்டப்பட்டுச்சாவதைவிட, உடனே செத்துப் போதல் எவ்வளவோ மேலல்லவா?" என்னும் தாமஸ் ஹக்ஸ்லி என்ற பெரியார் வாக்கியமும் போற்றத்தக்கதாகும்.

இம்மாதிரி வெறிதரக் கூடிய லாகிரியுடைய பானங்களாகிய பீர் வொயின் ஸ்பிரிட் விஸ்கி முதலிய மேனாட்டுப் பானங்களோடு நம் நாட்டுப்பானங்களாகிய பனங்கள் தென்னங்கள் முதலியவைகளும் நிலையெடுத்துக் கூத்தாடுகின்றன. மேனாட்டுப் பானங்களுக்கு அதனதன் சக்திக்குத் தகுந்தவாறு மதுசாரம் செயற்கையாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. கள்ளுக்கோ வெனில் இயற்கையாகவே மதுசாரம் உற்பத்தியாகின்றது. நாம் உண்ணும் ஆகாரம் ஒவ்வொன்றும் மாறுதலடைந்து உடலைப் போஷிக்கின்ற தென்பதற்கும் போதிய நியாயமில்லை. ஆனாலும் அஃதறவே நமது ரத்தத்துடன் கலந்து விடுகிறதன்மை தான். அப்படிக் கலப்பதால் நமக்கது ஒரு நன்மையுஞ் செய்கிறதில்லை



என்பதுமட்டுமன்று: இம்மது ரத்தத்தின் சத்தையே குறைக்கின்றது; ரத்த ஓட்டத்தையும் குறைக்கிறது. ஜீரணக்கருவிகளையும் தளரவைக்கிறது; கடைசியாக ரத்தத்தையே ஒன்றுக்கு முதவாமல் நீத்துப்போகப் பண்ணுகிறது. இக்காரணத்தினால் தான் மதுபானம் செய்யாதவர்களுக்கு ஒருகால காயம் உண்டானால் அது சீக்கிரம் குணமடைகிறது. மதுபானிகளுக்குக்காயம் ஏற்பட்டால் அக்காயம் குணமடைய வெகு நாளாவதுடன் அன்னார் மரணத்திற்கே அப்புண்கள் ஏதுவாயுமிருக்கின்றன.

இம்மதுபானமானது எக்காரணத்தைக் கொண்டும் மனித ஆகாரத்தில் ஒன்றல்ல. இது ரத்தத்தில் கலந்து ஓட்டத்தைக் குறைத்துப் 'பனையேறி விழுந்தவனைக் கடாவேறித் துவைத்தது' போல் செய்து விடுகிறது. தவிர இதை யுபயோகித்தால், தக்க அளவோடு ரஸ்தாவில் (ரோட்டில்) நடந்து கொண்டிருக்கும் தன்மையையும் நம் ஹிருதயகமலத்தையும் பாகனில்லாக் குதிரையைப் போல் முறைதவறி டிச்சுக்குழிகளிலும், சாக்கடைகளிலும், மலசல முதலிய அசங்கியங்களின் மேலும் நம்மை விழச் செய்தும், கால்கள் பின்னிக்கொண்டும் நடக்கச் செய்கிறது மன்றி, ஹிருதயத்தையும் மயங்கவும் தயங்கவும் செய்கின்றது. ஹிருதய மயக்க மேற்பட்டவுடன் அனேகம் பேர் அகால மரணத்திற் குட்பட்டுவிடுகின்றனர். அதாவது மதுவை நிறையக் குடித்துப் பனியில் படுத்திருந்தமையால் காலையில் இறந்து கிடக்கும் மனிதனே இதற்குச் சாட்சியாவான். இதுவுந் தவிர, இன்னும் பலர் கழுத்தில் கயிறு போட்டுத் தூக்கிட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டும் மாள்கின்றனர். இது அனுபவத்தில் காணத்தக்கதே. இது பற்றியே "கொக்கரிக்கும் பாம்புதனை யாட்டி வாழ்வோன் குடி கெடுக்கும் கள்ளதனைக் குடித்து வாழ்வோன் துக்கமொடு ஜனவசைக்கும் பாபத்துக்கும் துர்மரணத்துக்குமிவர் துணைப்பட்டாரே' என்ற பொன் மொழியானது எழுந்தது போலும்.

சிலர் இது களைப்பைப் போக்குகிற தென்கின்றனர். இம்மாதிரி அவர்கள் அறிவீனமாகச் சொல்வதற்குக் காரணமென்னெனின், மதுபானம் செய்தவருக்கு மெய்யுணர்வே கெட்டு விடுகிறதல்லவா? மெய்யுணர் வில்லாவிடின் அவனுக்குணர்ச்சி தானேது, வலிதானேது, களைப்புத்தானேது? அதாவது, மதுபானத்தின் வெறியால் மயங்கிக் கிடக்கும் மனிதனுக்குக் களை தீர்ந்ததும் தீராததும்தெரியாதன்றோ? இதுவே அதற்குக் காரணமாகும். இம்மதுவால், தேகத்திற்கே பல வித கெடுதலுண் டென்பதை வைத்திய சாஸ்திரத்தில் 'பாதமதிலே திமிரும் பாண்டொடு சோகைபருக்கள் வாதபித்தம் கிராணிவன் கரப்பன் பேதியிவை பொங்கியதிகரிக்கும் புத்திகெடு மேகமுண்டாம் தங்குமதுவிற்கெனவே சாற்று" என்று கூறியுள்ளபடி தேகத்திற்கே பல வியாதிகளை வருவிப்பது மதுவென்பது, தெற்றன விளங்குகின்ற தன்றோ? காதல் கவராடல், கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல் என்னும் பஞ்சமா பாதகங்களில், நடுவில் விளங்கும் இக்குடியானது ஏனைய நான்கு பாதகங்களையும் செய்யும்படி தூண்டுகின்றதன்றோ? கருணையங் கடலாம் ஸ்ரீ ராமபிரானிடம் சுக்ரீவ ராஜன் தான் சொன்ன தவணை நாளில் வராமல் தவறியது இக்குடியினாலல்லவா? இது பற்றியே கம்பர் ராமாயணத்துள்

> வஞ்சமுங் களவும் பொய்யு
> மயக்கமும் மரபில் கொட்புந்'
> தஞ்சமென் றாரை நீக்குந்
> தன்மையும் களிப்புந் தாக்குங்
> கஞ்சமெல் லணங்குந் தீருங்
> கள்ளினா லருந்தி னாரை
> நஞ்சமுங் கொல்வதல்லா
> னரகினை நல்கா தன்றே.

என்று கூறியிருப்பது நோக்கத்தக்கதாகுமன்றோ? இக்குடியினால் எத்தனையோ குடிகள் நாஸ்தியடைந்ததை ஒவ்வொருவரும் பார்த்தே யிருப்பார்கள். மது அருந்தப்போகும் மனிதனைப் பற்றி ஒரு வித்வான் கற்பனையாகக் கூறிய ஒரு உதாரணம் நம்நினைவுக்குவருகிறது. அதாவது, 'காகம்கொக்கு கனகிளி அனுமான் பேச்சுக் கிராவணன் பொரண்டான் கும்பகர்னன்' என்று கூறியிருக்கின்றார். இதன் சாரம் மது அருந்துவதற்காகக் கடைக்குப் போகும் மனிதன், கடைபோய்ச் சேரும் வரையிலும் காகத்தைப் போன்று அந்தப் புறமும் இந்தப் புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்வான்; போனதும் கையில் கிளாஸ் பிடித்தவுடன் கொக்கைப் போன்று நிமிர்ந்து நின்று எட்டிப் எப்படிப் பார்த்துக் கொண்டே வெடுக்கு வெடுக்கென்று குடிப்பான்; அப்படிக் குடித்தவுடன் கிளியைப் போன்று தலை தொங்கிக்கொண்டே குளறிக்குளறிப் பேசுவான்; கொஞ்சம் வெறியேறினவுடன் குரங்கைப் போன்ற சேஷ்டைகளைச் செய்யவும் பிடித்தது விடாமலும் பேசுவான்; மத்திம வெறியேறினவுடனே ராவணனைப் போன்ற வீரமும் தற்புகழ்ச்சியும் பேசுவான்; பூரா வெறி ஏறினவுடன் கும்பகர்ணனைப் போன்று படுத்துவிடுவான். அப்படிப்படுக்கும் இடத்திற்கோ அளவு கிடையாது. அவ்விடத்தில் மலமிருப்பினும் கவனிப்பதில்லையென்றால் மற்றது பற்றி யோசிப்பானேன்.

இம்மாதிரியிருக்கச் சிலர் மதுபானம் உடம்புக்கு ஒருவித உஷ்ணத்தையுண்டாக்குகின்றதென்று வாய் கூசாமல் மொழிகின்றனர். இது மிகவுந் தவறான அபிப்பிராயமேயாகும். 'உள்ளதும் போயிற்று நொள்ளைக்கண்ணா' என்ற பழமொழிப்படிக்குத் தேகத்தில் இயற்கையாயுள்ள உஷ்ணத்தையுங் கூட அளவுக்கு மிஞ்சியே தணித்து விடுகின்றதென்பதற்குச் சந்தேகமேயில்லை. இதற்குச் சாட்சியாகப்பிரஞ்சு நாட்டின் சக்கரவர்த்தியாகியமுதல்

நெபோலியன் சென்ற 1812-ம் ௵ ருஷிய தேசத்தை நோக்கிப் படையெடுத்துப் போனதை எல்லோரும் வாசித்திருப்பார்கள். அப்போது அந்தப் பெரிய சேனை நடக்க முடியாமல் தள்ளாடியும் சிலர் மாண்டும் பிரான்சுக்குப் பலத்த நஷ்டத்தையுண்டாக்கியது. இந்த நஷ்டத்திற்குக் காரணம் ருஷியர்கள் இவர்களை அடித்து விரட்டியதல்ல. பிரஞ்சுக்காரர் தாங்களாகவே ஓட்டம்பிடித்தனர். இவர்கள் குளிர் தாங்க முடியாமலே மாண்டனர். பிரஞ்சுக்காரர்களுக் குண்டான குளிர் ருஷியர்களுக்கு இல்லையோ வெனின், ருஷியர்கள் குளிரைச் சகிக்கும் ஆற்றலுடையவர்களாயிருந்தார்கள். பிரஞ்சுக்காரர்கள் குளிரைத் தாங்கமுடியவில்லை. இதற்குக் காரணம் அவர்களிற் பெரும்பாலோர் மதுபானிகளாக இருந்ததே. இது சரித்திர ஆசிரியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். மேலும் 1870-71-ம் வருஷம் நடந்த பிரான்ஸ்-ஜர்மானிய யுத்தத்தின் போது பிரான்ஸ் முறியடிக்கப்பட்டதற்கும் இவர்கள் குடியர்களாயிருந்ததே காரணம். இது அக்கக்ஷியில் உதவி செய்து கொண்டிருந்த வைத்தியரது மொழிகளிலிருந்து நன்கு விளங்கும். ஆதலால் குளிரைத் தீர்த்து உஷ்ணத்தை வருவிப்பதற்கு மதுபானம் என்ற சமாதானம் பொருந்தாது. இம்மதுபானத்தால் அறிவும் செயலும் மானமும் கெட்டுச் செருக்குக் கோபம் முதலிய ஆணவத்தை யுண்டாக்குமென்று

அறிவையழிக்கும் செயலழிக்கும்
    அழியாமானந் தனையழிக்கும்
செறியுமறிஞர் மதியாத
    செருக்கைவிளைக்கும் ஈன்றோலும்
முறியும்வெறுப்பு மிகவிளைக்கும்
    முனிவுவிளைக்கும் பகையஞ்சாக்
குறிகள்விளைக்கும் நகைவிளைக்குங்
    கொள்ளேல் கள்ளுண்டலை மைந்தா.

என்று கூறிப் போந்தனர் பெரியார். இதனை யோர்ந்தால், மதுபானத்தால் இத்துணைத் தீங் குண்டென்பதை நன்கறியலாம். நிற்க, மதுபானமானது உடம்மையே வரண்டுபோகும்படி செய்து விடுகிறது. கள்ளுக்கு அச்சக்தி யிருப்பதை ஒரு உதாரணத்தால் நன்கு விளக்கலாம். அதாவது ஒரு வாழைப் பழத்தை உரித்துக் கொஞ்ச நேரம் கள்ளில் போட்டு வைத்திருந்தால் சில நிமிஷங்களுக்குப் பிறகு பழத்திலுள்ள ரஸமெல்லாம் வற்றிச் சுக்குப் போலாகி விடுகிறது. இக்காரணத்தினால் தான் மதுபானிகள் மதுவைக் குடிக்கக் குடிக்க நாவரட்சி கண்டு அதிகமான மதுவைக் குடிக்கின்றனர். இல்லாவிடின் இரண்டு டம்ளர் ஜலம் குடிக்க முடியாதவர்கள் ஒரு வள்ளம் (2 பட்டணம் படி) கள்ளை எப்படி அருந்துவார்கள்? அந்தோ பாபம்! இப்படி இவர்கள் குடிப்பதால் தங்கள் கையிலுள்ள காசுகளையும் முன்னோர்கள் சம்பாதித்து வைத்திருந்த பூஸ்திதி முதலியவற்றையும் தீர்த்து விட்டு நூற்றுக்கு மாதம் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வட்டிக்குக் கடன் வாங்கிப் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டி வருகிறது. இவர்களை நம்பி இரண்டாவது தடவை யாரும் கடன் கொடுப்பதில்லை. முன் கொடுத்திருந்தவர்களும் கோர்ட்டில் தாவா செய்து வாரண்டு முதலியவற்றால் ஆளைப் பிடித்து ஜெயிலில் வைத்து விடுகிறார்கள். அப்போது அந்தப் பெண்டுபிள்ளைகள் என்ன கஷ்டப்பட வேண்டிவரும்! பரிதாபம்! பரிதாபம்! மிகப் பரிதாபமன்றோ? கடன்காரர் வாரண்டில் பிடிக்கா விட்டாலும் தான் மதுபானம் செய்ததால் உடல் வளம் குன்றிக் கூலி வேலை செய்யவும் சக்தியில்லாமல் போய் விடுகிறது. அவ்வகையிலும் அதிக துன்ப மடைய வேண்டிவருகிறது. என்ன செய்வார்கள் பாவம்? இதனால் திருடவும் ஆரம்பிக்கிறார்கள். என் செய்வது? வயிற்றுப்பாடு பெரிய பாடல்லவா? மதுபானிகள் கெடுவதல்லாமல் அவர்கள் குடும்பமும் சீர்குலைய நேரிடுகிறது.

இதனிடையே மதுபானம் செய்யாதவர்களுக்குக் கஷ்டம் வருவதில்லையா வென்ற வினா எழும்பினும் எழும்பலாம். மதுபானம் செய்யாத மனிதன் தன் துரதிஷ்டத்தால் கெட்டுவிடினும் கூலி வேலை செய்து பிழைக்கவாவது தேகவசதியும் நம்பிக்கையும் இருக்கும். மதுபானிகளுக்கோ உடல் வளமும் குன்றி அத்துடனும் நாணயம் நம்பிக்கை முதலியனவும் போய் விடுமன்றோ? இதுவே அதற்கு விடையாகும். சிறு பையனும் மதுபானம் செய்தவனைக் காணின் குடிகாரனென்ற கேவலமான சொற்களைப் பிரயோகிக்கக் காணலாம். இத்தகைய நியாயங்கள் கொத்துக் கொத்தாயிருப்பதால், ‘அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம்’ என்னும் சொல்லை ஆதாரமாய் வைத்துக்கொண்டு, எதுவும் அளவுகடந்து உபயோகிப்பதே கெடுதியாகும். ‘நாங்களோ அவ்வாறில்லை’ என்றுசிலர் தாங்கள் சொல்லுகிறவண்ணம் சிற்றளவாய் மதுவை உபயோகித்து வருகின்றனர். இம்மாதிரி மித மதுபானிகள் என்று ஒருநாமம் சூட்டிக்கொள்வதில் ஒரு பயனுமில்லை. மிதம் என்கிற சொல்லுக்கு அளவுவேண்டும். ஒருவர் காட்டுகிற அளவு மற்றொருவருக்கு ஒப்பாயிராது. ஒப்பித்தான் தீரவேண்டு மென்பது வேத விதியுமன்று; ராஜவிதியுமன்று. ஒருவனுக்கு அரைக்கால்படி கொண்டது மிதமாயிருக்கும். மற்றொருவனுக்கு ஒருபடி கொண்டது மிதமாயிருக்கும். வேறொருவனுக்கு வள்ளம் கொண்டது மிதமாயிருக்கும். இன்னொருவருக் குடம் கொண்டது மிதமாயிருக்கும். இப்பொழுது பெரு மதுபானிகளா யிருப்பவர்களெல்லாம் இரண்டொரு வருடங்களுக்கு முன் மித மதுபானிகளாகத்தானே யிருந்திருப்பார்கள். எத்தனைபேர் தங்கள் மனைவி மக்களுக்கும் தெரியலாகா தென்று ஏலம் கிராம்பு முதலியவைகளை வாயிற் போட்டுக் கொண்டு மினுக்கின மித மதுபானிகளாக இருந்தார்கள். மது தன்னைக் குடிக்கக் குடிக்கத் தாகத்தை யுண்டுபண்ணும் சக்தியுடையதா யிருப்பதால், மித மதுபானிகளாக விருந்து சீக்கிரம் பெரு மதுபானிக ளாகிவிடுகின்றனர். ஆகையால் இவ்விதகுதர்க்கமான குணங்களையும் அபிப்பிராயங்களையும்



கனவிலும் நினையாது அதனால் உண்டாகும் கெடுதிகளையும் தள்ளுவதனால் உண்டாகும் நன்மைகளையும் தீர யோசனைசெய்து அறவே இதை யொழித்து நன்மையடைய வேண்டும்.

எச்சமூகத்தாருக்கும் இது அல்லலுண்டுபண்ணுவதேயாகும். இதுநிற்க. நம் செங்குந்த சமூகங்களிருக்கும் ஊர்களில் அநேகமாய்க் குடியில்லாத ஊர் கிடைப்பதே அருமை. விசேஷ திருவிழாக் காலங்களிலும் பண்டிகை காலங்களிலும் முகூர்த்த காலங்களிலும் நம்மவர் வதியும் சிற்சில ஊர்களைத் தவிர பல ஊர்களில் (நம்மவரிருக்கும் பல ஊர்களில்) பெரிதும் மதுபான முழக்கமாகவே முழங்குகின்றது. இதனை யோசிக்கின், உபசுப்ரமண்ய வழி வந்த செங்குந்தருக்குப் பொருந்தாத செயலேயாகும். செங்குந்த சமூகம் நல்லொழுக்க மடையும்படி அவதரித்த புண்ணிய புருஷர்களாகிய செங்குந்த மகாஜன சங்கத்தாரும் மித்திரன் ஆசிரியரும் இது வரையிலும் எடுத்த ஊக்கம் போல் இன்னும் எடுத்து நடத்துவார்களானால், இக் கொடிய குடியானது அறவே ஒழிந்து குடிகளெல்லாம் வாழுமென்பதில் ஐயமில்லை.

ஆங்கில ஆட்சியில் ஆதவன் அஸ்தமிப்பதில்லை என்று ஆட்சிக்கொடியை நாட்டிய நம் ஆங்கிலேய அரசரும் இதற்கு உபகாரம் செய்தால் நம்மிந்தியத்தாய்நாடானது என்னாட்டிற்கும் பொன்னாடாய் மிளிர்ந்திலகு மென்பது திண்ணம். செங்குந்த மகாஜன சங்கத்தாருக்கும் மித்திரன் ஆசிரியருக்கும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் தீர்க்காயுளும் உண்டாகுமாறு குன்றுதோறாடிய நங் குகப்பெருமான் இன்னருள் புரிவாராக. ஸ்ரீ பாலசுப்ரமண்ய வேலாயுதக்கடவுள் துணையாகவும்.

---

# கேழ்வரகு

[‘தமிழர’சில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் எழுதியது]

கேழ்வரகு என்பது ஆகாரத்திற்கு உபயோகப்படும் தானியங்களில் ஒன்று.

இது 90 நாளில் பயிராகிப் பலனைத் தரத்தக்கது. கேழ்வரகு உஷ்ணமுடையது. மலப்பையிலும் நீர்ப்பையிலும் வேலை செய்யக் கூடியது.

ஜீரண சக்தியை அதிகரிக்கச் செய்யும். கேழ்வரகின் உஷ்ணத்தை மாற்றுதற்குப் புளித்தமோர், தயிர், நீர், சாதநீர், காடிநீர், இவைகள் நல்லது.

சரீரத்திற்குப் பலம் தருவதில் கேழ்வரகிற்கு நிகரான ஆகாரம் கிடையாது.

கேழ்வரகை உண்டு வாழும் மக்கள் நோயால் வருந்தாமல் சுகதேகிகளாய்ப் பலசாலிகளாய்க் கிராமாந்தரங்களில் மக்கட் பேற்றை யடைந்து நீண்ட காலம் உயிர்வாழ்கின்றார்கள்.

கேழ்வரகின் குணத்தை உணர முடியாத நம் மக்கள் கேழ்வரகை மலின வஸ்துவாகவும் ஏழைகள் உண்ணக்கூடியதாகவும், கேவலமாகவும் நினைத்து, உட்கொள்ள மறுத்து உண்போரையும் இகழ்கின்றார்கள்.

கேழ்வரகில் தாம்பிர சத்து அதிகமாக இருப்பதால் இரத்தத்தைச் சுத்தம் செய்வதில் முதன்மை பெற்றதாய் விளங்குகின்றது.

கேழ்வரகின் மேலாடையுடன் அறைத்த மாவைக் கஞ்சி செய்து மோர் கலந்து சாப்பிட்டால் சரீரத்துக்கு உஷ்ணத்தை உண்டு பண்ணி மலம் அதிகமாய்க் கழியச் செய்யும். ஆனால் கேழ்வரகின் மாவைப் புளிக்க வைத்துக் கஞ்சி செய்து உப்பு சாத நீர் அல்லது தயிர் மோர் சேர்த்து உண்பதனால் உஷ்ண முண்டாகாது.

சிலர் கேழ்வரகுக் கூழ் சீதளத்தை உண்டு பண்ணும்; அதனால் சலுப்பு, சுரம், இருமல் முதலான வியாதிகளால் துன்பப்படும் காலங்களில் மேற்சொன்ன கூழ் உண்பதால் கெடுதலுண்டாகின்றது என நினைக்கின்றார்கள். அன்னார்கள் கூறுவதில் சில உண்மை இருந்தாலும் அது கேழ்வரகின் தோஷமல்ல என்பதை விளக்கிக் கூறுகிறேன்.

உலகில் புளிப்புள்ள வஸ்துவில் சளிப்பு உண்டு; இனிப்புள்ள வஸ்துவில் உஷ்ணம் ஏற்படும் எனக் கூறுவது வழக்கம். இதற்கு ஆதாரமாய் வடநாட்டுச் சாத்திரங்களில் ஒன்றாகிய பிரகதாரண்ணிய உபநிடதத்தில் யாக்ஞவல்கிய முனிவர் சீடர்களுக்கு உபமானம் கூறும்போது இதைக் கூறுகின்றார்.

சன்னிபாத சுரம் சுரங்களில் கொடியது. அத்தகைய கொடிய சுரத்தால் பீடிக்கப்பட்ட ஒருவன் ‘என் உயிர் நீங்கினும் பிரியமே, எனக்குத் தயிரன்னம் தரல்வேண்டும்’ எனக் கேட்டும் நோயாளிக்கு வைத்தியன் இவ்வாறாராய்ந்து (எந்த வஸ்து புளிப்பேறியிருக்கின்றதோ) அது சலுப்பைச் செய்யும். சாதாரணமாய் சுத்த நீரில் துரும்பைப் போட்டு இரண்டு நாள் வைத்திருந்துவிடுவோமானால் அந்நீர் புளிப்பேறி அதை யுண்போருக்குச் சலுப்பைச் செய்துவிடுகின்றமையால், நீரைப் புளிப்பேறச் செய்தலினால் சலுப்புண்டு பண்ணுகின்றதேயொழிய, நீரில் எப்படி தோஷமில்லையோ அது போல பாலில் சலுப்புச் செய்யும் தன்மையில்லை. ஆனால் பாலைப் புளிக்க வைத்தலினால் உண்டாகும் தயிர் சலுப்பைச் செய்கின்றது. அத்தகைய தயிரிலுள்ள புளிப்பை மாற்றி இனிப்பாகச் செய்து, அதாவது சர்க்கரையைச்சேர்த்து விடுவோமானால், அத்தகைய சர்க்கரை சேர்ந்த இனிப்புள்ள தயிரானது நோயாளியின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதுமன்றி, வியாதியையும் அதிகப்படுத்தாமல்

குணம் செய்கின்றது என அறிந்து தயிரைத் தருகின்றனே எனக் கூறுவது எப்படியோ அது போல.

கூழ் சமைக்கத் தயாரித்த கேழ்வரகின் மாவை இரண்டு மூன்று நாள் சலம் விட்டுக் கரைத்துப் புளிப்பேற்றியபின் சமைக்கும் கூழானது சலுப்புச் செய்யின் அதைக் கேழ்வரகின் தோஷமாய்ப் பாவிப்பது நியாய விரோதமே.

நோயுற்ற காலத்தில் கேழ்வரகின் மாவும் பாலும் கலந்து கலந்து கஞ்சி காய்ச்சி யருந்தலாம். அல்லது களி, அல்வா முதலான வகையாகச் செய்து உண்ணலாம்.

களி செய்யும் விதம்:—நீரைக் கொதிக்க வைத்துக் கொதித்த ஒருபடி நீரில் காற்படி அரிசி அல்லது அரிசி நொய் கொட்டி வெந்தபின் அரைப்படி கேழ்வரகு மாவும், 1 பலம் உப்பும் கொட்டிக் கிளறிக் கொண்டுவரக் களியாகும்.

அல்வா செய்யும் முறை:—மேலாடை நீக்கி வெண்மையான கேழ்வரகின் மாவு காற்படி, நீர் அரைப்படி சேர்த்துக் கொதிக்க வைத்து முந்திரிப் பருப்பு 1 பலம், சர்க்கரை 10 பலம், நெய் 15 பலம், சேர்த்துக் கிளற அல்வாவாகும்.

ஆடை நீக்கும் வகை:—கேழ்வரகை நீருடன் உரலில் நெகிழத் தோசை மாவைப்போல் அறைத்துத் துணியில் வடிகட்டி ஒருபாண்டத்தில் தெளிய வைத்துத் தெளிந்த நீரை எடுத்துக்கொண்டு மாவை ஒரு தப்பட்டியில் கொட்டி உலரவைத்துக் காய்ந்தபின் எடுத்துப் பதனம் செய்தால், உலர்ந்த மாவைப் பொடியாக்கிச் சேகரித்து வைத்தால் புழுக்கள் உண்டாய்விடும். ஆனதால் பில்லைகளாகவே பதனம் செய்தல் வேண்டும்; இல்லையேல் சர்க்கரையையாவது அல்லது உப்பையாவது சேர்த்து விட்டால் புழுக்கள் உண்டாகா.

நான் மேல் சொல்லிய முறைப்படி அனுஷ்டிக்க ஒருவரும் முற்படமாட்டார்கள் என்பதை நான் உணர்வேனாயினும் அன்னார்கள் உண்மையை உணர்தல் நன்மை எனக் கருதியே வரையலானேன்.

1914-ம் ஆண்டு சென்னையில் (பீபில்ஸ் பார்க்கில்) கூடிய கைத்தொழில் காட்சியில் அரசாங்கத்தாரால் காட்டப்பட்ட காட்சியில் ஒவ்வொரு ஆகாரவகைகளின் முறைகளையும் பொது மக்களுக்குச் செய்து காட்டியபோது (மெல்லின்ஸ் மாவையும், ஆர்லிக்ஸ் மாவையும் செய்து காட்டும் போது) பார்லிமாவு கால்பாகமும், சர்க்கரை அரைப்பாகமும், கேழ்வரகு மாவு ஆடை நீக்கியது அரைப்பாகமும் சேர்த்துப் புட்டியில் காற்றில்லாதபடி (பாக்) நிரப்பிக் காட்டியது என் மனத்தை விட்டு நீங்கவில்லை. எனவே கேழ்வர்கு என்ற பெயரால் எந்த ஆகாரத்தை நாம் கேவலமாய் மதிக்கிறோமோ அதே ஆகாரத்தை வேறு நமக்குத் தெரியாத ஒரு பெயரால் கூறும்போது மேலான ஆகாரமாகக் கொண்டாடுகிறோம் என்பதை இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

இதனால் நமது நிலைமையை என்னென்று கூறுவது? நம் நாட்டவர்கள் இதைப்போலொத்த பல காரியங்களில் நமது பணம் பாழாவதைத் தடுக்க வழி தேடாது மந்திரிகளுக்காக ஓட்டு கொடுக்க வேண்டும் என்றுவாத விஷயங்களில் கவனம் செலுத்துகின்றார்களே. இன்னவர்களை என்னென்போம்?

உலகில் ஆர்லிக்ஸ் மாவு எல்லா வியாதியஸ்தர்களுக்கும், எல்லாக் குழந்தைகளுக்கும் மேலான ஆகாரம் என்பதை ஒப்புக்கொள்ளும் வைத்தியர்களும், டாக்டர்களும், வக்கீல்களும், பண்டிதர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், தாய்மார்களும், கேழ்வரகைத் தாழ்வான ஆகாரமாகக் கருத இடமில்லை. ஏனெனில் ஆர்லிக்ஸ்மா என்பது கேழ்வரகின்மாவே என்பதால், கேழ்வர்கு கஞ்சி குழந்தைகளை வளர்ப்பதில் மேலான ஆகாரமாய் மைசூர் பிராந்தியங்களில் இன்றும் கையாளப் படுகின்றதை நோக்குங்கள்.

கேழ்வரகின் ஆகாரத்தைப் புசிக்கும் கஞ்சம், விசாகப்பட்டினம், வால்டேர், மைசூர் முதலான நாடுகளில் நீரிழிவு ரோகம் இல்லை. தவிரவும் ஜெயிலில் செல்லும் குற்றவாளிகளுக்குக் கேழ்வரகின் ஆகாரத்தால் 6 மாதத்தில் சகல நோய்களும் நீங்கிப் பலம் பெற்று விடுதலை யடைவதை ஜெயில் அட்மினிஸ்டிரேஷன் என்னும் புத்தகத்தால் உணரலாம்.

கேழ்வரகு ஆகாரம் (டையபிடிஸ்) என்னும் வியாதியை நீக்கி விடுகின்றது.

மைசூர் மகாராஜா அவர்கள் இன்றும் கேழ்வரகால் தயார் செய்த அல்வாவை நாள்தோறும் உண்பதைச் சகலரும் உணர்தல் வேண்டும்.

கேழ்வரகு ஆகாரம் புசிக்கும் நமது ஆதி திராவிடர்களும், மற்றையோர்களும் எவ்வளவு பலசாலிகளாக விளங்குகின்றார்கள் என்பதை உணருங்கள்.

குழந்தைகளுக்கு கேழ்வரகுக் கஞ்சியைப் பேதியாகும் காலங்களில் கொடுத்தலாகாது என்பதை உணருங்கள். இதுபோலவேயே பேதியாகும் வியாதியஸ்தர்களுக்கும் குழந்தைகளுக்கும் கேழ்வரகால் செய்யப்பட்ட ஆர்லிக்ஸ் மாவை உபயோகித்தலாகாது.

கேழ்வரகுக் கஞ்சியில் தயிரும் வெங்காயமுஞ் சேர்த்துச் சாப்பிட்டால் க்ஷயரோகம் உண்டாகாது. தாமரசத்துள்ள ஆகாரமானதால் கேழ்வரகு ஆகாரம் மேலான ஆகாரம் என்பதைச் சகலரும் உணரவே இவ்வியாசத்தை வரையலானேன்.

சேர்க்கைப் பழக்கத்தால் மேலான ஆகாரத்தைத் தள்ளிக் கேடு விளைவிக்கும் உஷ்ணத்தை அதிகரிக்கச் செய்யும் (ஸ்டிமுலெண்ட்) காபி தேயிலை முதலான லாகிரிக்குச் சமமான விஷ ஆகாரத்தைக் கிராமாந்தரங்களில் அருந்த ஆரம்பித்துவிட்டதுமன்றி மேலெனவும் நினைக்கும் காலம் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் தண்ணீர்ப் பந்தல்கள்



# பயிர்களைப் பாதுகாத்தல்

(இந்தியமித்திரனில் கண்டது.)

## எறும்புகளின் தொல்லை நீங்க

மரம், செடி, அல்லது கொடியாதியவைகளின் கீழ் அல்லது மேல் எவ்விதமான எறும்புகளின் தொல்லை யிருந்தாலும், வாய் விளங்கத்தைத் தேவைப் படுவதுபோல் நல்ல தேன் விட்டறைத்துப் பாலுடன் கலந்து வேரில் நல்லபடி இரண்டு அல்லது மூன்று முறை பூசிவிட்டால் எவ்வித எறும்பும் அண்டாது.

## புழுக்களின் தொல்லை நீங்க

காய், கனியாதியவைகள் தரும் மரங்களிலும் செடி, கொடிகளிலும் புழுக்கள், நசுவன் என்னும் ஒருவித நாற்றப்பூச்சிகள், கறையான் போன்ற வேறுவித சிறு பூச்சிகள் ஆதியவை பற்றிக் காய்கறிகளிலும், கனிவர்க்கங்களிலும் உள் நுழைந்தும் மேலே பற்றியும் பாழ்படுத்தி வருவது கண்கூடு இவ்வித உபத்திரவமுள்ள மரம், செடி, கொடியாதிவைகளின் காத்திரத்திற் கேற்றவாறு பருமனுள்ள துத்தநாகக் கம்பியும், செப்புக் கம்பியும் சேர்த்துப் பின்னி அவ்வித மரம், செடி, கொடிகளின் ஆணிவேர் அல்லது பெரிய வேர்கள் எதிலேனும் சுற்றிப் பிணைத்து மண்ணிட்டு மூடிவிட வேண்டியது. இவ்வாறு செய்வதால், புழுக்களின் உபத்திரவம் தீர்ந்து அப்பயிரும் அதிலுண்டாகும் விளைவும் சுத்தப்படும்.

## பலா மரங்கள்

இந்நாட்டில் பலா மரங்களில் பலவிதநோய்பற்றி மரங்கள் செழிப்பற்றும், அம்மரங்களில் காய்க்கும் காய்கனிகளும் சொத்தையாகவும் புழுக்கள் மலிந்து யாதொருவித பயன் தராததாகவுமிருந்து வரக் காணுகிறோம். அத்தகைய மரங்களுக்கு மேலே சொல்லியபடி துத்தநாகக் கம்பியும் செப்புக்கம்பியும் சேர்த்துப் பின்னி வேரில் கட்டுவதல்லாமல், கோரைக்கிழங்கு, வாய்விளங்கம் இரண்டையும் சமஎடையாகப் பொடித்துப் பசுவின் மூத்திரத்திற் கலந்து வேர்களுக்கு ஊட்டி மண்ணிட்டு மூடவும். இவ்வாறு செய்வதால் பலாக்காய்கள் பழுதின்றிக் காய்த்துப் பழுக்கும். மேலும் பலாப் பழங்கள் அதிக ருசியுள்ளதாகவேண்டுமானால், கமுகமரப்பட்டை அதாவது பாக்குமரப் பட்டையைப் பலாமரத்தின் அடி மரத்தில் சுற்றிவைப்பதோடு பலாமரத்தைச் சுற்றிலும் ஒரு அடி ஆழம் ஒரு அடி அகலம்வீதம் குழிதோண்டிக் கொத்திவிட்டு நெல்லின் கருக்காய் அதாவது நெற்பதர்களைச் சமமாகக் கால்அடி மட்டத்திற்குக் குறையாமல் கொட்டி மண்ணிட்டு மூடி நீர் வார்த்து வரவும்.

---

(332-வது பக்கத் தொடாச்சி)

போய் காபி ஓட்டல்களாகிய சாராயக் கடை அதாவது லைசன்ஸ் இல்லாத சாராயக் கடை எங்கும் பரவி மக்களை நோய் வாய்ப்பட்டுழல ஏற்பட்டுவிட்டது.

---

# தேர்தல் வெற்றி

## இராஜாங்க சபை

சென்னை மகமதியர் தொகுதிக்கு ஸையத் பாக்ஷா சாகிப், சென்னை மர்காணத் தொகுதிக்கு ராஜா சர் அண்ணாமலை செட்டியார், ஸர் ஸி. பி. இராமசாமி ஐயர், கே. வி. ரங்கசாமி ஐயங்கார், திவான் பகதூர் ஜி. நாராயணசாமி செட்டியார்.

## இந்தியா சட்டசபை

சென்னை நகரத் தொகுதிக்கு திவான்பஹதூர் ஏ. இராமசாமி முதலியார்; சென்னை நிலச்சுவான்கள் தொதிக்குக் கோல்லங்கோடு இராஜா.

## சென்னைச் சட்டசபை

சென்னை நகரத்துக்கு ராவ்பகதூர் டாக்டர் ஸி. நடேச முதலியார், ஆர் மதனகோபால் நாயுடு, டி. சுந்தரராவ் நாயுடு, சுவாமி வெங்கடாசலம் செட்டி; ஆங்கிலோ இந்தியர் தொகுதிக்கு ஜே. ஏ. டேவிஸ்; மகமதியர் தொகுதிக்கு ஹமீத்தகான்; திருச்சி நகரத் தொகுதிக்கு கே. சிங்கமய்யங்கார்; திருச்சி கிராமத் தொகுதிக்கு மீனம்பள்ளி ஜமீன்தார் கே. சி. எம். வெங்கடாசல ரெட்டியார், எம். ஆர். சேதுரத்னமய்யர்; திருநெல்வேலி நகரத் தொகுதிக்கு ரங்கநாத முதலியார்; சேலம் கிராமத் தொகுதிக்கு ராவ்பகதூர் எல்லப்ப செட்டியார், கே. ஏ. நாச்சியப்ப கவுண்டர்; தெற்கு நிலச் சுவான்கள் தொதிக்குத் சமராஜ பாண்டிய நாயக்கர், டாக்டர் சுப்பராயன்; சர்வகலாசாலைத் தொகுதிக்குத் டி. எஸ். இராமசாமி ஐயர்.

# செங்குந்த யாத்திரைவாசி

## கந்தமாதனத்தில் யான் கண்ட காட்சி அல்லது ‘நவவீரர் அவதாரம்’

அன்பர்களே! நறுமணத்தில் பூசைக்கார முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய செங்குந்தர் பொதுக் கூட்டத்தில் நமது தலைச் சங்கப் பிரசாரகரும் பிறரும் சொற் பொழிவாற்றுவார்கள் என்று கேள்விப்பட்டுச் சென்று என்னை யாரும் கண்டு கொள்ளாவண்ணம் யான் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தேன் என்றும், தலைவர் தமது முன்னுரைக்குப் பின் கோடிலிங்க முதலியார் என்னும் வயோதிகரை ‘நவவீரர் அவதாரம்’ என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொண்டார் என்றும், வயோதிகரும் எழுந்து ‘குலம்பொல்லேன்’ எனத் தொடங்கும் அப்பர் சுவாமிகள் தேவாரத்தை ஓதித் தாம் முன்னரே எழுதிவைத்திருந்த ஒரு நோட்டுப்புத்தகத்தைப் பார்த்து வாசிக்க ஆரம்பித்தார் என்றும் சென்றமாத மித்திரனில் கூறியுள்ளேன்.

இப்போது கோடிலிங்க முதலியார் அவர்கள் வாசித்த ‘நவவீரர் அவதார’த்தின் சாராம்சத்தைச் சொல்லுகிறேன். இதை மித்திரன் நேயர்களாகிய நீங்கள் கவனித்து வாசிக்க வேண்டுகிறேன். சோதரர்காள்! நீங்கள் வாசித்தால் மாத்திரம் போதாது; பிறருக்கும் தெளிவாகச் சொல்ல வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### 1. தோற்றுவாய்ப் படலம்

உலகம் போற்றும் உத்தம செங்குந்த சிகாமணிகாள்! யான் சுமார் 50 வருஷங்களுக்கு முன் கண்ட ஓர் அதிசயக் காட்சியை இன்று உங்களுக்கு வெளிப்படுத்த முன்வந்துள்ளேன். யான் கண்ட காட்சி அதிசயமானதென்பதில் ஒரு சிறிதும் ஐயமின்று. கண்டு 50 வருஷங்கள் ஆனபோதிலும் எனக்கு அது இன்றும் புதிதாகவும் அதிசயமாகவுமே இருக்கிறதென்றால், உங்களுக்கும் அவ்வாறே இருக்குமென்பதில் எனக்கு யாதொரு சந்தேகமுமில்லை. உங்களில் அநேகர் அதை உண்மை என நம்பாமலுமிருப்பீர்கள். அதைப்பற்றி எனக்கு அவசியமில்லை. என் கடமையாகக் கருதியதை நான் செய்யப் பின் வாங்கேன். யானும் என் தகப்பனுரு மாத்திரமே இதை அறிவோம். கண்ட தினமே என் தகப்பனாரிடம் சொன்னேன். மற்ற யாரிடத்தும் இதுவரையில் சொன்னேனில்லை. அப்போது எனது தந்தையார் என்னைப் பார்த்துக் குலுங்கக் குலுங்க நகைத்து, “அடே பயலே, இது தானா உனக்கு இரவும் பகலும் எண்ணம்! பயித்தியம் பிடித்துவிடும்போலிருக்கிறதே!! என்னிடத்தில் சொல்லியதுபோல் மறுபடியும் யாரிடத்தும் சொல்லாதே. உன்னைப் பித்தம்பிடித்தவனென்று சொல்லிக் கேலி செய்வார்கள். படிக்கிறவனுக்கு இந்த வீண் யோசனை எல்லாம் ஏன்?” எனப் பலவாறு சொல்லிக் கடிந்து பேசினார்.

அவர் அவ்வாறு பேசியது அப்போதே எனக்குப் பிடிக்கவில்லை. யான் அப்போது சிறுவனானையால் தர்க்கித்துப் பேசவும் முடியவில்லை. எனது தந்தையார் ஆங்கிலத்திலும் தமிழிலும் மிக்க வல்லவர்; ஷேக்ஸ்பியர் பாடஞ் சொல்லுவதில் பேர்போனவர்; திருக்குறள் சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய பண்டைத் தமிழ் நூல்களில் நிகரற்றவர்; சமஸ்கிருதத்தில் சொற்ப ஞானமே உண்டெனினும், பல சாஸ்திரிகளோடு நெருங்கிப் பழகியவராகையால் தர்க்கம், வேதாந்தம், சாகுந்தலம் முதலிய வடமொழி நூல்களில் நல்ல பயிற்சியுள்ளவர். சித்தாந்த சாஸ்திரங்கள் அவருக்குத் தண்ணீர் பாட்டை. என்றாலும் சைவாபிமானமும் குலாபிமானமும் அவருக்கு வெகுதூரம். இதனால் தெய்வ பக்தி இல்லாதவரென்று எண்ணி விடாதீர்கள். அவர் பிரம சமாஜத்தைச் சேர்ந்தவர். விக்கிரக ஆராதனை அவருக்குப் பிடிக்காது. நியமம் தவறாது இருபோது கடவுளைத் தியானிப்பவர். தேசீயக் கொள்கையுடையவர். இயற்கையாகவே சைவப் பற்றும் குலப்பற்றும் உடைய எனக்கு அவரது போக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் உலக அநுபவம் நிறைந்த தந்தையார் சொல்லை அலக்ஷியம் செய்வது பெருந் தவறாகுமெனக் கருதிச் சிறிது யோசித்தேன். ‘ஆம். இதை வெளியே சொன்னால் நம்மைப் பயித்தியக்காரன் என்றுதான் சொல்லுவார்கள்’ என்ற முடிவுக்கு வந்து, யாரிடத்தும் சொல்லக்கூடாது என்றே தீர்மானித்துவிட்டேன்.

அவ்வாறாயின் இப்போது மாத்திரம் ஏன் சொல்ல முன் வந்தீர்? என்று நீங்கள் கேட்கலாம். அன்பர்களே! யான் சென்ற 50 வருஷங்களாக யாரிடத்தும் சொல்லாமலிருந்தாலும் அது என் மனதை விட்டு நீங்கவே இல்லை. ஒரு காலத்தில் கண்டது நாளடைவில் பையப் பைய மனதிலிருந்து கழன்று போவது இயற்கை. ஆனால் இது என் மனதில் பூராவும் குடிகொண்டு அடிக்கடி என் முன்னே அப்போதுதான் நடப்பதுபோல் தோன்றி நாளுக்கு நாள் புதிது புதிதாகவே இருந்து வந்தது. அதனால் யான் ஒரு பெரும் பாரத்தைத் தாங்கிக் கொண்டிருப்பவனைப் போலவே காலங் கழித்து வந்தேன். சுமையை எப்போது இறக்கலாமென்று சென்ற பத்து வருஷங்களாக எதிர்பார்த்து வந்தேன். சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக நம் சமூகத்தவரிடையே தோன்றியிருக்கும் புத்துணர்ச்சியைக் கண்டு ‘இதுவே தக்க சமயம்; நாம் கண்ட காட்சிக்கும் இப்போதைய நிகழ்ச்சிகளுக்கும் ஒருவாறு பொருத்தமிருக்கிறது; சிலராவது நம்புவார்கள். நமக்கோ வயது 66 க்கு மேல் ஆய்விட்டது. நாயனார் ‘நெருநல் உளன் என்பான் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகம்’ என்றார். தாயுமானாரும் ‘இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடம் இல்லை’ என்றார். உத்தி அநுபவங்களும் அவ்வாறே இருக்கக் காண்கிறோம். ஆகையால் சொல்லிவிடவேண்டும் என்று தீர்மானித்து விட்டேன். தீர்மானித்த போதே பாதிச் சுமை கழிந்தது போலாயிற்று. எழுத எழுதக் குறைந்து கொண்டே வந்தது. இன்றோடு முழுச் சுமையும் கழிந்து விடுகிறது.

சிவ குமாரர்களே! என் வயதை முன்னமே குறித்துள்ளேன். யான் சொல்லப் போவதோ சுமார் 50 வருஷங்களுக்கு முன் நிகழ்ந்ததோர் நிகழ்ச்சி. அப்போது எனக்கு 15 அல்லது 16 வயதிருக்கலாம். வருஷம் சரியாய்ச் சொல்ல முடியவில்லை. நிகழ்ந்தது மகாசிவராத்திரியன்றாகையால், மாதம் மாசி என்று மாத்திரம் ஞாபகமிருக்கிறது. நீங்கள் யான் சொல்லுவதை உண்மை என்று நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி. எனக்கு அதைப் பற்றிக் கவலையே இல்லை. கண்டதைக் கண்டபடியே சொல்லிவிடுகிறேன். என் சொந்த கற்பனை ஒன்றுமில்லை. சொல்ல ஆரம்பிக்குமுன் யான் ஒரு செங்குந்தன் என்பதையும், 30 ஆண்டுகள் அரசாங்க உயர்தர உத்தியோகஞ் செய்து பின்னர் காருண்ய கவர்ண்மெண்டாரிடம் உபகாரச் சம்பெற்றுத் துறவறம் பூண்டு தற்போது ஒருகுக்கிராமத்தில் ஒரு சிறு ஆச்சிரமம் அமைத்து அதில் ‘முருகா’ என்று தியானம் செய்து கொண்டு நிர்ச்சிந்தையாய்த் திடகாத்திரத்தோடு இருந்து வருகிறேன் என்பதையும், இதே மாதிரி இன்னும் அநேக ஆண்டுகள் யான் வசிக்க இயலும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### 2. நாரத முனிவர் வருகைப் படலம்

சுமார் 50 வருஷங்களுக்குமுன், அதாவது எனது 15 அல்லது 16 வது தயதில் மாசிமாதம் சிவராத்திரி யன்று மாலை எங்கவ வீட்டில் பிள்ளையார் பூஜை செய்து விட்டு 8 மணிக்கு ஸ்ரீ பெண்ணினல்லாள் சமேத தீவண்ணத் தீசர் திருக்கோயிலுக்குச் சென்று நீறணிந்திலங்கும் நிமலன் தன்னை, கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை, மலமறுத்தாட்கொளும் மலையமர் கொழுந்தை, இமயக் கொடிபடர் எழிலுறு தாணுவை, அன்பெனும் வலையில் அகப்படும் அறிவை என் கண்ணுறக் கண்டு களித்து, என் வாயாறப்பாடி, திருக்கோயில் வலம் வந்து, சிறிது நேரம் சிவனடியார்களோடு தேவார பாராயணஞ் செய்துவிட்டு $11\frac{1}{2}$ மணிக்கு வீட்டிற்குத் திரும்பி வந்தேன்.

எங்கள் வீட்டின் முன்னர் ஒரு விசாலமான முற்றம் உண்டு. அதில் யான் வாசிப்பதற்காகத் தனியே ஒரு அறை அமைத்துக் கொடுக்கப் பெற்றிருந்தது. என் குரு மூர்த்தி எனக்குப் பஞ்சாக்ஷரம் உபதேசித்தருளிய சிவராத்திரி யாகையால் யான் அவ்வறைக்குள் சென்று, ஒருமுறை திருமுருகாற்றுப் படையை ஓதிவிட்டுத் திருவாசகம் படித்துக்கொண்டிருந்தபோது என்னையும் அறியாது உறங்கிவிட்டேன். உடனே சொற்பன உலகம் புகுந்தேன். யானிருந்த அறையின் வெளிப்புறத்தே பளீரென ஒரு பேரொளி தோன்றிற்று. அதை என்னவென்று பார்க்கப் பரபரப்புடன் வெளியே சென்றேன். சென்று என்ன கண்டேன்? தேஜோமயமானவிமானம் ஒன்று வானத்திலிருந்து கீழே இறங்கக் கண்டேன். அது என் எதிரில் வந்து தங்கிற்று. யான் பேராச்சரியங் கொண்டு, செயலற்று, என்னை மறந்து நின்றேன். அப்போது விமானத்திலிருந்து சடைமுடி தரித்த ஒரு பெரியவர் தமது சொர்ணமயமான சரீரத்தில் காவியாடையும், விபூதிப் பூச்சும், உருத்திராக்கதாரணமும் பூண்டவராய்க் கையிலேயோகதண்டம் தாங்கி மலர்ந்த முகத்தோடு என்னை நோக்கி வந்தார்.

பதுமைபோல் அசையாது நின்ற யான், பெரியவர் என்னை அணுகுவதைக் கண்டு ‘சுவாமிகள் வரவேண்டும், வரவேண்டும், வரவேண்டும்’ என்று சொல்லி இன்பமுகங் காட்டி எதிர் சென்றேன் அவர் ‘குழந்தாய்! சுகமா?’ என்று கேட்டுக் கொண்டே என்னுடன் அறைக்குள் வந்தார். யானும் ‘தங்களைப் போன்ற பெரியோர்கள் அநுக்கிரகமிருக்கையில் அடியேனுக்குக் குறையுமுண்டோ’ என்று தடுமாற்றத்தோடு பதில் சொல்லிக் கொண்டே பெரியோர்களுக்கென யான் பிரத்தியேகமாய் வைத்திருந்த ஆசனத்தில் அவரை எழுந்தருளச் செய்து உபசரித்தேன். அடுத்த இரண்டொரு நிமிஷம் மௌனமாயிருந்து ‘இது யாராயிருக்கலாம்? ஒரு சமயம் நம்மையாளுடைய கறைமிடற்றண்ணலைக் கோயிலுக்குச் சென்று இப்போது தரிசித்த என்னையும் ஒரு பொருளாகக் கருதி என்னிருப்பிடம் தேடிவந்து என்னைக் காணலே (To pay a return visit) தகுதி யெனக் கருதி வந்தனரோ?’ என நினைத்து அடிபணிந்து நின்று, ‘சுவாமிகள் யாரோ? எவ்விடத்ததோ!’ என விண்ணப்பித்து நின்றேன். பெரியவர் புன்னகை செய்து “அப்பா, யான் திரிலோகசஞ்சாரி. என் பெயர் நாரதன். புண்ணிய காலமாகையால் செந்தமிழ் மணக்கும் தென் தமிழ் நாட்டிடைக் கந்தனைப் பயந்த எந்தையைக் கண்டே வந்தனை செய்வான் வந்தனன் யானே. திரும்பி வானத்தே செல்லுங்கால் இங்கு விமானம் தடையுற்றது. விசேஷம் அறியக் கீழிறங்கினேன். என் விமானம் தடையுறு மிடத்து யான் இறங்கி அங்கு உற்ற விசேஷத்தை அறிய வேண்டியது என் கடமையாகும். பஞ்சாக்ஷர உபதேசம் ஈராண்டுகளுக்கு முன்னர் பெற்ற உனக்கு ஞானோபதேசம் செய்ய வாய்த்த தருணம் இதுவேயாகும்” என்று சொல்லி

என்னை அருகே அழைத்து என் சித்தம் தெளிவடையுமாறு விளங்க உபதேசித்தருளினர்.

உபதேசிக்கப் பெற்ற யான் உடனே 'சுவாமிகளே! இதுவரையில் சத்தப் பிரமாணத்தால் (நூல் வாயிலாகவும், பெரியோர் வாயிலாகவும்) மாத்திரமே தங்களை அறிவேனேயொழிய பிரத்தியக்ஷத்தில்கண்டேனில்லை. இன்றுகண்டுகளிப்பெய்தினேன்' எனப் பலவாறு எனது ஞானாசிரியராகிய முனிவரை ஸ்தோத்தரித்து, 'சுவாமிகள் இங்கிருந்து எங்குபோக உத்தேசித்திருக்கிறதோ?' எனப் பணிந்து வினவினேன். முனிவர் 'குழந்தாய்! இப்போது யான் ஸ்ரீ முருகப் பெருமானைத் தரிசிக்கும் பொருட்டுக் கந்தமாதனம் செல்கின்றேன்' என்றார். 'அவ்வாறாயின் யானும் சுவாமிகளோடு வரலாமோ? திருவுளம் எப்படியோ?' என யான் வேண்டி நின்றேன். முனிவர் 'விருப்ப மிருப்பின் இப்போதே வரலாம்' என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டார். யானும் அவரைத் தொடர்ந்து சென்றேன். இருவரும் விமானத்திலேறி அமர்ந்ததும் கண்மூடித் திறக்கும் நேரத்திற்குள் விமானமானது ஆகாயத்தை யளாவிய ஒரு பிரமாண்டமான மலையின்மேல் தங்கிற்று. நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்துத் திகைக்கலுற்றேன். நாங்கள் சென்றது இராக்காலமாயிருந்தும் அங்கு இருளின் இத்தியந்தா பாவத்தையே கண்டேன். பார்த்த விடமெங்கும் பேரொளியே திகழ்ந்தது. தவிர யான் இதுவரை கண்டிராத பல அழகிய அற்புதமான மரங்களையும், மிருகங்களையும், பக்ஷிகளையும் கண்டேன்.

## கந்தமாதனச் சேலவுப் படலம்.

இருபக்கங்களிலும் வானமளாவிய மரங்கள் சூழ்ந்த பாதை ஒன்று தென்பட்டது. அதன் அகலம் சுமார் நாலு பர்லாங்கு இருக்கலாமென உத்தேசிக்கிறேன். பல கைகளையும், பல தலைகளையும், சிறகுகளையும் உடைய ஆண் மக்களும் பெண் மக்களுமாகத் திரள்திரளாக அப்பாதையினூடே வருவதும் போவதுமாக இருந்தார்கள். யான் இவற்றை யெல்லாம் உற்றுப் பார்த்த வண்ணமாகவே இருந்தேன். முனிவர் என்னை முதுகில் தட்டி, 'குழந்தாய், எழுந்திரு போகலாம். அதோ பொன் சிகரத்தோடு விளங்கும் மலைதான் சர்வேச்சுரன் எழுந்தருளியுள்ள கைலையங்கிரி. இதோ எதிரிலுள்ளது தான் நாம் போகும் கந்தமாதனம். இப்பாதையில் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருப்பவர்கள் தேவர்கள். காளகண்டப் பெருமான் தரிசனார்த்தம் வந்தவர்கள். இது தான் கற்பக விருக்ஷம். அடுத்தாற்போலிருப்பது பாரிஜாதம் அதுவே மாந்தாரம்' என்று சொல்லிக் கொண்டே விமானத்தை விட்டு இறங்கினர். யானும் இறங்கினேன். 'சூர் முதல் தடிந்த சுப்பிரமணியக் கடவுள் எழுந்தருளியுள்ள திருக்கோயிலுக்குச் செல்லுகிறபடியால் வாயில் வரையில் விமானத்தில் செல்லுதல் கூடாது. இங்கிருந்து காலால் நடந்து செல்வதே தகுதி' என்று சொல்லி வழியிலுள்ள அநேக தெய்வீக அற்புதங்களை யெல்லாம் காட்டிக்கொண்டே சென்றார். பார்த்தவிட மெங்கும் பகரொணாத அற்புதங்களாகவே விளங்கியதால் ஆனந்தமாத்திரமே பிராப்தியானதை உணர்ந்தேனே யொழிய, துக்கமென்பது இதற்கு முன்னர்கூட இருந்ததாகத் தோன்றவில்லை.

கடைசியாக ஒரு பெரிய வாயிலை அடைந்தோம். வாயிற் காப்பாளர் முநீந்திரரை வணங்கிப் 'போகலாம்' என்றார்கள். வாயிலைக் கடந்து கொஞ்ச தூரம் சென்றதும் நாரதர், 'தம்பி! இதோ தெரிகிறது பார் ஆண்டவர் கொலுவீற்றிருக்கும் மண்டபம். என் பின்னுகவே வா. தைரியமா யிரு. இங்கு யாரும் பயப்படவேண்டிய தில்லை. உண்மை உணராத அறிவிலிகளே எதைக் கண்டாலும் பயப்படுவார்கள். அறியாமைதான் பாவச் செய்கைகளுக்கெல்லாம் காரணம். நாம் அத்தகைய அஞ்ஞானத்தை அறவே ஒழித்துப் பரஞானம் எய்திச் சிதாகாசமாகிய தன்னேடு இரண்டறக் கலந்து என்றும் இறுதியில் இன்ப முற்றிருக்க வேண்டுமென்னும் பெருங்கருணைகொண்டு ஐம்பெருந்தொழில் ஏற்று நமக்கு அநுகரண புவன போகாதிகளைத் தந்தருளியுள்ள இறைவனிடத்து நாம் நன்றியுள்ளவர்களாகவும் வணக்க முள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். பேரருட் பிழம்பே இங்கு எழுந்தருளி யுள்ளது' என்று என்னை உற்சாகப் படுத்திக் கொண்டே சென்றார்.

ஆங்காங்குள்ள காப்பாளர்கள் எங்களைக் கண்டு 'வாருங்கள், வாருங்கள்' என அதி உபசார வார்த்தைகள் கூறி ஆண்டவர் கொலு மண்டபத்திற்குப் போகவிட்டார்கள். செல்லச்செல்ல எனக்கு மனவெழுச்சியும், ஆனந்தமும் மேலிட்டுக் கொண்டே வந்தன. முனிவர்பின்னுல் சென்ற யான் தலைவாயில் முதல் ஒவ்வொரு வாயில் தோறும் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிக் கொண்டே சென்றேன். சந்நிதானம் சமீபிக்கச் சமீபிக்க என்மனம் மூன்னையினும் பூரிப்படைந்து கொண்டே வந்தது. கொலுமண்டபத்தில் பிரவேசித்த உடனே 'அரோகர முருகா' என்று சொல்லி முனிவர் சிரமேல் கை கூப்பி நின்றார். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். பின்னர் நடந்த எதையும் நான் அறிந்திலேன். என்னை அடியோடு மறந்து விட்டேன். இடையருத பேரானந்த மாத்திரமாகவே இருந்தேன். அம்மண்டபத்தின் வனப்பையும், அங்கு வீற்றிருந்தோர் கண்கவரும் தோற்றத்தையும், சென்றடையாத இயற்கை அழகும். அருளும் திரண்டு உருவெடுத்தாற் போன்ற நமது இளம் பூரணப் பெருந்தகையின் திருமேனியின் அழகையும், என்மனிதக் கண்கள் பார்க்கச் சக்தி யுற்றலைகளாயும், எனது மனம் அவற்றைக் கிரகித்து உணர அற்றலற்ற தாயும் இருந்தன வென்றே கருதுகிறேன். அச்சமயம் யாரோ ஒருவர் என்னருகே வந்து என் முகத்தைத் துடைத்து, 'அப்பா!



# நிருபங்கள்

## நங்குல மணச்சிறப்பு.

அன்பர்களே! திருமணமென்பது ஒரு புருஷனும் பெண்ணும் ஓர்மையுடன் குடும்பகாரியத்தை நடத்துவதற்காகச் செய்யப்பெறுவது. அதனை நம் முன்னோர்கள் காலத்திற் கேற்றவாறுசெய்து வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதனை விரிக்கிற் பெருகுமெனக் கருதி சிற்சில குறிப்புகளை மாத்திரம் தெரிவிக்க விரும்புகிறேன்.

---

(338-வது பக்கத் தொடர்ச்சி)

எம்பெருமானைத் தரிசிக்க விரும்பிவந்து இங்கு நிற்பானேன்'' என்றார். அதன்பின்னரே எனக்கு ஒருவாறு உணர்ச்சியுண்டாயிற்று.

யான் ஆண்டவனை அணுகிக்கீழேவீழ்ந்து நமஸ்கரித்து எனக்குத் தோன்றியவாறெல்லாம் பாடினேன்; ஆனந்தக் கூத்தாடினேன்; வெற்றிவேலாயுதக் கடவுளின் பக்கலில் காம்பீரமான தோற்றத்தோடு, மலைகள் போன்ற புயங்களோடு வீற்றிருந்த மகா வீரர்களைப் பின்னர் தரிசித்து வணங்கி நின்றேன். எம் மறுமுகத்திறைவன், கலியுகத்திற் கைகண்ட தெய்வம், எம்மையாளுடைய ஏந்தல், மும்மலமாகச்சூராதியரைத்தடித்த ஞானமாம் வேலைத் தாங்கிய திருக்கரத்தோன், சேவற்கைக்கோ, என் தலைவன் என்மீது அருட்கடாக்ஷம் வைத்து ஆசீர்வதித்து ஓர்ஆசனத்தில் இருக்கப்பணித்தருளினர். யான் சற்று யோசித்தேன். அதுகண்ட குமரக் கடவுள் புன்னகை செய்து, "தம்பி! சர்வலோகங்களும் எம்மால் படைத்துக் காக்கப்பெறுகின்றன. சர்வ ஜீவராசிகளும் எமது குழந்தைகள். இருக்கலாம்" எனத் திருவாய் மலர்ந்தருளினர். இப்போது நமது முருகக்கடவுள் நம்மைத் தம்பி என்றழைத்தது அவரிடத்துச் சகோதரத்துவம் கொண்டாடும் நமக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது!! என்று எண்ணி மனம் பூரித்துத் தமையனாம் குழந்தைவேலனை வணங்கி உட்கார்ந்தேன். அங்கு யான் கண்டவையனைத்தையும் விபரமாகக் கூறவேனென்று எதிர்பார்ப்பீர்களானல் ஏமாற்றமடைவீர்கள். மனதிற்கும், வாக்கிற்கும் எட்டாதவற்றை யான் எவ்வாறுகூறுவேன். கூறியவரையில் மாத்திரமே கேட்டு நீங்கள் திருப்தியடையவேண்டும். அதற்குமேல் சொல்ல யானல்ல; நீங்களல்ல; மற்ற யாராயிருந்தாலும்,—என் இரண்டாயிரம் நாவைப்படைத்தவனென்று சொல்லப்படும் ஆதிசேஷனுயிருந்தாலும் இயலாது. பின்னர் நிகழ்ந்தவற்றை என்னால் கூடியவரையில் சொல்லுகிறேன் கேளுங்கள்.

அதாவது மணமக்களுக்கென்று அமைக்கப்பெற்ற பச்சைப் பந்தரில் மணவறைக் கெதிரில் ஆயிரம் பெருந்திரி விளக்கு, அரசாணி, அம்மி, சாலாணி, முளைப்பாழி என்னுமிவைகளை நிரம்ப வைத்து, மேள வாத்தியங்களுடன் மணமகளின் கழுத்தில் மணமகன் மாங்கல்யஞ் சூட்டியபின், அருகம் பொன் எடுத்தல், மணமக்கள் இருவரும் மணவறை சுற்றி, அம்மி மிதித்து, அரசாணி தொட்டு, அருந்ததி பார்த்தல் என்னும் இவைகளுக்குப் பின், மணமக்கள் கையிலணிந்துள்ள கங்கண மவிழ்க்கிறவரையில், ஆயிரப் பெருந்திரி விளக்கு எரியவேண்டுமென்றும், கூழ் விளையாடுதலென்றும், சாலாணிப் பானையில் சங்கு மோதிரமிட்டு மணமக்களை எடுக்கச் சொல்வதென்றும், முளைப்பாழியை மணமகள் சிரத்திற்றாங்கிக் கொண்டுபோய் கங்கையில் விடுவதென்றும், மூன்றாம் நாள் மஞ்சள் நீராடி அழைத்து விட்டால் கல்யாண காரியங்கள் முடிவுபெற்றன வென்றும், ஓர் நியதியை நம்மவர்கள் கைக் கொண்டொழுகுவது மங்களகரமாகிய சிறப்பென்பதில் தடையில்லை.

ஆயினும் இவ்வித ஆடம்பரக் கல்யாணத்தில் குறைந்தது ஐந்நூறு ரூபாயேனும் செலவாகும். இன்னும் மோட்டார், பிரமணை, பாண்டு வாத்தியம், பாணவேடிக்கை, முகூர்த்தப் பிரசுரம் என்னும் இவைகளையும் ஏற்படுத்திக் கொண்டால், ஆயிரக்கணக்கில் ரூபாய்களைச் செலவிட நேரிடும். இனி இதே விவாகத்தை ஏழைமக்கள் வீட்டிற்குள் வைத்துத் தாலி கட்டுதல் என்ற முறையில் ஐம்பது அறுபது ரூபாய்க்குள் முடித்து விடுகின்றனர். மற்றும் சில ஏழைகள் கோயில்களில் வைத்துத் தாலி கட்டுவதென்ற முறையில் முப்பது, நாற்பது ரூபாய்களில் முடித்து விடுகின்றனர். ஆனல் இவர்கள் நம் குல மக்களா யிருந்தபோதிலும், இவ்வித எழ்மைக் கல்யாணம் செய்கிறவர்களை டாம்பீகக் கல்யாணம் செய்யும் பிரபுக்கள் கவனிப்பதுமில்லை. வணங்கிக் கூப்பிட்டாலும் போவதுமில்லை. இதனுல் சிலர் பணக்காரர் பெருமையைப் பாராட்டுதல் வேண்டிக கையில் பணமில்லாவிடினும், நானூறு, ஐந்நூறு கடன் பட்டேனும் ஆடம்பரக் கல்யாணத்தைச் செய்கின்றனர். அக்கடனை மணமக்கள் தங்கள் ஆயுள் காலம் வரையில் கொடுக்கவேண்டி யிருக்கிறது. கொடுக்கச் சக்தியற்றவர்கள் கண்டி கதிர்காமங்களுக்கேனும் போய்விடுகின்றனர். இன்னுஞ் சிலர் சொற்ப தொகையில் கைத்தொழிலோ வியாபாரமோ செய்து வருவதைக் கல்யாணத்தில் செலவிட்டுக் கூலிக்கு வேலைசெய்ய வந்துவிடுகின்றனர். இவர்க

ளெல்லாம் நம்மினத்தவர்களென்பதிற் சந்தேகிக்க வேண்டியதில்லை. இவ்விருவகைக் கல்யாண முறைகளுள் எது சிறந்தது என்று அன்பர்கள் உய்த்துணர விரும்புகிறேன்.

மேலும் இதில் நாவிதன் மங்களம் பாடுதல், உரிமைக் காரியாகிய பெண் தாலி கட்டுதல், தாய் மாமன் பெண்ணெடுத்தல், கல்யாணமாகும்வரை தாடி வளர்த்தல், வேற்று மதத்தினரைக்கொண்டு ஓமாதி ஜெபம் முடித்தல், விதவா விவாகத்தை நீக்கி வைத்தல் முதலிய கொள்கைகள் பரவி நிற்கின்றன. நங்குல மக்களுக் கென்றுதான் தோன்றி நிகழ்கின்றனவோ இவ்வளவும் தெரியவில்லை.

அன்பர்களே! ஒரு ஊரில் ஏழை மக்கள் பசியால் சுருண்டு படுத்தால், அப்பாவம் பணக்காரப் பிரபுக்களைத் தான் சேரும். படிக்காத மக்கள் செய்த பாவம் படித்தவர்களைத் தான் சேரும். ஆனபடியால் பணக்காரர்கள் ஏழைகளை ஆதரிக்க முன் வரவேண்டும். படித்தவர்கள் படியாத மக்கள் பாவத்தொழிலிற் செல்லாதபடி அறிவுறுத்த முன் வரவேண்டும். மற்றவர்களும் இதற்கிணங்கி நடத்தல் வேண்டும். இதுவே நாம் நடந்துகொள்ள வேண்டிய இயற்கை முறையாகும்.

### குலப்பெயர்கள்.

இதல்லாமல் நம்மவர்களுக்குக்கிடைத்த பதினொருபேரினையும் அறிவிக்க விரும்புகிறேன்:—

அதாவது, முதன்மையான இறைவன் சந்ததிகளாகையால் முதலியாரென்றும், குமரனுக்கு இளையோராகையால் குமாரானுஜரென்றும், உமையம்மையார் அளிக்கப்பெற்ற செவ்விய குந்த மேற்றதினால் செங்குந்தரென்றும், போர்க்களத்தில் ஜெயம் பெற்றமையால் வீரரென்றும், சேனைகளுக்குத் தலைவரானதால் சேனைத்தலைவரென்றும், செங்கோல் பிடித்து அரசுரிமை நடத்தியதால் கைக்கோளரென்றும், நாடுகளை வகுத்து நியாதிபதித்துவங்களை நடத்தியதால் நாட்டார்களென்றும், சாமபேததானதண்ட மென்னும் சதுர்வித உபாயத்தினால் மந்திரிஸ்தானம் வகுத்தமையினால் அமைச்சரென்றும், நமது கூத்தர்பிரான் இயற்றியருளிய ஈட்டி யெழுபதென்னும் தெய்வீகப்பிரபந்தத்திற்கு ஆயிரத்தெட்டு தலையறுத்துச் சிரச்சிம்மாசனமியற்றியதால் சிரச்சிம்மாசனாதிபதிகளென்றும், நாட்டாண்மை காரியமென்ற பட்டம் பரிவட்டம் பெற்றமையால் பட்டவர்த்தனர்களென்றும், நெய்யுந் தொழில் ஏற்றதினால் காருகரென்றும், பதினொருபேர்கள் கிடைத்திருக்கின்றனர். இவற்றையெல்லாம் நமது முன்னோர்கள் தேடிவைத்த திரவியமா அல்லது தற்கால நிலையில் நாமே தேடிக் கொண்டோமாவென்று கவனித்தால், இதில் ஒரு சிறிதேனுங்கூட நாம் தேடினதாகத் தெரியவில்லை. ஏன்? கல்வியின்மையாலும், கட்சிப் பிரதிகட்சியாலும், அறிவுடையோர் புகட்டும் நன் மொழிகளையேற்காததினாலும், இன்னும் பல துர்க்கிருத்தியங்களினாலும் சூழப்பட்டு அவற்றில் ஆழ்ந்து கிடப்பதினால் மேலே கூறியவற்றை அறிவதற்கும், அதன்படி நடந்து கொள்வதற்கும், சக்தி யேற்படவில்லை யென்பதே உண்மையாகும்.

அன்பர்களே! இதனை யெல்லாங் கண்ணுற்ற அறிவிற் சிறந்த அறிஞர்கள் பலரால் சென்னையில் ஸ்தாபிக்கப் பெற்ற தலைச்சங்க முயற்சியால் ஈரோட்டில் கூடிய முதல் மகா நாட்டின்கண் பல்லாயிரஞ் ஜனங்கள் முன்னிலையில் அநேகந் தீர்மானங்களைச் சீர்பெறச் செய்திருக்கின்றனர். அத்தகைய தீர்மானங்களைத்தான் இளஞ்சூரியனுக்கொப்பாகிய மித்திரன் அழகிய கட்டுரைகளால் மாதந்தோறும் வரைந்து நமக்கறிவூட்டுகின்றான். இத்தகைய தீர்மானச் சீர்திருத்தங்களை நாம் ஏற்று அதின்படி நடந்துகொள்வதாலேயே நங்குலத்திற்குற்ற பெருமைக்கும் மற்ற செல்வச் சிறப்பிற்கும் பாத்தியப் பட்டவர்களாவோம். இல்லையேல், 'நெய்யுந் தொழிலைவிட்டு நினைவெடுத்தான் கைக்கொள்வன்' 'அல்லது நெய்யுந் தொழிலை யேற்ற கைக்கொள்வன்' என்ற அருத்தமற்ற வாக்கியத்தால், இன்னும் இதைப்போன்ற இழிச்சொற்களால், தாழ்த்தப்பட்டும் தூற்றப்பட்டும் வாழவேண்டிய நிலையில் வந்துவிடுமென்பதைச் செங்குந்த ரத்தம் பரவப்பெற்ற ஒவ்வொருவரும் அவரவர் உள்ளத்தில் ஊன்றி கவனிக்க விரும்புகிறேன். மேலும் விரிஞ்சிபுர நாட்டிற்குக் கிளை நாடாகிய பவானிக்காரரும், திருச்செங்கோட்டுக்காரரும் ஒருமையுடன் சீர்சிறப்பை நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

### 'கைக்கோளரென்பதின் அருத்தம்.

'வீரவாகு' என்ற பதத்தில் 'வாகு' யென்பது 'கை' யெனவும் 'வீர' மென்பது 'கோ'ளெனவும் இவ்விருகூற்றுப் புணர்த்திய தொடர் மொழியால் அர் என்னும் உயர்திணைபன்மை பலர்பால் விகுதி சேரக்கைக்கோளரென்னும் பெயரையுடையவரே செங்குந்த குலத்தவரென்றும் நூல்களில் கூறப்பட்டுள்ளன.

ப. அங்கமுத்து முதலியார்,
சிகிச்சாஞான பண்டிதர், சத்திய மங்கலம்.

---

## மலேயா நாடு

### மலேயா செங்குந்த வாசிகளின் அனுதாபம்.

சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க நிர்வாகசபை, உபத் தலைவரும், சமீபத்தில் ஈரோட்டில் நடந்த செங்குந்த வர்த்தக மகாநாட்டின் வரவேற்பு கமிட்டித் தலைவரும், அநேக ஸ்தல ஸ்தாபன சபைகளின் தலைவராகவும், அங்கத்தினர்களாகவும், தேசச் சேவை, தெய்வச் சேவை யென யுன்னி தம் உடல், பொருள், ஆவி, மூன்றையும் உவந்து அர்ப்பணம் செய்து அன்புப் பணி பூண்டவருமாகிய திருச்செங்கோடு திருவாளர் T. R. கந்தப்ப முதலியார் அவர்கள், இம்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகேகினா ரென்பதை அறிந்த மலேயா செங்குந்தர்களாகிய நாங்கள் மனமிக வருந்தி எங்கள் அனுதாபத்தை அவர் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னவரின் ஆத்மா சாந்தி அடையுமாறு அறுமுகன் திருவருளை தியானிக்கின்றோம்.

**செங்குந்த குலவாசிகள், கோலாலம்பூர்.**



# செங்குந்தர் கிளர்ச்சி

## செங்கல்பட்டு ஜில்லா

### நாய்க்கன் பேட்டை

சென்ற 31-8-30உ காலை மணி 9-15-க்கு இவ்வாசக சாலையின் சார்பில் நாயக்கன் பேட்டை போர்டு பாடசாலையின்கண் திரு. N. P. தணிகைராயன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பித்தவுடன் அப்போர்டு பாடசாலையின் மாணவர்களாகிய, கச்சாலை முனியன், முத்துகிருஷ்ணன் என்னும் சிறுவர்களால் கடவுள் வணக்கம் இன்னிசையாகப் பாடப்பட்டது. பிறகு காரியதரிசி சென்ற மாதத்தின் நிகழ்ச்சிகளை வாசிக்கத் தலைவர் தமது முன்னுரையைப் பேசி முடித்தார்.

திரு. K. C. துரைசாமி என்பவரால் 'நட்பு' என்பதைப்பற்றி ஓர் உபந்யாசமும் திரு. N. C. இராஜமாணிக்கம் என்பவரால் 'உண்மை யறிதல்' என்பதைப்பற்றி ஒரு சொற்பொழிவும் கொடுக்கப்பட்டது. உடன் 'ஜீவகாருண்யம்' என்னும் விடயத்தைப்பற்றித் தலைவரது சகோதரரான திரு. N. V. துரைசாமி என்பவர் பேசினார். தலைவர் தமது முடிவுரையில் உபசுப்பிரமணியர் வாசகசாலையைப் பற்றியும் முன் பேசப்பட்ட விஷயங்களைப் பற்றியும் தெளிவாகப் பேசினார்.

அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள்நிறைவேறின

(1) தனது வீதியிலுள்ள அங்கத்தினரிடம் சந்தா முதலியன வசூல் செய்யும் பொருட்டு திரு. N. S. குருசாமி என்பவர் இவ்வாசக சாலைக்கு உபகாரியதரிசியாக இருக்குமாறு இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(2) பெரிய தெருவில் இரண்டு மாதங்களுக்கு முன்னதாக ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிற உபசுப்பிரமணியர் வாசகசாலையைத் தணிகைவேலர் வாசகசாலையோடு சேர்த்துக் கொள்ளவேண்டியது.

(3) சேர்க்கப்பட்ட வாசகசாலையின் கணக்குகளையும் புத்தகங்களையும் தணிகைவேலர் வாசகசாலையின் தலைவரிடத்து ஒப்பித்து அங்குத் தருவித்து வரும் பத்திரிகைகளும் இவ்வாசகசாலைக்குத் திரும்பிவிடவேண்டு மென்றும் இக்கூட்டம் ஏகமனதாய்த் தீர்மனித்தது.

பிறகு மணி 12-45-க்குத் தலைவரவர்கட்கு வந்தனோபசாரங் கூறப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

N. P. தணிகைராயன், தலைவன்.
K. C. துரைசாமி, காரியதரிசி.

### வடதிருநாகேஸ்வர செங்குந்த வாலிபர் சங்கம்

6-7-30உ மாலை 5-மணிக்குத் திரு. ஆ. தக்ஷிணாமூர்த்தி முதலியார் அவர்கள் தலைமையில் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று கூடிற்று. அச்சமயம் திருவாளர்கள் T. M. முருகேசமுதலியார், மா. மு. உருத்திரகோட்டி முதலியார், ஆ. தேவராஜ முதலியார், ஆகிய அறிஞர்கள் முறையே 'சங்கத்தின் பயன்', 'வாலிபர் கடமை', 'சிக்கனம்', 'கல்வி 'கைத்தொழில்', என்பனபற்றிச் சொற் பெருக்காற்றினார்கள். இடையிடையே திரு. க. மு. துரைசாமி முதலியார் அவர்களால் தேவார பாராயணம் நடைபெற்றது.

இதுவரையில் திரு. ஆ. தக்ஷிணாமூர்த்தி முதலியார் அவர்கள் இல்லத்தில் நடைபெற்று வந்த இரவு பாடசாலை இவ்வூர் தாலுக்காபோர்டு பாடசாலைக்கு யூனியன் சேர்மன் திரு. உசேன்மியா சாயபு அவர்கள் முன்னிலையிலும் ஹெல்த் ஆபீசர் அவர்கள் முன்னிலையிலும் கொண்டுபோய்ச் சேர்க்கப்பெற்றது. அச்சமயம் ஹெல்த் ஆபீசர் இனி பள்ளிக்கூடத்தை நடத்தவேண்டிய முறையையும் சுகாதாரத்தைப் பற்றியும் விளக்கிக் கூறினார். யூனியன் சேர்மன் அவர்கள் சில நன்மொழிகள் கூறினார். திரு தி. கு. தெய்வசிகாமணி முதலியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெறக் கூட்டம் 8-30-மணிக்கு இனிது கலைந்தது.

சென்ற வைகாசி ஸ்ரீ 19உ திரு. கை. ஆறுமுக முதலியார் குமாரர் திரு. சண்முக முதலியாருக்கு நடந்த திருமணத்தில் இச்சங்கத்திற்கு ரூபாய் 5. நன்கொடையாக அளிக்கப்பெற்றது.

T. M. முருகேச முதலியார், காரியதரிசி.
ம. மு. ருத்திரகோடி முதலியார்,
உதவிக்காரியதரிசி.

---

## வட ஆற்காடு ஜில்லா

### கலவை ஸ்ரீ சுந்தர விநாயகர் செங்குந்தர் சங்கம்.

30-7-30உ மாலை 6 மணிக்குச் செங்குந்தர் மேட்டுத் தெருவில் திரு. அ. சு. சின்னசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய இரண்டாவது பொதுக்கூட்டத்தில் திருவாளர்கள் தா. பரசுராம முதலியாரும், பாலசுந்தர முதலியாரும் முறையே 'ஒற்றுமையினால் உண்டாகும் உயர்வு', 'பொறாமையால் உண்டாகும் பொல்லாங்கு' என்பவை பற்றி விரிவுரை செய்தார்கள்.

### பின் நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) நம்மூரில் நடக்கும் ஒவ்வொரு திருமணத்திற்கும் ரூபா 0-8-0 வீதமும், சீமந்த முகூர்த்தத்திற்கும், புஷ்பணி முகூர்த்தத்திற்கும் முறையே ரூபா 0-4-0 வீதமும், சங்கத்திற்கு நன்கொடை கொடுக்கும்படி ஏகமனதாய்த் தீர்மானிக்கிறது.

(2) ஷை முகூர்த்தங்களில் வரும் தொகையில் ஒரு பாதியைத் தலைச் சங்கத்திற்கும் தரத் தீர்மானிக்கிறது.

பிறகு தலைவர் முடிவுரை கூற வந்தனோபசாரத்துடன் இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

A. முனிசாமி
S. அருணகிரி
*காரியதரிசிகள்.*

---

## கோயமுத்தூர் ஜில்லா,

### பொள்ளாச்சி தாலுக்கா செங்குந்தர் சங்கம்.

இச்சங்கத்தின் 7-வது கூட்டம் (27-7-30) திரு. கப்பல் குப்பண்ண முதலியார் அவர்கள் கட்டடத்தில் மாலை சுமார் 3-மணிக்குத் திரு. சா. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிற்று. அச்சமயம் கோதவாடியிலிருந்து அநேக செங்குந்தர்கள் வந்திருந்தனர். கடவுள் வணக்கமும் முடிந்து தலைவர் முன்னுரையில் செங்குந்தர் வாசகசாலை விஷயமாய்ப் பேசி முடிந்து, திரு. T. மயிலானந்தம் பிள்ளை உபாத்தியாயர், திரு. S. காளியண்ணன், திரு. நா நாகப்பமுதலியார், திரு.ப. குமாரசாமி முதலியார் இவர்கள் 'ஆரம்பக் கல்வி' 'சிறுவர்கள் சுருட்டுக் குடிப்பதாலுண்டாகும் தீங்குகள்.' 'சூது' 'கைத்தொழில்' என்பன பற்றி முறையே உபன்னியாசஞ் செய்தனர். தலைவர் முடிவுரையில் திருவாளர்கள். நா. ப. அங்கப்ப முதலியார் அவர்கள், ப. வெள்ளையண்ண முதலியார் அவர்கள், அ. அங்கப்ப முதலியார் அவர்கள், அ. நாராயண முதலியார் அவர்கள் இவர்களிடம் ஸ்ரீ காமாக்ஷியம்மன் பொதுப்பணமிருக்க, கோயில் கட்டச் சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நாளையத்தினமே ஒரு பொதுக்கூட்டம் போடவேண்டும் என்று கூறினர். கடவுள் வணக்கத்துடன் சபை இனிது கலைந்தது. மறுநாள் இரவு கூட்டத்தில் நால்வரும் ஆவணி மாதம் முதல்கொண்டு கோயில் வேலை ஆரம்பஞ்செய்வதாய் முடிவு சொன்னதின்மேல் கூட்டம் இனிது கலைந்தது.

உபாத்தியாயர். நே. பழனியப்ப முதலியார்,
*காரியதரிசி.*

### மருதூர் செங்குந்தர் சங்கம்.

20-7-30-ந் தேதியன்று செங்குந்தர் சங்கமானது பெரியதனக்காரர் இல்லத்தில் நடைபெற்றது. அவ்வமயம் வடவழி செங்குந்தர் நன்னெறிக் கழகத்தின் காரியதரிசி திரு. V. S. இராமசாமி முதலியார் அவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்ட பின்னர், பெரியதனக்காரர் திரு. இராமசாமி முதலியார் அவர்கள் அவைத்தலைமை வகித்தார். வடவழி போர்டு பாடசாலையின் ஆசிரியரும் பிள்ளையார் நன்னெறிக் கழகத்தின் காரியதரிசியுமான திரு. V. P. மருதப்ப முதலியார் அவர்கள் 'நமது முன்னேற்றம்' என்பது பற்றி நீண்டதோர் பிரசங்கம் செய்தார். அதை யொட்டியே திரு. V. S. இராமசாமி முதலியாரும் சொற்பொழிவு நிகழ்த்தினர். ஷையார் இருவர்களுடைய கருத்துக்களாவன! நமது மரபிலும் திருமணங்களிலும் நடக்கும் மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்தல், ஒற்றுமைத் திருமணம் செய்தல், ஆண் பெண் இருபாலாருக்கும் கல்வியைக் கண்டிப்பாகப் புகட்டல், நமக்குள்ளிருக்கும் கட்சிப் பிரதிகட்சிகளை ஒழித்தல், மதுமாமிசங்களை அறவே ஒழித்தல், நமது மித்திரனை யாவரும் ஆதரித்தல், கல்யாணங்களிலும் மற்ற சுப காரியங்களிலும் நமது தலைச் சங்கத்தில் நடைபெறும் ஏழை மாணவர்கள் நன்கொடைக்கு நன்கொடையளித்தல், ஒற்றுமையாயும் ஒழுக்கத்துடனும் இருத்தல். தீர்மானம்:-தாலுக்கா போர்டு பாடசாலை ஒன்று ஏற்படுத்தச் சென்னைச் செங்குந்த மகாஜன சங்கத்தினர் மகா-ள-ள-ஸ்ரீ கோவை தாலுக்கா போர்டு தலைவருக்குச் சிபாரிசு செய்ய வேண்டுமென்று இச்சங்கமானது கேட்டுக் கொள்ளுகிறது.

பெரியண்ண முதலியார், *காரியதரிசி.*

### செங்குந்தர் நன்னெறிககழகம்,
### மருதவரைநீழல், வடவழி.

9-8-30 ந் தேதியன்று செங்குந்தர் நன்னெறிக் கழகமானது திரு K. அங்கண்ண முதலியார் அவர்கள் இல்லத்தில் கூடியது. கடவுள் வாழ்த்து சிரஞ்சீவி M. அங்கண்ணன் என்னும் மாணவனால் பாடப்பட்டது. அவ்வமயம் பெரியதனக்காரர் திரு. அய்யாவு முதலியார் அவர்கள் அன்புடன் அவைத் தலைமை வகித்தார். 'நமது முன்னேற்றம்' என்பது பற்றி நமது மித்திரன் உதவி ஆசிரியர் திரு. பி. செ. மாணிக்கவாசகமுதலியார் அவர்கள் சுமார் 1½-மணி நேரம் சொற்பொழிவாற்றினர். பிறகு திரு. V. K. M. அப்பா அவர்கள் அதை யொட்டிப் பேசினர். சங்கக் காரியதரிசியால் யாவருக்கும் வந்தனமளிக்கப்பட்டுச் சபை இனிதே கலைந்தது.

V. P. மருதப்பா, *காரியதரிசி.*

---

## திருச்சி ஜில்லா

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்.

18-8-1930ல் மாலை 5-மணிக்கு உன்னியூர் செங்குந்தர் சங்கம் போர்டு பாடசாலையில், திரு. R. மாணிக்க முதலியாரவர்களது தலைமையில் கூடியது. திருச்செங்கோடு ஸ்ரீமான் T. R. கந்தப்பமுதலியாரவர்கள் இறந்தமைகுறித்து தலைவரவர்களாலும், காரியதரிசியாலும், திரு. கு. பெ. கந்தசாமிமுதலியார் திரு ப. க. வீரப்ப முதலியாரவர்களாலும் ஸ்ரீமான் முதலியார் பொதுவாய்ச் தேச நன்மைக்கும் சிறப்பாய்ச் செங்குந்தமக்களுக்கும், இயற்றிவந்த தொண்டைப்பற்றியும், நமது முதல் மஹாநாடு சிறப்புற நடந்த பெருமைக்காரணம் ஸ்ரீமான் முதலியாரவர்களது ஊக்கமும், குலாபிமானமுமேதான் என்றும், முதலியாரவர்களது பெருமையையும் அவரது வாழ்க்கையையும் விரிவாய் எடுத்துக்கூறிய பின்னர் மரியாதைக்காக எல்லாமெம்பர்களும் எழுந்து நின்று கடவுள் ஸ்துதியுடன் அடியிற்கண்ட தீர்மானம் ஒன்று நிறைவேறியதும் சில முக்கிய விஷ



யங்கள் முதலியாரவர்கள் இறந்த துக்கத்தின் காரணமாய் அடுத்த மீட்டிங்கிற்கு ஒத்திவைக்கப்பட்டன.

### நிறைவேறிய தீர்மானம்.

தென்னிந்திய செங்குந்த மாஹாஜன சங்க உபதலைவரும், சேலம் ஜில்லா ஸ்தல ஸ்தாபனங்களிலெல்லாம் முக்கிய அங்கத்தினருள் ஒருவரும், பொதுஜன சேவையே தமது கடனென உழைத்து வந்தவரும் திருச்செங்கோடு பஞ்சாயத்துக் கோர்ட் தலைவரும், மிராஸ்தாரருமான திருச்செங்கோடு ஸ்ரீமான் T. R. கந்தப்ப முதலியார் அவர்கள் இறந்தமைக்கு இச்சங்கம் ஆற்றொணாத் துக்கமடைவதோடு, அவரது மரணத்தினால் செங்குந்த வுலகம் ஒருமாபெரும் குலாபிமானியையும், தலைவரையும் இழந்ததை உன்னி, மனம் மிகவுடைந்து, காலஞ்சென்ற முதலியாரவர்களின் குடும்பத்தினருக்கு இச்சங்கம் மிக்க அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறது.

இத்தீர்மானம் நிறைவேறியதும் கடவுள் வாழ்த்துடன் இரவு 7-மணிக்குக் கூட்டம் இனிது கலைவுபெற்றது.

P. Mariappa Mudaliar, Secretary.

---

## மதுரை ஜில்லா

### செங்குந்த இளைஞர் சங்கம், மதுரை

நாளது 18-8-30 ல் திங்களன்று இரவு 8 மணிக்கு எழுகடல் தெரு மகமைக்கடையில் திரு. அ. ம. ப. மலையாண்டி முதலியாரவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அப்பொழுது சமீபத்தில் காலஞ்சென்ற திருச்செங்கோடு பிரபல வர்த்தகரும் செங்குந்தத் தலைவர்களிலொருவருமான உயர் திரு டி. ஆர். கந்தப்ப முதலியாரவர்களின் எதிர்பாராத மரணத்திற்கு இச்சங்கத்தினர் ஆற்றொணாத் துயருறுவதுடன் அப்பெரியாரின் ஆன்மா சாந்தி யடையுமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றது என்னும் தீர்மானத்தைத் தலைவரவர்கள் பிரேரேபிக்க, யாவரும் எழுந்து நிற்கத் தீர்மானம் நிறைவேறியது.

பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

V. வீராத்திரன், *காரியதரிசி.*

---

## இராமநாதபுரம் ஜில்லா

### மண்டல மாணிக்கம்

### 2-வதுஹு 2-வது மாதக் கூட்டம்.

3-8-30 ல் இரவு 9-மணிக்கு இச்சங்கத்தின் இரண்டாம் வருஷத்திய 2-வது கூட்டம் ஸ்ரீமான் மு. ஆ. பாதம்பிரியா முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. திரு. ஞா. சு. மு. பாதம்பிரியா முதலியார் அவர்கள் கடவுள் வாழ்த்துக் கூறினார்கள். தலைவர் முன்னுரைக்குப் பின் சென்ற கூட்டத்தின் நடவடிக்கை வாசித்து அங்கீகரிக்கப்பெற்றது. பின்னர் திரு. இ. முனியப்ப முதலியார் அவர்களால் தயாரிக்கப் பெற்ற சங்கத்தின் சட்ட திட்டங்கள் வாசித்துக் காட்டப்பட்டன. பின்னர் உபதலைவர் ஸ்ரீமான் நா. சு. கு. நாகசுந்தர முதலியார் கொண்டுவந்த சில தீர்மானங்களும் பிறவும் ஏகமனதாய் அங்கீகரிக்கப் பெற்றன. வந்தனோபசாரத்துடன் இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### தீர்மானங்கள்

1. இச்சங்கம் தலைச்சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வருஷாந்தரக் கட்டணத்திற்காக வழக்கப்படி ரூபாய் 10-அனுப்பிவர வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

2. காரியதரிசியவர்களால் தயாரிக்கப் பெற்றுள்ள சட்ட திட்டங்களை ஒப்புக்கொண்டு அவற்றின்படி எல்லா மெம்பர்களும் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

3. நமது சங்கத்தின் வருஷோற்சவத்தில் புத்தகசாலை திறந்து வைத்த ஸ்ரீமான் கூடகுளம் சுப்பையா பிள்ளையவர்கள் செய்த 'கல்வியின் முன்னேற்றம்' என்னும் உபந்யாசம் மிகவும் அருமையாக விருப்பதால் அதைச் சங்கத்தின்போரால் அச்சிட்டு யாவருக்கும் உதவவேண்டும் என்றும், தற்போது அதற்குப் போதிய பொருள் சங்கத்திலில்லை எனச் சில நண்பர்கள் தாவா செய்வதால் தலைவர் உபதலைவர்களின் ஆதரவில் அதைப் பிரசுரிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

4. இச்சங்கத்தின் மேல் மிக்க ஆர்வமுள்ள அருப்புக்கோட்டை பிரபல நூல் வியாபாரம் உயர் திரு. சி. நா. வ. மு. மு. வ. முனிசாமி நாயுடு அவர்கள் ஷை பிரசுரத்திற்காக ரூபாய் ஐந்து நன்கொடை உதவியதை வந்தனத்தோடு ஏற்றுக் கொண்டு அன்னார் பொதுஜன சேவையிலும், கல்வி முன்னேற்றத்திலும் கொண்டுள்ள ஊக்கத்தைப் பெரிதும் பாராட்டுகிறது.

5. இச்சங்கத்தின் பேரபிமானியாகிய திரு. கதிர்வாழவந்த பண்டாரத்திற்கும் திருமிகு கோமதியம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் இச்சங்கத்திற்கு நன்கொடையாக உதவிய ரூபா ஐந்தையும், இவ்வூர் திரு. அ. பூ. முனியப்ப முதலியாருக்கும் திருமிகு முனியம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் உதவிய நன்கொடை ரூபாய் ஒன்றையும் ஏற்றுக்கொண்டு ஷை மணமக்கள் நீடூழி வாழ்ந்து சகல சம்பத்து மெய்துமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறது.

6. நமது குலத்தலைவருள் ஒருவரும், நமது தலைச்சங்கத்து உபதலைவரும், ஜில்லா, தாலுக்கா, யூனியன் முதலிய பல ஸ்தாபனங்களில் மெம்பர் பதவியும் தலைவர் பதவியும்வகித்து பொதுஜன சேவை ஆற்றிவந்தவருமாகிய T. R. கந்தப்ப முதலியார் அவர்கள் விண்ணுலகெய்தியதற்காக இச்சங்கம் மிக வருந்துவதுடன் அவர்கள் குடும்பத்தா

ருக்கு அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

7. நமது குலதீபமாகிய கூத்தர்பிரான் திருநாளை அடுத்த ஆவணிமீ கொண்டாட வேண்டுமென்றும் அவ்வமயம் கூடகுளம் ஸ்ரீமான் சுப்பையா பிள்ளையவர்கள் உபந்யாசப் பிரசுரம் யாவருக்கும் வினியோகிக்கப் பெறல் வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

இ. முனியப்ப முதலியார்,
காரியதரிசி.

15889 15891

## 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

பிரமோதூதஸு புரட்டாசிமீ (1930ஸு செப்டம்பர்மீ—அக்டோபர்மீ)

தக்ஷிணாயனம், வருஷரிது.

| இங்கி | தமி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | வாக்கிய சிரார்த்த திதி | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | புத | நவ 15-13 | தி 20-5 | சி 60 | 1 | ½ | தச | தெமே | |
| 18 | 2 | வியா | தச 9-13 | பு 15-48 | அமி 60 | 1 | ½ | ஏகா | தெற்கு | |
| 19 | 3 | வெ | ஏகா 2-0<br>துவா 53-53 | பூ 10-20 | ம 60 | 1 | ½ | துவா | மேற்கு | |
| 20 | 4 | சனி | திர 45-20 | ஆ 4-8<br>ம 57-23 | ம 4-8 அ | 0 | ½ | திர | வடகிழ | |
| செப்டம்பர்மீ 21 | 5 | ஞா | சது 36-30 | பூ 50-33 | சி 50-33 அ | 0 | 0 | சது | ஆகாசம் | |
| 22 | 6 | திங் | அ● 27-58 | உத் 44-10 | சி 60 | 0 | 0 | அமா | பூமி | மாளய அமாவாசை |
| 23 | 7 | செ | பிர 20-5 | அ 38-33 | சி 60 | 0 | 0 | பிர | கிழக்கு | சந்திர தெரிசனம் |
| 24 | 8 | புத | துதி 13-25 | சித் 34-5 | சி 60 | 0 | ½ | துதி<br>திரி | வடக்கு | [நவராத்திரிஆரம்ப |
| 25 | 9 | வியா | திரி 8-3 | சு 31-8 | அ 31-8 சி | 0 | ½ | சது | தென்கி | |
| 26 | புரட்டாசிமீ 10 | வெ | சது 4-23 | விசா 30-0 | சி 60 | 1 | ½ | பஞ் | தெமே | |
| 27 | 11 | சனி | பஞ் 2-25 | அநு 30-45 | சி 60 | 1 | ½ | சஷ் | தெற்கு | |
| 28 | 12 | ஞா | சஷ் 2-40 | கே 33-23 | ம 33-23 அ | 1 | ½ | சப் | மேற்கு | |
| 29 | 13 | திங் | சப் 4-35 | மூ 37-35 | சி 37-35 ம | 1 | ½ | அஷ் | வடமே | |
| 30 | 14 | செ | அஷ் 8-15 | பூர 43-35 | சி 43-45 அ | 1 | ½ | நவ | வடகிழ | ஸரஸ்வதி பூஜை |
| 1 | 15 | புத | நவ 13-10 | உத் 50-23 | அ 50-23 சி | 2 | ½ | ... | ஆகாசம் | ஆயுதபூஜை சில |
| 2 | 16 | வியா | தச 18-55 | தி 57-48 | சி 60 | 2 | 0 | தச | பூமி | [விடங்களில் |
| 3 | பிரமோதூதஸு 17 | வெ | ஏகா 25-10 | அவி 60... | சி 60 | 2 | 1 | ஏகா | கிழக்கு | |
| 4 | 18 | சனி | துவா 31-13 | அ 5-13 | சி 5-13 அ | 2 | 1 | துவா | வடக்கு | |
| 5 | 19 | ஞா | திர 36-55 | ச 12-23 | சி 60 | 2 | 1 | திர | தெகிழ | |
| அக்டோபர்மீ 6 | 20 | திங் | சது 41-53 | பூர 18-53 | ம 18-53 சி | 2 | 1 | சது | தெமே | |
| 7 | 21 | செ | ○ 46-0 | உத் 24-43 | அ 24-43 சி | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 8 | 22 | புத | பிர 48-55 | ரேவ 29-25 | ம 60 | 2 | 1 | பிர | மேற்கு | |
| 9 | 23 | வியா | துதி 50-53 | அஸ் 33-10 | அ 33-10 சி | 2 | 1 | துதி | வடமே | |
| 10 | 24 | வெ | திரி 51-40 | பர 35-58 | சி 60 | 2 | 1 | திரி | வடகிழ | |
| 11 | 25 | சனி | சது 51-23 | கி※ 37-25 | அமி 60 | 2 | 1 | சது | ஆகாசம் | கிருத்திகை |
| 12 | 26 | ஞா | பஞ் 49-55 | ரோ 37-55 | சி 60 | 2 | 1 | பஞ் | பூமி | |
| 13 | 27 | திங் | சஷ் 47-23 | மிரு 37-18 | அ 37-13 சி | 2 | 0 | சஷ் | கிழக்கு | |
| 14 | 28 | செ | சப் 43-45 | திரு 35-33 | ம,35-33 சி | 2 | ½ | சப் | வடக்கு | |
| 15 | 29 | புத | அஷ் 39-5 | புன 32-48 | சி 60 | 1 | ½ | அஷ் | தெகிழ | |
| 16 | 30 | வியா | நவ 33-33 | பூச 29-8 | அ 29-8 சி | 1 | ½ | நவ | தெமே | |




## மின்சார ரசம்

சகல வியாதிகட்கும் தேவாம்ருதம் போன்றது.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.

**7 வருஷ பார்ச வாய்வு.**

* மின்சார ரசத்தை 2 நாள் சாப்பிட்டேன். எனக்கு 7 வருஷகாலமாய் இருந்த பார்சவாய்வு உபாதி சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிச்சுகமடைந்ததைப் பற்றி நான் சந்தோஷமடைந்தேன்.

N. S. ராமசாமி ரெட்டியார்,
ஹெட்மாஸ்டர்,
எம். கரட்டிப்பட்டி.
17-10-29.

**25 வருஷ க்ஷயம்.**

** ஒருவர் சுமார் 25 வருஷ காலமாய் க்ஷயம், பெரும் சுவாசம், அதிக இரும்பல், இரும்பும்போது ரத்தம் கட்டி கட்டியாக வருவதாக மிக்க பாதை பட்டுக்கொண்டிருந்தார். மின்சார ரசத்தைக் கொடுத்துப் பூர்ண சௌக்கியமாய்ச் சுகமாக இருக்கிறது.

கிருஷ்ணசாமி முதலியார்,
வியாபாரம், 38/78, பிடாரியார்கோவில் தெரு, சென்னை.
15-4-29.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத போக்கிஷம்.

ஒரேமுறை பரீக்ஷியுங்கள்.

கேட்லாக் இனாம்.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.

**மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்,**



## கற்பகத் தைலம்

குழந்தை வியாதிகட்கு அமிர்தம் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது.

பாக்கிங் தபால் செலவு உள்பட
ஒரு புட்டியின் விலை ரூபா 1—4—0.

3 புட்டி வாங்கினால் செலவின்றி அனுப்பப்படும். உபயோகிக்கும் முறை புட்டியின்மேல் காண்க.

முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கபடமாட்டா.

எல்லா வியாதிகட்கும் ஏற்ற மருந்துகள் கிடைக்கும்.

**ப. அங்கமுத்து முதலியார்,**
சிகிச்சாஞான பண்டிதர்,
கற்பக மெடிகல்ஹால், சத்தியமங்கலம்.
(1) கோயம்புத்தூர்.



## நமது தலைவர்களின் அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் ... | 1 | 4 | 0 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22-பேர் கொண்ட படம்) .... | 2 | 8 | 0 |
| ம. சண்முக சுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் .... | 1 | 8 | 0 |

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத்தெரு, சென்னை.

# "செங்குந்த மித்திரன்"

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்ற மடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சீரிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிரப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ. பை. | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு 0—2—6 |
| பினாங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிக்கா ,, | 2—0—0 | |

# "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு"

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது,' 'எழுப்பெழுபது', மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப்போருபது, திருக்கை வழக்கம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை. தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிக்கை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை, செங்குந்த சிலாக்கியர் மாலை, செங்குந்த வேற் பதிகம், செங்குந்த மரபு விளக்கம், சூறவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த துலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத்திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோ பயிண்டில் பொன் கிலிட் செய்தது. விலை ரூ. 2-8-0.
தபாற் கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்கும் இடம்:—

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
சேத்துப்பட்டு, சென்னை

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.